நாவலர்

பற்றி

கைலாசபதி

பேராசிரியர் க. கைலாசபதி

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவாயில்

ஆறுமுக நாவலரவர்கள் மறைந்து நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த நூறு வருடங்களில் நமது நாட்டிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் எண்ணரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. காலக்கறங்கு சூழன்று எத்தனையோ பொருள்களையும் பெயர்களையும் மேலது கீழாய்க் கீழது மேலாய் மாற்றியுள்ளது. வரலாற்றாராய்ச்சியும் விஞ்ஞான அடிப்படையில் வளர்ந்திருக்கிறது. ஆயினும் இலங்கை வரலாற்றிலே விரல்விட்டு எண்ணிவிட்க்கூடிய முக்கிய புருஷர்களில் ஒருவராகிய நல்லைநகர் நாவலர் விளங்குகிறார் என்ற கருத்து இந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில் இன்னும் கூடுதலாக உறுதி பெற்றுள்ளது. இதனால் நாவலர். ஆய்வுகளும் மதிப்பீடுகளும் நாளடைவிற் பல்கிப்பெருகியுள்ளன.

நாவலரின் வாழ்க்கையையும் பணிகளையும் வருணிக்கும் நூல்கள் ஏழத்தாழ இருபது இதுவரை எழுதப்பட்டிருக்கின்றன;ஏராளமான கட்டுரைகளும் கவிதைகளும் இயற்றப்பட்டிருக்கின்றன. இவற்றிற் பெரும்பாலான நாவலரவர்களின் சரித்திரத்தையும் அவர் ஆற்றிய சேவைகளையும் வெவ்வேறு அளவில் விவரிப்பன. ஆய்வு நூல்கள் அருந்தலாகவே உள்ளன. இச்சரித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர்
பற்றி
கைலாசபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பற்றி கைலாசபதி

பேராசிரியர் க.கைலாசபதி

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டு எண் : 196

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
- 361-1/2, டாம் வீதி, கொழும்பு-12, தொ.பே. 2421388, மின் அஞ்சல் : kumbh@sltnet.lk
- 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி, சென்னை - 600 026

நாவலர் பற்றி கைலாசபதி
- க. கைலாசபதி

பதிப்புரிமை © திருமதி ச. கைலாசபதி

பதிப்பு: 2005

அட்டை வடிவமைப்பு : கனவு நிலையம்

Published by **Kumaran Book House**
-361-1/2, DamStreet,Colombo-12, Tel. - 2421388, E.mail:kumbh@sltnet.lk
- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600026

Kailasapathy on Navalar
By K. Kailasapathy

Copyright © by Mrs. S.Kailasapathy

Edition : 2005

Cover Designe by: Dream Station

ISBN 955 - 9429 - 74- 4

All rights reserved. No part of this book may be reproduced, translated, stored in a retrieval system, or transmitted in any form or by means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without prior written permission from the Author or the Publisher.

பொருளடக்கம்

1.	நுழைவாயில்	01
2.	ஆறுமுக நாவலர்	12
3.	நாவலர் வகுத்த புதுப்பாதை	18
4.	நாவலரும் இந்துமத மறுமலர்ச்சியும்	28
5.	நாவல் அடிச்சுவட்டில் தேசியம்	34
6.	நாவலர் இலக்கிய நோக்கும் பணியும்	53
7.	ஆறுமுக நாவலரும், சபாபதி நாவலரும்	79
8.	பாரதியும் நாவலரும்	99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுழைவாயில்

ஆறுமுக நாவலரவர்கள் மறைந்து நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த நூறு வருடங்களில் நமது நாட்டிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் எண்ணரிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. காலக்கறங்கு சூழன்று எத்தனையோ பொருள்களையும் பெயர்களையும் மேலது கீழாய்க் கீழது மேலாய் மாற்றியுள்ளது. வரலாற்றாராய்ச்சியும் விஞ்ஞான அடிப்படையில் வளர்ந்திருக்கிறது. ஆயினும் இலங்கை வரலாற்றிலே விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய முக்கிய புருஷர்களில் ஒருவராகிய நல்லைநகர் நாவலர் விளங்குகிறார் என்ற கருத்து இந்த ஒரு நூற்றாண்டுக் காலத்தில் இன்னும் கூடுதலாக உறுதி பெற்றுள்ளது. இதனால் நாவலர் ஆய்வுகளும் மதிப்பீடுகளும் நாளடைவிற் பல்கிப்பெருகியுள்ளன.

நாவலரின் வாழ்க்கையையும் பணிகளையும் வருணிக்கும் நூல்கள் ஏழத்தாழ இருபது இதுவரை எழுதப்பட்டிருக்கின்றன; ஏராளமான கட்டுரைகளும் கவிதைகளும் இயற்றப்பட்டிருக்கின்றன. இவற்றிற் பெரும்பாலான நாவலரவர்களின் சரித்திரத்தையும் அவர் ஆற்றிய சேவைகளையும் வெவ்வேறு அளவில் விவரிப்பன. ஆய்வு நூல்கள் அருந்தலாகவே உள்ளன. இச்சரித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களிலே சிற்சில விஷயங்கள் வாய்பாடுபோல மீண்டும் மீண்டும் பேசப்படுவதைக் காணலாம். ஆயினும் காலத்துக்குக் காலம் வெளிவந்த நாவலர் நினைவுமலர்கள் அவர்பற்றிய ஆய்வினை ஆழ அகலமாக்க உதவியுள்ளன. இவற்றுள் காலத்தால் முற்பட்டது. பண்டிதர் கா.பொ. இரத்தினம் தொகுத்து நா. பொன்னையா அவர்கள் வெளியிட்ட **நாவலர் நினைவுமலர்** (1938). அம்மலர் நாவலர் சம்பந்தமான பல செய்திகளையும், தகவல்களையும், கருத்துரைகளையும், திரட்டித்தந்தது. (அவ்வப்போது **இந்துசாதனம்** முதலிய இதழ்கள், நாவலர் குருபூசை மலர்கள் வெளியிட்டுவந்தன என்பதும் நினைந்துகொள்ளக் கூடியதே.) பின்னர், நல்லூரிலே நாவலர் சிலை திறப்பு விழாவை யொட்டி ஆறுமுகநாவலர் சபையால் வெளியிடப் பெற்ற **நாவலர் மாநாடு மலர்** (1969) குறிப்பிடத்தக்கதொன்றாக அமைந்தது. அம்மலரில் இடம்பெற்ற "**நாவலர் களஞ்சியம்**" என்ற பகுதி விதந்துரைக்க வேண்டியது. முதன் முதலாக நாவலர் பற்றிய ஆய்வுக்குரிய, கனமான ஆராய்சிகளுக்கு இன்றியமையாதனவாயுள்ளபலசெய்திகளும்,தகவல்களும், காலநிர்ணயங் களும், அட்டவணைகளும் அப்பகுதியிலே தொகுத்து அளிக்கப்பட்டன. நாவலர் ஆய்வு புதிய பரிமாணங்களைப் பெறுவதற்கும் வரலாற்று நோக்கு முக்கியத்துவம் பெறுவதற்கும் அம்மலர் நெறிகாட்டியது என்பதில் ஐயமில்லை. அதனையடுத்து நாவலர் சபையே வெளியிட்ட **நாவலர் பெருமான் 150வது ஜயந்தி விழா மலர்** (1972), நாவலர் ஆய்வு மேலும் ஒரு படி செம்பை பெறுவதற்குத் தூண்டுகோலாய் அமைந்தது. நாவலர் பெருமான் சைவப்பெருமகனாக மாத்திரமன்றி, தேசியப் பெருமகனாகவும், விடுதலை இயக்கத்திற்கு வித்திட்ட

விடிவெள்ளியாகவும் இந்நாட்டு மக்கள் அனைவராலும் மதிக்கப்படும் நிலை தோன்றிய வேளையில் அம்மலர் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வேளையில் பண்டிதமணி மேல் வருமாறு எழுதினார்: **சைவர்கள் நாவலர் அவர்களை. ஐந்தாம் குரவர் என்று பாராட்டி. இதுகாறும் விழாவெடுத்து வந்தார்கள். இப்பொழுது தமிழர்கள், தமிழர் அல்லாதவர்கள் — இத்தேசத்தவர்கள், இத்தேசத்தவர்கள் அல்லாதவர்கள் — யாவரும் ஏகோபித்துக் கொண்டாடும் நிலை தோன்றியிருக்கிறது.** எதிர்பார்க்கக் கூடியவாறு அச்சூழ்நிலையை **மலர்** பிரதிபலித்தது. காலத்தின் பின்னணியில் நாவலரை ஆராயவும் மதிப்பிடவும் அன்னாரின் சிறப்பியல்பு களையும்,பங்களிப்புகளையும் சீர்தூக்கிப் பார்க்கவும் மலர் களமாக அமைந்தது. நா. சோமகாந்தன் அதில் எழுதிய கட்டுரை நாவலர் இயக்கத்தின் படிமுறைவளர்ச்சியினை விவரித்தது. (இம்மலரிலும் அதுபோன்றதொரு கட்டுரையை அவர் எழுதியிருக்கிறார்.) முற்கூறிய வரிசையிலேயே இந்நூற்றாண்டு நினைவு மலரும் அமைகிறது.

கடந்த நூற்றாண்டைப் பின்னோக்கிப் பார்க்கும் பொழுது,முன் எப்பொழுதும் இல்லாத அளவில் தற்சமயம் நாவலர் ஆய்வுகளுக்கு மிகவும் வாய்ப்பான ஒரு சூழ்நிலை இருத்தல் புலனாகும். இதற்குக் காரணங்கள் பல:நாவலர் இயக்க வளர்ச்சியின் காரணமாகவும், இந்நாட்டின் பொதுவான கலாசார எழுச்சியின் பெறுபேறாகவும் அண்மைக் காலத்தில் இலங்கைத் தமிழிலக்கியம் பலரது கவனத்தைக் கவர்ந்துள்ளது. படைப்பிலக்கியத் தேவைகளின் விளைவாகத் தோன்றிய தேசிய இலக்கிய இயக்கம், தொடக்கத்திலே சமகால இலக்கியங்களுக்கே முதன்மையளித்ததாயினும், தவிர்க்க இயலாதபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவிலேயே இலங்கைத் தமிழிலக்கியப் பாரம்பரியம் முழுவதையும் தழுவித்தனதாக்கிக் கொள்ள முனைந்தது. ஆற்றலும் அழகும் நிறைந்த பழைய படைப்புக்களிலிருந்து நவீன ஆக்கங்களுக்கு உயிர்ச்சத்துப் பெறவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தது. இவ்வியக்கத்தின் விளைவுகளில் ஒன்றாகவே நாவலர் ஆய்வுகள் சரித்திர நோக்கிலும்சமூகவியற் கண்ணோட்டத்திலும் நடைபெறலாயின. பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த தமிழிலக்கியம் துருவி ஆராயப்படும் நிலை தோன்றியது.

கடந்த நான்கு தஸாப்தங்களாக மலர்ச்சி பெற்றுள்ள நமது நவீன இலக்கியப் படைப்புகள் இப்பொழுது கல்லூரிகளிலும்பல்கலைக்கழகங்களிலும்கற்பித்தலுக்கும் ஆராய்ச்சிக்கும் உரிய நூல்களாகி யுள்ளன. நவீன இலக்கியத்தை நன்கு விளங்கிக் கொள்வதற்கு இன்றியமையாதபிற்பலமாகவும்புதுப்படைப்புகள்பலவற்றின் ஊற்றுக்கண்ணாகவும் இருக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கியத்தில் ஆராய்ச்சியாளர் கூடுதலான அக்கறை கொண்டிருப்பதையும் காணலாம். இதனாலும் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த நாவலர் பலரது கவனத்தை ஈர்த்துள்ளார்.

கடந்த பத்தாண்டுக் காலத்துள் நாவலர், தாமோதரம்பிள்ளை, செந்திநாதையர், துரையப்பாபிள்ளை, விபுலாநந்தர், சோமசுந்தரப் புலவர், சுவாமி ஞானப்பிரகாசர் முதலாய தமிழ்த் தொண்டர்கள் குறித்தும், தமிழ்ப் பத்திரிகைகள் குறித்தும் நமது பல்கலைக்கழகங்களில் முதுமாணிப் பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட புலவர்கள் பற்றிய நுண்ணாய்வுகளாகவும் காலத்தின் விளக்கமாகவும் இவை அமைந்துள்ளமை கருதத்தக்கது. இவற்றின் பயனாக

நாவலரைப்பற்றிய நமது விளக்கம் மேலும் தெளிவடைந்திருக்கிறது. இதே காலப்பகுதியில் சில நூற்றாண்டு நினைவு மலர்களும் சிறப்பு மலர்களும் வெளிவந்திருக்கின்றன: இவற்றுள், அடிகளார் படிவமலர் (1969). பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலர் (1972). மகாதேவ சுவாமிகள் நினைவு மலர் (1975). சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழா மலர் (1978) காசிவாசி செந்திநாதையர் ஞாபகார்த்த மலர் (1978) என்பன குறிப்பிடத்தக்கன.வேறு சில மலர்களும் உண்டு. இவற்றிலே புதியபுதிய செய்திகளும், தகவல்களும், கண்ணோட்டங்களும் வெளிவந்திருக்கின்றன. நாவலருக்குப் பின்வந்தோருக்கும் நாவலருக்குமுள்ள தொடர்பைத் தெளிந்து கொள்வதற்கு இவ்வெளியீடுகள் வழிசமைத்துள்ளன, இவற்றோடு, அருணாசல உபாத்தியார், நா.கதிரைவேற்பிள்ளை, தி. த.கனகசுந்தரம்பிள்ளை, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, அ. குமாரசுவாமிபுலவர் முதலியோர் வாழ்க்கைச்சரிதங்களும் அண்மையில் வெளிவந்துள்ளன. நாவலர் வழிவந்தவர்களைப் பற்றிய சிறப்பாய்வுகளின் மூலம் நாவலரையே மேலும் நுனித்து நோக்கச் சந்தர்ப்பம் உண்டாகியிருக்கிறது.

அண்மையில் எப். எக்ஸ். ஸி. நடராசா, ச.அம்பிகைபாகன், காலஞ்சென்ற மு. இராமலிங்கம், ச.தனஞ்செயராசசிங்கம் ஆகியோர், "நாவலர் சரித்திரத்திற் புதிய கண்டுபிடிப்புக்கள்" சிலவற்றை வெளிப்படுத்தி யுள்ளனர். நுணுக்க விவரங்களின் முக்கியத்துவத்தை இவர்களது குறிப்புரைகள் அழுத்திக் காட்டியிருக்கின்றன. நாவலர் வரலாற்றாசிரியர்களையும், நாவலரின் பதிப்புக் களையும் குறித்துப் பொ. பூலோகசிங்கம் பல ஐயங்களையும், வினாக்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வு முடிபுகளையும் அவ்வப்போது தெரிவித்து வந்திருக்கின்றார். நாவலரவர்கள் நினைவைப் பேணி வந்துள்ள இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பல்லாண்டுகளாக நாவலர் பற்றி எழுதிவந்துள்ள கட்டுரைகள் இப்பொழுது தொகுக்கப்பட்டு நூலுருவம் பெற்றுள்ளன. இன்னும் சிவகாசி இ. அருணாசலக்கவிராயரின் **ஆறுமுகநாவலர் சரித்திரம்**. ஆர்னல்டு சதாசிவம் பிள்ளையின் **பாவலர் சரித்திர தீபகம்**. வே. கனகரத்தின உபாத்தியாரின் **ஆறுமுகநாவலர் சரித்திரம்**. சி. வை. தாமோதரம்பிள்ளையின் பதிப்புரைகளின் தொகுப்பான **தாமோதரம்** ஆகிய நூல்கள் மறுபதிப்புகளாக அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ளன. இவை நாவலர் ஆய்வுக்கு அவசியமான ஆதார நூல்களாகும்.

இன்னுமொன்று, யாழ்ப்பாணத்திலே பல்கலைக்கழக வளாகம் ஆரம்பிக்கப்பட்ட காலமுதல் அங்குள்ள நூலகத்திலே இலங்கைத் தமிழ் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், ஏடுகள், இலங்கைத் தமிழ்ப் புலவர்களின் கடிதங்கள் முதலிய பல்வகைப்பட்ட ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் இலக்கிய ஆய்வுக்கு வேண்டிய அடிப்படைச் சான்றாதாரங்கள் அங்கு கணிசமான அளவு இருக்கின்றன. ஆக, இன்று நாவலர் பற்றி அறியவும் ஆராயவும் விருப்பமுள்ளவர்களுக்கு முன்னொரு பொழுதும் பெற்றிருக்க முடியாத சான்றாதாரங்களும், மூலநூல்களும், வழித்துணை நூல்களும் ஓரளவு எளிதிற் கிடைக்கக்கூடியதாக உள்ளன. இது பெறற்கரிய பெருவாய்ப்பாகும்.

இந் நிலையில், இன்று வெளிவரும் ஒரு நாவலர் நினைவுமலர், முற்கூறிய ஆதாரங்களையும் வாய்ப்பு

நலன்களையும் இயன்றவரை மனங்கொண்டு அவற்றின் பலாபலன்களைப் பிரதிபலித்தல் அத்தியாவசியம். அவ்வாறு செய்ய முயல்வதே அறிவுக்குகந்த நடவடிக்கையாகும். இம்மலரில் நான்கு அம்சங்கள் கவனிக்கத்தக்கவை. முதலாவது, நாவலரைப் பல்துறை நோக்கில் அணுகி ஆராயும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. நமது அறிவுலக நோக்கில் நாவலரது சிந்தனைகளையும் சாதனைகளையும் போதனைகளையும் திறனாய்வதாக இப்பகுதி அமைந்துள்ளது எனலாம். இரண்டாவது, நாவலர் வழிவந்த நல்லறிஞர்கள் இயங்கிய முறையும், அவர்களின் சிறப்பியல்புகளும்,நாவலர் மரபு மாறியும் மாறாமலும் செயற்பட்டு வந்துள்ளமையும் இப்பகுதியில் உதாரண விளக்கங்களாற் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவது, வரலாற்றுப் பின்னணியில் நாவலரை வைத்து மதீப்பீடு செய்யும் முயற்சிகள் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நான்காவது, நாவலர் நூல்களையும், நாவலர் பற்றிய நூல்கள், கட்டுரைகள், குறிப்புகள் ஆகியவற்றையும் முதன் முறையாகச் சுட்டிக் காட்டும் நூல் விவரப் பட்டியில் இப்பகுதியில் சிறப்பிடம் பெற்றுள்ளது. நூற்றாண்டு நினைவைக் கொண்டாடும் வேளைக்கேற்ப கனமும் காத்திரமும் கொண்ட மலராக விளங்கவேண்டும் என்ற வேணவாவுடன் செயற்பட்டிருக்கிறோம்.

காலநெருக்கடி காரணமாக மிகவும் விரைவாக மலரை அச்சிட வேண்டியிருந்தது. அதனை உணர்ந்து உரிய வேளைக்குள் கட்டுரைகள், செய்திகள் வழங்கிய அனைவருக்கும் எமதுநன்றி உரித்தாகுக. மலர்க்குழுவில் அங்கத்துவம் வகித்து எம்முடன் ஒத்துழைத்து உகந்த ஆலோசனைகள் வழங்கிய நண்பர்களுக்கும், குறிப்பாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவின் அமைப்பாளராகவும்,உதவிப் பதிப்பாசிரிய ராகவும், உயிர்நாடியாகவும் இயங்கிய ஆ. சிவநேசச் செல்வனுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பணிபுரியும் இ.கிருஷ்ணகுமாருக்கும், அவ்வப்போது ஒத்தாசைகள் புரிந்த மாணாக்கருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறோம். சபையின் சார்பில் எமக்கு வேண்டிய ஆதரவையும் ஆலோசனைகளையும் அடிக்கடி தந்த திரு. ம. ஸ்ரீகாந்தா, திரு. நா. சோமகாந்தன் ஆகிய இருவருக்கும் நன்றி கூறாதுவிட இயலாது.

இம்முயற்சியில் எம்மை ஈடுபடுத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினருக்குப் பொதுவில் நன்றி தெரிவிப்பதோடு அவர்களுடன் நாமும் சேர்ந்து, நாவலரவர்களுக்கு அஞ்சலி செய்து இந்நூற்றாண்டு நினைவுமலரைப் பணிவன்புடன் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம்.

(நாவலர் நூற்றாண்டு மலர். 1979)

இணைப்பு:

நூற்றாண்டு நிறைவு நினைவு மலர் ஒரு முன்னோட்டம்

பொதுவாக நூற்றாண்டு நினைவு மலர்கள் சம்பந்தப்பட்ட பெரியாரின் அருமை பெருமைகளை எடுத்துரைக்கும் வகையில் அமைவதோடு, அப்பெரியார் வாழ்ந்த காலம் காலத்தின் சூழ்நிலை, அச்சூழ்நிலையில் அப்பெரியார் இயங்கியமுறை, ஒரு நூற்றாண்டுக் காலப்பகுதியில் வரலாற்றாய்வின் வளர்ச்சி, உலகரீதியான

முன்னேற்றத்தில் சம்பந்தப்பட்ட பெரியாரது இடம் முதலியவற்றையும் ஆராய்வது வழக்கமாகும். நூற்றாண்டு நிறைவு நினைவுக் கொண்டாட்டங்களும், கருத்தரங்கு களும், வெளியீடுகளும் மேற்கூறிய வகையான ஆய்வுகளுக்கும்மதிப்பீடுகளுக்கும் மறு மதிப்பீடுகளுக்கும் வாய்ப்பளிப்பன.

இவ்வருட இறுதியில் கொண்டாடப்படவிருக்கும் நாவலர் பெருமான் நூற்றாண்டு நிறைவு நினைவுக் கொண்டாட்டத்தையொட்டி வெளிவரவிருக்கும் மலரும் அத்தகைய தொரு ஆய்வுமலராகவே அமைகிறது. நாவலர் அவர்கள் மறைந்த காலத்திலிருந்து அவரைப் பற்றிய ஆய்வுகள் அங்குமிங்குமாய் அவ்வப்போது நடைபெற்று வந்துள்ளன. தற்சமயம் - குறிப்பாக இலங்கைத் தமிழ் இலக்கியம் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பாடநெறியின் ஒரு பகுதியாகக் கற்பிக்கப்பட்டுவரும் சூழ்நிலையில் - நாவலர் பற்றிய கண்ணோட்டமும் கருத்தும் ஆழமாகவும் அகலமாகவும் ஆராயப்படுவது எதிர்பார்க்கக் கூடியதே. உதாரணமாகக் கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம் பல்கலைக்-கழகங்களில் எம். ஏ. (முதுகலை) பட்டத்திற்காக, நாவலர் பரம்பரையினர் சிலரைப்பற்றிய நுண்ணாய்வுகள் கடந்த சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சி. வை. தாமோதரம்பிள்ளை முதல் பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை வரை தனிப்பட்ட முதன் முயற்சியாளர் பற்றிக் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிகள்கடந்த பத்தாண்டுகளுக்குள் நடைபெற்றுள்ளன. இவை யாவும் அச்சேறியுள்ளன என்பதற்கில்லை. ஆயினும் பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் அறிஞர் பற்றியும், தமிழ்க் கல்விபற்றியும் அநேக புதிய விஷயங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது நமக்குத் தெரியவருகின்றன. இவை அனைத்தும் நாவலர் பற்றிய விளக்கத்தைக் கூர்மைப்படுத்தி நமது அறிவை விசாலிக்க உதவுகின்றன. சுருங்கக்கூறின் இலங்கைத் தமிழிலக்கிய வரலாறு முழுமையும் தன்னிறைவும் பெறத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் வெளிவரும் நாவலர் நினைவு மலர் இவ்வறிவுப் பெருக்கத்தையும் விரிவையும் அவசியம் உட்கொண்டு பிரதிபலித்தே ஆகவேண்டும். ஆகவே, 1979ல் வெளிவரும் நாவலர் நினைவு மலர் பெருமளவில் ஆராய்ச்சிபூர்வமான மலராக அமைகிறது என்று கூறுவது மிகையாகாது. மொத்தத்தில் மலர் நான்கு பகுதிகளாக அமையும். முதலாம் பிரிவில் சமயப் பெரியார்கள், சமூகத் தலைவர்கள், பிரமுகர்கள் முதலியோரின் அஞ்சலிகளும் வாழ்த்துரைகளும் இடம்பெறும். ஒவ்வொரு தலைமுறைப் பெருமக்களும் நாவலர் போன்ற வரலாற்றுப் பெரியோருக்கு வணக்கம் செலுத்துவதை இப்பிரிவு பிரதிபலிக்கும்.

இரண்டாம் பிரிவில், நாவலரைப் பல கோணங்களிலிருந்து நோக்கி அவரது பன்முகப்பட்ட ஆளுமையையும் அருஞ் செயல்களையும் மதிப்பிடும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இறையியல், கல்வியியல், சமூகவியல், இலக்கியம், மொழியியல், அரசியல், வரலாற்றியல் முதலிய துறைகளைச் சார்ந்த ஆய்வாளர்கள் அத்துறைகளில் நாவலர் கொண்டிருந்த எண்ணங்களையும் ஈடுபாட்டையும் ஆராய்கிறார்கள். புதிய பரிமாணங்களைக் கண்டறிய இவ்வாய்வுக் கட்டுரைகள் வழி வகுக்கும் என நம்பலாம்.

மூன்றாம் பிரிவில், நாவலர் பரம்பரையினருள் முக்கியமானவர்கள் சிலரைப் பற்றிய சிறப்பு ஆய்வுகள் இடம்பெறும். சி. வை. தாமோதரம் பிள்ளையிலிருந்து

பண்டிதமணி சி. கண்பதிப்பிள்ளை வரையில் வந்துள்ள ஞான பரம்பரையினர் இப்பிரிவில் அடங்கும் கட்டுரைகளில் ஆராயப்படுவர். நாவலருக்குப்பின் தேசியம், சமயம், கல்வி, சமூகம், இலக்கியம், முதலாய பலதுறைகளில் அவருக்குப் பின்வந்தோர் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டனர் என்பதையும், நாவலர் மரபினை எவ்வாறு தொடர்ந்து வளர்த்தனர் என்பதையும், இக்கட்டுரைகள் எடுத்து விளக்குகின்றன. சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இன்றுவரை பரிணமித்து வந்திருக்கிற இலங்கைத் தமிழ் இலக்கிய இலக்கண கலாசார பாரம்பரியத்தைத் தெளிந்து கொள்வதற்கு இவ்வாய்வுகள் பெரிதும் உதவும்.

நான்காம் பிரிவில், நாவலர் பற்றிய பலதரப்பட்ட செய்திகளைக் கொண்டதகவற் களஞ்சியம் இடம்பெறும். மாணாக்கருக்கும் ஆய்வாளருக்கும் உசாத்துணையாக விளங்கக்கூடிய இப்பிரிவு, மலருக்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல அமைகின்றது.

பல்கலைக்கழக ஆய்வாளரும், மரபுவழித் தமிழறிஞரும், இளைய தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளரும், இலக்கிய கர்த்தாக்களும் கவிஞரும் பங்குபற்றி உருவாக்கும் இம்மலர் நாவலர் பெருமானின் பெரு நினைவுக்கு ஏற்ற சின்னமாகவும் காணிக்கை யாகவும் அமையும் என நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக நாவலர்

நல்லைநகர் ஆறுமுக நாவலர் வந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே? சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்கள் எங்கேப்ர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை?

புகழ்பெற்ற தமிழறிஞரும் பண்டைத் தமிழ் நூல்கள் பலவற்றின் பதிப்பாசிரியருமான சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பற்றிப் பாடிய வெண்பாவே மேலே காணப்புடுவது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இலங்கையிற் தோன்றிய தலையாய தமிழறிஞராகிய ஆறுமுக நாவலர் தமிழிலக்கிய வரலாற்றில் முக்கிமானதோர் இடத்தைப் பெற்றிருப்பவர்.

"வசன நடை கைவந்த வல்லாளர்" என்று பரிதிமாற் கலைஞர் எனப்படும் வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் கூறியதிலிருந்து, "தமிழ் மக்களின் நன்மையின் பொருட்டுத் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்த பெரியார்" என்று காலஞ்சென்ற பெரும் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் கூறியிருப்பது வரை எண்ணற்ற தமிழறிஞர்களும், தமிழிலக்கியத் திறனாய்வாளர்களும் நாவலருக்கு உரிய மரியாதையை அளித்துள்ளனர்.

"நாவலரவர்கள் தமிழுரை நடைகளின் தாதையார்" என்று மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் எழுதும் பொழுது அவர் தமிழுலகத்தின் ஏகோபித்த கருத்தையே கூறுகிறார் என்று துணிந்து கூறலாம்.

எனினும், நாவலருக்கு அளிக்கப்பட்டுள்ள உயர்ந்த ஸ்தானத்தையும், மரியாதையையும் உற்று நோக்கினால் பெரும்பாலானவர்கள் நாவலரைத் தத்தம் கோணத்திலிருந்தே பார்த்துள்ளனர் என்பது தெளிவாகும். சுருங்கக் கூறுவதாயின் நாவலரை அவர் வாழ்ந்த காலச் சூழலினின்றும் பிரித்தெடுத்துத் தத்தம் கொள்கையை வலியுறுத்தப் பலர் உபயோகித்திருக்கின்றனர்.

நாவலர் யார்? சைவ சமயத்துறையில் அவர் ஆற்றிய அளப்பெருந் தொண்டிற்காக அவரை ஆறுமுக நாயனார் என்றும் ஐந்தாங்குரவர் என்றுங் கருத வேண்டுமெனச் சிலர் கூறியிருக்கின்றனர். அத்தகைய கருத்துக்களையும் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பெரும் பணியையும் ஒரு கணம் ஒரு புறத்தில் ஒதுக்கிவிட்டு 'நாவலர் யார்' என்னுங் கேள்விக்குப் பதில் கூறுவேமாயின், அது எவ்வாறமையும்?

இதை நன்கு உணர்ந்து கொள்வதற்கு நாம் நாவலர் வாழ்ந்த காலச் சூழ்நிலையைக் கவனித்தல் வேண்டும். முதலில் போர்த்துக்கீசியரும் பின்னர் டச்சுக்காரரும் அதன் பின்னர் ஆங்கிலேயருமாக சுமார் இருநூற்றாண்டுகள், இலங்கை அந்நியர் வசமிருந்தது. அரசியற் பொருளாதார ஆதிக்கத்தின் உள்வினைவாகக் கலாசார வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. அந்நிய ஏகாதிபத்தியத்தின் தவிர்க்க முடியாத விளைவான சகல தீமைகளும் தலை விரித்தாடின, நிலப் பிரபுத்துவ சமுதாய அமைப்பு நிலவியது. அதனைக் குலைக்க விரும்பவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவியது. அதனைக் குலைக்க விரும்பவில்லை ஆங்கிலேயர். ஆயினும் சமூகத்தில் நிலவிய அந்தகார இருட்டு சமயத்துறையில் மிகத் தெளிவாகத் தன்னைக் காட்டிக் கொண்டது. தொன்று தொட்டுச் சமயம் மக்கள் வாழ்க்கையில் முக்கியமான ஒரு ஸ்தானத்தை வகித்து வந்த சமுதாயத்திலே சமயத்துறையில் ஏற்பட்ட சலனங்களே பிற இயக்கங்களுக்கு முன்னோடிகளாக இருந்ததில் வியப்பெதுவுமில்லை. நாவலர் கருவியாக அமைந்த அக்காலச் சமயச் சீர்திருத்த இயக்கமானது தமிழ் மக்களிடையே ஏற்படத் தொடங்கிய முதல் விழிப்பின் தோற்றமாகும்.

எனினும் நாவலருடைய வாழ்க்கையையும் எழுத்துக் களையும் நுணுகிப் பார்த்தால் ஒரு விஷயம் புலனாகிறது. எளிய, தூய வாழ்க்கை வாழ்ந்த அவர் சாதாரண மனிதருக்கு ஏற்படும் இன்பதுன்பங்களினாலே பாதிக்கப் பட்டிருக்கிறார். அன்றைய மனிதனைக் குழப்பிய பிரச்சினைகள் அவரையும் உலுப்பின; தம்மைச் சுற்றி நடந்த போலி வாழ்க்கையைக் கண்டு நொந்தார்; வெறுத்தார்; நடிப்புச் சைவ சமயிகளைக் கண்டார் ; அதைப் போலவே ஏமாற்றிப் பிழைக்கும் போலிக் கிறிஸ்தவர்களையும் கண்டார்; இந்த நிலை கெட்ட மனிதரின் அவலத்தைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல் நாவல் எழுதினார்; பேசினார்; இந்நிலையை மாற்றவும் முயன்றார்.

இத்தகைய வரலாற்றுக் கட்டங்களில், நசுக்கப் பட்டுள்ள சமூகம் இரண்டு வழிகளில் முயலுவதைக் காணலாம். ஒன்று, தன்னைத்தானே சுத்திசெய்து கொள்ளுதல்,.. இரண்டு, எதிரிமீது தாக்குதல். சொற்பிரயோகம் அரசியலுக்கும் யுத்த அரங்கிற்கும்

உரியதாயினும் உண்மை அவ்வாறே. இவ்விரு 'போர் முறை' களிலிருந்தே நாவலரது தமிழ்த் தொண்டும் சமயத் தொண்டும் பிறக்கின்றன என்பது புலனாகும். கிறிஸ்தவப் பாதிரிமாருடன் நெருங்கிப் பழகிய நாவலர் கல்வித்துறையில் அவர்கள் நிகழ்த்தும் மகத்தான பிரச்சார முறையைப் பின்பற்றித் தானும் எளிய நடையில் நூல்கள் எழுதியும் பதிப்பித்தும், கல்வி நிலையங்களைத் ஸ்தாபித்தும் தமது 'அணிகளை'த் தூய்மைப் படுத்துவதில் இறங்கினார் ஆத்மார்த்த வடிவத்தில் இவை வெளிப்பட்டாலும் இவற்றிற்குப் பின்னால் ஏன் மூலகாரணமாய், சாதாரண மக்களின் வாழ்க்கையில் காணப்பட்ட குறைபாடுகளே அமைந்தன என்பதை நாம் மறப்பதற்கில்லை.

இரண்டாவதாக, எதிரிமீது தாக்கும் பொழுதும் தம்மிடையேயுள்ள துரோகிகளை அம்பலப்படுத்தும் பொழுதும் நாவலரின் வலிமைமிக்க கண்டனப் பிரசங்கங்களும், பிரசுரங்களும் அசுர வேகத்தில் வெளிவந்தன. 18ம் நூற்றாண்டின் தலையாய கண்டனவாதி சிவஞான முனிவர் எனக் கொண்டால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கண்டனவாதி நாவலர் என்பதிற் சந்தேகமிருக்க முடியாது. 'யாழ்ப்பாணச் சமய நிலை', 'சைவ தூஷண பரிகாரம்'', 'சுப்பிரபோதம்'. "மித்தியாவாத நிரசனம்" "போலி அருட்பா மறுப்பு", "விலிலிய குற்சிதம்" ஆகியன நாவலர் வெளியிட்ட கண்டனப் பிரசுரங்களில் சில. நாவலரைப் பின்பற்றிச் சண்ட மாருதம் போல எண்ணற்ற கண்டன நூல்களை அவர் மாணாக்கர்களும் பிறரும் எழுதினர். தாமோதரம் பிள்ளை, சங்கர பண்டிதர், நா. கதிரைவேற்பிள்ளை, சபாபதி நாவலர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மேனாட்டினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திய விழிப்பின் காரணமாய் நாவலர் தொடக்கிய சமயச் சீர்திருத்தம் சபாபதி நாவலர் காலத்திலே கண்மூடித்தனமான பழமைப்பித்தாக மாறுவதையும் நாம் காணலாம். அதாவது இயக்கம் நிலைதவறி விட்டது.

வட இந்தியாவிலே தயானந்த சரஸ்வதி போன்றோர் சமயத்துறையில் சீர்திருத்தம் உண்டாக்க விரும்பியது போலவே நாவலரும் சமூகக் காரணங்களாற் தூண்டப்பட்டு முற்போக்கான இயக்கம் ஒன்றைத் தொடங்கி வைத்தார். இவ்வியக்கத்தின் விலைபொருட்களாக உயர்ந்த தமிழ் வசன இலக்கியங்கள் தோன்றின. அவற்றைத் தனியே தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு நாம் ஒன்றுஞ் செய்ய முடியாது. நாவலர் வாழ்ந்த காலம், அவரைச் சுற்றியமைந்த சமூகப் பிரச்சினைகள், அவை எடுத்த வெவ்வேறு வடிவங்கள், அவற்றைச் சமாளிக்க மக்கள் எடுத்த முயற்சிகள் ஆகியவற்றைத் தெளிவாக நாம் ஆராய்ந்தாலன்றி உண்மையான நாவலரை நாம் அறிந்தவர்களாக மாட்டோம். அதுவரையும் "சைவமும்தமிழுந் தளைத்தினி தோங்க" அரும்பாடுபட்ட பெரியார் என்று வெற்றுக்குரலில் உபசாரத்திற்காக நாவலர் 'புகழைப் பாடி'த் திரிய வேண்டியதுதான்.

ஆறுமுக நாவலர் 1822 ம் ஆண்டிற் பிறந்தார். 1879-ம் ஆண்டில் மறைந்தார். 47 ஆண்டுகள் வாழ்ந்த நாவலர் அகால மரணமடைந்தார் என்றே கூறுதல் வேண்டும். எனினும் இக்குறுகிய காலத்திற்குள் எழுபதுக்கு மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டமை பாராட்டுக்குரியதே. நன்னூல் விருத்தியுரை, சூடாமணி நிகண்டுரை, தொல்காப்பியச் சொல்லதிகாரம், சேனா வரையருரை, திருக்குறள், திருக்கோவையார் ஆகியன அவர் வெளியிட்ட நூல்களுள் ஒரு சில. பிழைகளில்லாத

சுத்தமான பதிப்புக்கு நாவலர் பெயர் போனவர். அதைப் போலவே வீறுகொண்ட செந்தமிழ் நடையில் சொன்மாரி பொழியவும் அவருக்குப் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. 1847-ம் ஆண்டிலே சொற்பொழிவுகள் ஆற்றத் தொடங்கியவர் இறக்கும் வரை இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் எண்ணிறந்த மேடைகளில் இலக்கியப் பிரசங்கங்களும், சமய வாதப் பிரதி வாதங்களும் நடத்தியிருக்கிறார். கண்டனப் பிரசுரங்கள் எழுதுவதிலே தமக்கென ஒரு பரம்பரையை உண்டாக்கிக் கொண்டது போலவே, மேடைப் பிரசங்கம் செய்வதிலும் பலர் அவ்வழியைப் பின்பற்றலாயினர். நாவலர் அடிச்சுவட்டிற் சென்று ஈழத்துப் புலவர்கள் பலர் தென்னிந்தியாவிலே பலவிடங்களில் பிரசங்கமாரிகள் பொழிந்தனர். இவர்களுள் நா. கதிரை வேற்பிள்ளை, சபாபதி நாவலர், சுவாமிநாத பண்டிதர், செந்திநாதையர், சரவணமுத்துப் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நாவலருடைய வாழ்க்கையைப் பற்றிய ஒரு சில செய்திகள் இவை. எனினும் அவர் காலமும் வாழ்க்கையும் இன்னும் சரியான முறையில் ஆராயப்பட வேண்டியிருக்கிறது.

(சரஸ்வதி ஜனவரி. 1958)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் வகுத்த புதுப் பாதை

"முன்னிருந்த எங்கள் சமயாசாரியர்கள் தாம் தரிசனஞ் செய்யப்போன தலங்களில் எல்லாம் பதிகங்கள்அருளிச் செய்தார்கள். இவரோ தாம் போன இடங்களிலெல்லாம் லோகோபகாரமான சைவப் பிரசங்கங்கள் செய்து வந்தனர்."

இது கைலாசபிள்ளை எழுதிய நாவலர் சரித்திரம் நான்காம் அதிகாரத்தில் வருகின்றது. தம்மைச் சமயகுரவர்கட்டு ஒப்பிடுதல் சிறிதும் பொருந்தாதென்றும் அவர்களது "அடிப்பொடிக்குள்ள மகத்துவத்தில் ஆயிரத்திலொன்று தானும்" தமக்கு இல்லை யென்றும் பாவலர் பவவடக்கத்துடன் கூறியுள்ள போதும், நாவலர் என்பது யாவருமறிந்ததொன்றே. ஆயினும், வரலாற்றடிப் படையில் அமைந்த இவ்வொப்புமையில் வேறுபாட்டைச் சுட்டிக் காட்டியுள்ளார் கைலாசபிள்ளை. முன்னவர் பாட்டிலே பதிகங்கள் பாடினர். பின்னவர் உரைநடையிலே பேசியும் எழுதியும் பணிபுரிந்தவர். இவ்வேறுபாடு கவனத்திற்குரியது. "வசனம் போலப் பாட்டுக்கள் இக்காலத்திற் பிரயோசனமுடையவைகளல்ல என்று கருதியே பாட்டுப்பாடுதலை இவர் குறைத்துக் கொண்டார்"

-கைலாசபிள்ளையின்இக்கூற்றுகட்டுரைத் தொடக்கத்திலுள்ள மேற்கோளுக்கு விளக்கம்.

தனது காலத்துக் கேற்றவை எவை என்பதனையும் இன்றியமையாதன எவை என்பதனையும் சிந்தித்துத் தெளிந்து அவற்றைச் செயற்படுத்தியமையே நாவலரது சிறப்புக்கும் தனித்துவத்துக்கும் அடிப்படையாகும். அதாவது நாவலரின் தற்கால உணர்வே அவுரை சமகாலத்தவர் பலரினின்று வேறுபடுத்தித் தனிச்சிறப்புடையராய்க் காட்டுகின்றது. நாவலர் வரலாற்றுப் பெருமகன் பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆவசியகமாயிருந்த சிற்சில கருமங்களை நிறைவேற்றியவர். நன்கு ஆற்றப்பட்ட அக் கருமங்கள் பிறருக்கு ஆதர்சமாக அமைந்தன. அவையே புதுப்பாதை காட்டும் புதுப்பணிகளாயும் அமைந்தன.

நாவலர் காலத்தில் இருவகைக் கண்ணோட்டம் எம்மவரிடையே இருந்தன.ஆங்கிலக் கல்வி கற்றவர்களிற் பெரும்பாலானோர் "தங்கள் தங்கள் சத்திக்கேற்ற உத்தியோகம் பெற்று" துரைத்தன மனோபாவத்துடன் வாழ முற்பட்டனர். தம்மையாண்ட வெள்ளையரைப் பின்பற்றியும் அவரை முன்மாதிரியாய்க் கொண்டும் "குட்டித்துரை" களாக வாழ்வதில் இன்பமும் பயனுங் கொண்டனர். இவர்கள் ஓடுகின்ற நீரில் அடிபட்டு மிதந்து செல்பவர்கள். சம்பளம், பதவி, பட்டம் முதலியன மதிக்கப்படும் பொருள்ளாய் விளங்கின. உதாரணமாக, பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதராயிருந்த நாவலர், துரை பல தரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும் அவ்வுத்தியோகத்தைப் பிரித்தியாகஞ் செய்த பொழுது, அவரது தமையன்மார் "நீ என்ன புத்தியீனஞ் செய்து கொண்டாய், இந்தச் சம்பளம் இனி நீ எங்கே பெறுவாய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமேல் உனக்கு உலகத்திலே என்ன மதிப்பு" என்று அவரைக்கண்டித்தனராம். இத்தகையோர் ஒரு வகையினர்.

(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, **நாவலர்**. 1968 பக்.5)

பிறிதொரு வகையினர். தமிழ்ப் புலமைத்துணை மாத்திரங் கொண்டு குறுநிலத் தலைவர்களது அவைகளையும் ஆதீனங்களையும் அண்டிப் பிழைத்துக் கொண்டிருந்தனர். தமக்குத் தெரிந்த சில "இலக்கிய" நூல்களைப் படிப்பதிலும் படிப்பிப்பதிலும் "பிரபுக்களுக்குப் பிரபந்தங்கள் செய்து வயிறு வளர்த்த வித்துவான்கள்" அவர்கள். தமது காலச் சமுதாய உணர்வெதுவுமின்றித் தம்மளவில் நிறைவுணர்வுடன் அத்தகையோர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் சீவித்த சமஸ்தான ஆதின உலகிலும் பட்டம் பதவிக்குக் குறைவில்லை. கவிராயரும் மகாவித்துவான்களும் கம்பீர நடைபோட்டு நாட்டிலே திரிந்தனர். உதாரணமாக, சென்ற நூற்றாண்டிலே மரபு வழித் தமிழ்ப் புலமைக்குச் சிகரமாய் விளங்கியவரான திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1815- 1875) நாவலரவர்கள் 'நாவலர்'ப் பட்டம் பெற்ற காலத்தில், "ஊர்தோறுமுள்ள சிவஸ்தலங்களுக்கு அவ்வூரிலுள்ள வர்களின் கேள்விப்படி புராணங்கள் செய்து அரங்கேற்றிக் கொண்டும், அந்தாதி கோவை உலாப் பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தங்களை நூற்றுக்கணக்கிற் செய்து கொண்டும், தம்மைத் தொடரும் பிள்ளைகளுக்குப் பெரும்பாலும் தாமியற்றிய நூல்களைப் பாடஞ் சொல்லிக் கொண்டும், ஆங்காங்குள்ள செல்வர்களின் ஆதரவிற் காலங்கழித்தவர்" (பக்கம் 9) இத்தகையோர் தமது காலச் சமுதாயத்துடன் ஒட்டாது 'பழைய' உலகில் வாழ்ந்தார்கள்.

இவ்விருவகை மாந்தரையும் எண்ணிப் பார்க்கும் பொழுதே நாவலரின் புதுமையும் மகத்துவமும் புலனா கின்றன. நாவலர் பிறந்த குடும்பம் வறுமை என்பதை அறியாதது. தனது உடன்பிறந்தாரைப் போல நாவலரும் வேதனத்துக்கு உத்தியோகம் பார்த்திருக்கவேண்டியவர். அது நடக்கவில்லை. சமயத்தையும் மொழியையும் கற்பித்தலையே இலட்சியமாகக் கொண்டிருந்தாலும் திருவாவடுதுறை போன்ற ஆதீனத்தை அணுகியிருப்பின், சின்னப்பட்டமாகவோ ஆதினமகா வித்துவானாகவோ வீற்றிருந்திருக்கலாம். அம்பலவாணர் நாவலர், சபாபதி நாவலர் முதலியோரும் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் அவ்வாறு தான் இருந்தனர். அல்லது பொன்னுச்சாமித் தேவரை அண்டியிருந்தால் சேது சமஸ்தானத்தின் வித்துவ வரிசையில் முற்பட வீற்றிருந்திருக்கலாம். அதுவும் நடக்கவில்லை. ஒன்று 'நவீன' வாழ்க்கை முறை; மற்றது 'பழைய' வாழ்க்கை முறை. பழமை, புதுமை, என்னும் பெயர் வேறுபாடிருப்பினும், இரண்டும் "உண்டிருந்து வாழ்வதற்கு" உகந்த நெறிகளாயே யிருந்தன. இவைதான் அக்காலத்திற்பெரும்பாலாரும்தழுவிய இலகு மதமாயிருந்தன. இவையிரண்டினையும் ஒதுக்கித் தள்ளிப் பிறர் நலம் என்ற மகோன்னதமான இலட்சியத்துக்குத் தம்மை அர்ப்பணித்ததே நாவலர் காட்டிய புதுப்பாதைக்கு வித்தாகும். இவ்வித்திலிருந்து விரிந்தனவாக ஐந்து முதன் முயற்சிகளைக் குறிப்பிடலாம்:

1. தமிழிலே முதன் முதலாகப் பிரசங்கம் செய்தார்.
2. தமிழிலே கட்டுரை என்பது முதலில் இவரால் நல்ல முறையில் எழுதப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தமிழில் எழுந்த பாடநூல்களுக்கு இவரே வழிகாட்டி

4. வசன நடையிற் குறியீட்டு முறையை முதன் முதலிற் புகுத்தினார்.

5. சைவ - ஆங்கில பாடசாலையை முதல் முதன் ஆரம்பித்தவர்.

இவ்வைந்து சாதனைகளையும் நிரற்படுத்தினாலும் நாவலரது வரலாற்றுப் பணியையோ அல்லது வரலாற்றில் அவருக்குரிய இடத்தையோ முற்றாக அறிந்த வராகோம். ஆயினும், அவற்றை ஓரளவு அறிந்து கொள்வதற்கு இச்சாதனைகள் பற்றிய சில செய்திகள் உதவும் என்பதில் ஐயமில்லை. அதற்கு முன் ஒன்று சொல்லல் வேண்டும். வரலாற்றுப் பெரியவரொருவர் ஒரு கருமத்தைப் புதுவதாகச் செய்வதும் உண்டு. செய்து வெற்றி காண்பதும் உண்டு. புதிதாக ஒன்றைச் செய்ய முயல்பவர் பலர். காலத்தின் தேவை பலரை உந்துகிறது. ஆயினும், இரண்டொருவர் அத்தேவையின் முழுத்தன்மையையும் உள்ளுணர்ந்து அதனை நிறைவேற்றி வைக்கின்றனர். அவரே செயற்கரிய செய்பவர். அதாவது, புதுமையுணர்வு மாத்திரம் போதாது. அதனைப் பூரணப்படுத்தும் பக்குவமும் பொருந்தவேண்டும். உதாரணமாக, நாவல் என்ற இலக்கிய வகையைத் தொடங்கி வைத்தவர் வேதநாயம் பிள்ளை. ஆனால், பிரதாப முதலியார் சரித்திரம் இன்று இலக்கியச் சிறப்புடையதாகப் போற்றப்படுவதில்லை.

(மு. வரதராசன், *கணேசையர் நினைவு மலர்*. 1960 பக். 103)

அதுபோலவே மேற்கூறிய ஐந்து முயற்சிகளும் நாவலருக்கு முன்னர் எவராலும் மேற்கொள்ளப் படவில்லை எனக் கூறவேண்டியதில்லை. ஆயினும், தமிழ் - சைவம்

என்ற கோட்பாட்டிற்குள் இவற்றைப் பழுதறச் செய்து முடித்தவர் நாவலரே. இதற்கோர் உதாரணங் காட்டுவோம். நாவலர் வசன பாடப் புத்தகங்கள் எழுதுவதற்கு முன்னரே, சென்னைக் கல்விச் சங்கம் சில தமிழ் நூல்களையும் வெளியிட்டு வந்தது. சென்னையில் அக்காலத்திற் புகழுடன் விளங்கிய வித்துவான் சிதம்பர பண்டாரம், தாண்டவராய முதலியார், சிவக்கொழுந்து தேசிகர் முதலிய இயற்றமிழ்ப் போதனாசிரியர்கள் இச்சங்கத்து முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். வெள்ளைக்காரத் துரைமாரின் கருத்துக்கிணங்கச் சில பழைய தமிழ் நூல்களை மொழி பெயர்த்தும் வெளியிட்டனர். ஆனால் நாவலரே தமிழ்மாணவருக்கு ஏற்ற புதிய பால பாடங்களை எழுதினார். இது பற்றி அக்காலத்திற் சென்னையில் நடைபெற்ற Native Public Opinion என்னும் ஆங்கிலப் பத்திரிகை மதிப்புரையாகக் கூறியுள்ளது மனங் கொளத்தக்கது :

> இந்த அறிஞர் எழுதிய பாலபாடங்களைத்தவறாது இங்குள்ள வித்தியாசாலைகளில் உபயோகித்தல் வேண்டுமென்று நாம் திடமாகச் சொல்லுவோம், இச் சென்னையிலுள்ள வித்தியாசங்கத்தார் வெளியிடும் வசன பாட புத்தகங்களைக் காட்டிலும் நாவலர் பாலபாடங்கள் எவ்வாற்றனும் சிறந்தவையாகும். வித்தியாசங்கத்தார் வெளியிட்ட புத்தகங்களை நாவலரவர்கள் எழுதிய பாலபாடங்களோடு ஒப்பிட நினைத்தமைதானும் தவறெனலாம்.

(மு. இராமலிங்கம், *நாவலர் நினைவு மலர்*.1938, பக். 94)

மாணவரின் மனவளர்ச்சியையும் கல்வி வளர்ச்சியையுங் கருத்திற்கொண்டு 'சுதேசிய' த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளை நிறைவேற்ற நாவலர் பாலபாடங்களை எழுதி வெளியிட்டார் இலங்கைப் பூமி சாஸ்திரம். அவர் எழுதத் தொடங்கியிருந்த தமிழ்நூல், ஆங்கிலம் - தமிழ் , வடமொழி - தமிழ் அகராதிகளும் இத்தகைய கல்வித் தேவையினால் உந்தப் பெற்றனவே.

உரைநடையை எழுதியதிலும் நூல்களைப் பதிப்பித்ததிலும் நாவலருக்கு முன்னோடிகள் பலரிருந்திருக்கின்றனர். ஆனால், அவர்களுக்கும் நாவலருக்கும் நோக்கு நிலையில் வேறுபாடுண்டு. பெரியபுராண வசனத்திலே முகவுரையில்,

> அதனைப் பெரும்பான்மையும் இயற்சொற்களும் சிறுபான்மை அவசியமாகிய திரிசொற்கள் வடசொற்களும் பிரயோகிக்கப்பட்டுங் கத்திரூபமாகச் செய்து, வாசிப்பவர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்தி விகாரங்களின்றி அச்சிற் பதிப்பித்தேன்

என்று எழுதியிருக்கிறாரல்லவா? இக்கூற்று உன்னித்தற் குரியது. நாவலரை அவர் யுகத்துப்பிற பதிப்பாசிரியரின்றும் பிரித்துக் காட்டுவது இச்சமுதாய நோக்கேயாம்.

> தமிழ் கற்றோர் நினைவிலிருந்து நீங்கி ஏடுகளில்வசிக்கத் தொடங்கியது....... இந்தத்துர்ப்பாக்கிய நிலையை இங்கே ஓர் ஆறுமுகநாவலர் அவர்களும், அங்கே ஒரு மழலை மகாலிங்கையர் அவர்களும் சிந்தித்தார்கள். நாவலர் அவர்களின் சிந்தனை 'மக்களுக்கு அத்தியாவசியம் பயன்படுபவைகள் எவை?' என்ற வினாவுடன் எழுந்தது. மகாலிங்கையர் அவர்களின் சிந்தனை 'மிகப் பழைமையானது எது?' என்று வினாவுடன் எழுந்தது.

(சி. கணபதிப்பிள்ளை, கணேசையர் நினைவு மலர். பக். 93)

மேற்சொன்ன வினாவுடன் எழுந்த சிந்தனையின் செயற்பாடாகவே ஐம்பெரும் புது முயற்சிகள் எமது சமுதாயத்துக்கு மிகவும் வேண்டற்பாலனவாயிருந்த நற்சாதனைகளாயமைந்தன. ஆதீனங்களோடு சமயமும், சமஸ்தானங்களோடு புலமையும் முடங்கிக் கிடந்த சூழ்நிலையில் இவையிரண்டையும் பரந்துபட்ட மக்களுக்கு உடைமையாக்க முனைந்தமையே நவலரது தலையாய புதுமுயற்சியாகும். நாவலர் புதிதாகச் செய்த முயற்சிகள் அவரது பெருநோக்கத்துக்கு ஏதுக்களாகவே கருதப் பட்டன என்பன நினைவில் நிறுத்த வேண்டியது. இவற்றின் மூலம் "சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையே" தன்னை இருபது வருட காலம் இரவும் பகலும் தொண்டாற்றச் செய்தது என்று சைவசமயிகளுக்கு விக்கியாபனம் (1868) என்னும் கட்டுரையில் எழுதியுள்ளார்.

> பேராசை மட்டும் இருந்தாற் போதுமோ? வழிவகைகளும் காணல் வேண்டுமன்றோ! இவற்றைத்தனது எதிர்க்கட்சியினரிடமிருந்தே பெருமளவிற்குப் பெற்றுத் தமதாக்கிக் கொண்டார். நாமும் ஏன் அந்தப் பாதிரிமார்கள் போலக் கிளம்பிநமது சைவசமயத்தைப் பரப்பலாகாது? இந்தக் கேள்வி, சென்ற நூற்றாண்டில் ஒரே ஒருவருக்குத்தான் உதித்தது அவரே ஆறுமுகனார்.

(சுத்தானந்த பாரதி, நாவலர் பெருமான். பக்.33)

இக்கட்டுரையின் முற்பகுதியிலே நாம் குறிப்பிட்ட இருவகையினரும் பாதிரிமாரது கல்வி பிரசார முறைகளைப் புறநிலையில் வைத்து நோக்கினார் அல்லர். புதுவாழ்வை மோகித்தவரும் பழைய நெறியிலேயே ஆழ்ந்திருந்தவரும் மேலை நாட்டுக் கல்வி - கலாசார ஆதிக்கத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பையும் பயனையும் காணவியலாதவராயிருந்தனர். நாவலர் கண்டு தனித்து நின்று சமர் புரிந்தார். காலமும் இடனும் நோக்கி எதிரியின் பாணங்களுக்குப் பதிற் பாணங்கள் சமைத்தமையே அவரது வரலாற்றுப் பணியின் இரகசியமாகும். இதனை எத்துணை அழுத்திக் கூறினும் தகும்.

> பாதிரிமார் யாழ்ப்பாணத்துக்கு வராவிடின் நாவலராற்றிய அரும் பெரும் பணிகள் நிகழ்தற்குத் தருண மெழுந்திராது.
>
> (க. கணபதிப்பிள்ளை, **நாவலர் நினைவு மலர்**. பக். 15)

இவ்வுண்மையினையே தனக்கேயுரிய நடையிற் கூறியுள்ளார் பண்டிதமணியவர்கள்:

> உண்மையை நோக்குமிடத்து பதினான்கு வருடக் கிறிஸ்த சூழலே நாவலரை நமக்குத் தந்தது. ஆபிரிக்க தேசமே காந்தியை மகாத்மாஆக்கியது. பதினான்கு வருடக் கிறிஸ்த சூழல் அமையாதிருந்தால் ஆறுமுகநாவலர் என்றொருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை.
>
> (சி. கணபதிப்பிள்ளை, **நாவலர்**. 1968. பக்.6)

தனது காலத்துச் சின்னஞ் சிறிய மனிதரிலிருந்து வேறுபட்டுப் "புதுமை'யில் அடிபட்டுப் போகாமலும், பழைமையில் அமிழ்ந்து போகாமலும் இரண்டையும் தரம் பிரித்து இனங்கண்டு புதுவழி கண்டமையாலேயே, தத்துவ விசாரணி பத்திராதிபர், "சென்னை முதல் ஈழமீறாகவுள்ள இத்தமிழ் நாட்டு வித்துவான்களில் தமக்கிணை இல்லாதவர்" என்று நாவலரை வருணித்தார். நாவலராலே தமிழ்த் தாதாவாகிய சி.வை. தாமோதரம்பிள்ளை, தமது சேனாவரைய விளம்பரத்திலே (1868) நாவலரவர்கள் 'தமிழ்

நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவர்' என்று விசேடித்தமை, உண்மை: வெறும் புகழச்சியில்லை என்றே தோன்றுகிறது.

(**நாவலர் மாநாடுவிழாமலர்**, **1969**)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரும் இந்துமத மறுமலர்ச்சியும்

கல்கத்தாவிலிருந்து வெளிவரும் சஞ்சிகை ஒன்றை அண்மையில் வாசித்துக் கொண்டிருந்தேன். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வங்க இலக்கிய உலகிற் பெரும் புகழுடன் விளங்கியவரும் "வசனநடை கைவந்த வல்லார்" என வழங்கப்பட்டவருமான ஈஸ்வர சந்திர வித்தியாசாகர் *(1820-91)* என்பவரைப் பற்றிய மறுமதிப்பீட்டுக் கட்டுரை ஒன்று என்னைப் பெரிதுங் கவர்ந்தது. பண்டிதர்க்குப் பண்டிதராய்த் திகழ்ந்த அவர் கல்கத்தா சமஸ்கிருதக் கல்லூரி அதிபராகவும் பணிபுரிந்து கல்வித் துறையில் அயராது உழைத்தவர். இருபதாம் நூற்றாண்டு வரலாற்றாசிரியர்கள் அவரைச் சிறந்தவொரு சீர்திருத்தவாதியாகவும், தாராளக் கொள்கையாளராகவும் பாராட்டி வந்துள்ளனர். மேலே நான் குறிப்பிட்ட ஆய்வுக் கட்டுரை, அப்பாராட்டுக்களின் அடிப்படையையும் மிகைப்பாட்டையும் சுட்டிக்காட்டுவதோடு வித்தியா சாகருக்குச் சமகாலத்தவரான வேறுபல மறுமலர்ச்சி யாளரைப் பற்றிச் சிந்திக்கவும் தூண்டுவதாயிருந்தது.

என்னையறியாமலே என் சிந்தனை ஆறுமுகநாவலர் மீது சென்றது. முற் கூறிய கட்டுரையிலே காணப்பட்ட புறநோக்குடனும், "பற்றற்ற" பார்வையுடனும் நாவலரைப் பற்றி ஆய்வுகள் வெளிவருவது எத்துணை இன்றியமை யாதது என எண்ணினேன். "நம்மவரான" நாவலரைப் புறநிலையில் வைத்து ஆராய்வதற்கு முதற்படியாக, அவர் வாழ்ந்து செயற்பட்ட வரலாற்றுச் சூழலிலே அவரை நிறுத்தி நோக்கவேண்டும்; அதே வேளையில் அவரது சமகாலத்தவரோடு ஒப்புநோக்கி மதிப்பிடவும் முற்படல் வேண்டும். அத்தகைய ஒப்புநோக்கிற்கு ஏதுவாகச் சில குறிப்புக்களை இவ்விடத்திற் கூறவிரும்புகின்றேன்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலும் செல்வாக்குடன் இயங்கிய சமய மறுமலர்ச்சியின் பின்னணியிலேயே நாவலரை நாம் நோக்குதல் வேண்டும். குறிப்பாக நாவலரைப் பொறுத்தவரை இந்தியாவின் பல பகுதிகளிலும் பரவிய இந்து சமய எழுச்சியின் பிரிக்க இயலாத ஓர் உறுப்பாகவே அவரைக் கொள்ளவேண்டும்.

மூன்று சமயப் பெரியார்களையும் அவர்களின் வழித்தோன்றிய இயக்கங்களையும் இந்துசமய மறுமலர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவது மரபு. ராஜாராம் மோகன் ராய் *(1772-1833)*, சுவாமி தயானந்த சரஸ்வதி *(1824-1883)*, இராமகிருஷ்ண பரமஹம்சர் *(1836-1886)* ஆகிய மூவரும் முறையே பிரமசமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ண மடம் என்பன தோன்றுவதற்குக் காரணமாயிருந்தனர். இராமகிருஷ்ண மடம், பரமஹம்சரது மரணத்துக்குப் பின்னரே பிரதம சீடரான விவேகானந்தரால் நிறுவப்பட்டதாயினும் பெயருக்கேற்ப இராமகிருஷ்ணர் போதனைகளையே முன்வைத்து இயங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மூன்று இயக்கங்களையும் இந்து சமய மறுமலர்ச்சியின் முப்பெரும் போக்குகளாய்க் கொள்வது பொருத்தமாகும். மூன்றுமே மேனாட்டுத் தாக்கத்தின் சூழ்நிலையில் முகிழ்த்த விளைவுகள் பிரமசமாஜம், வங்காளத்திற் கல்விகற்ற உயர்வர்க்கத்தினர் மத்தியில் மேனாட்டு நாகரிகத்தின் "நல்லம்சங்களையும்" இந்திய பாரம்பரியத்தின் சிறப்பு வாய்ந்த கூறுகளையும் இணைக்க வேண்டும் என்ற அவாவினால் எழுந்ததொன்றாகும். சமய நிலையிலே, கிறித்துவத்துக்கும் இந்துசமயத்துக்கும் பொது அம்சங்களைக் கண்டு, புதியவொரு ஒருமைத்துவ வழிபாட்டு முறையை அமைப்பது பிரம சமாஜிகள் சிலரது நோக்கமாயிருந்தது. ஆங்காங்கு சமூக சீர்திருத்தத்தையும் சமாஜம் வற்புறுத்தியது. ஆயினும் அடிப்படையில், இந்திய பாரம்பரியத்திலும், மேனாட்டுத் தாக்கமே பிரமசமாஜத்தை வசப்படுத்தியது என்று கூறுவது மிகையாகாது. கல்வி, சட்டம், நிர்வாகம் முதலிய துறைகளில் வெள்ளைக்காரர் முறைகளைக் கடைப்பிடிப்பதனால் விரைவாக இந்து சமூகம் முன்னேறும் என்பது பிரமசமாஜிகள் நம்பிக்கையாயிருந்தது.

இந்நம்பிக்கைக்கு நேரெதிராக இருந்தது ஆரிய சமாஜத்தின் இலட்சியம் மேனாட்டுக் கலாசாரம் அக்காலத்தில் கிறித்துவத்தின் மூலமாகவும் அந்நியராட்சியிலும் பரவி வந்தமையால் அவ்விரண்டினுடனும் எத்தகைய ஒட்டுறவும் கூடாது என்பதே தயானந்தர் கொள்கை, நடைமுறையில், அன்றைய சூழ்நிலையிலே, கிறித்துவத்தை மறுப்பது, ஆங்கிலராட்சியை மறுப்பதிலும் இலகுவானதாயிருந்தது. எனவே ஆரிய சமாஜம் வெளிப்படையாக பிரித்தானியர் ஆளுகையைக் கண்டிக்காவிடினும், அது உட்கிடையாக விருந்தது.

கிறித்துவம் முதலிய பரசமயங்களுடன் எத்தகைய சமரசமும் சகஜீவனமுமின்றி, இந்தியர்கள் சுத்தமான வைதிக வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதே தயானந்தர் போதனை. புராதன வேதங்களை "விவிலியமாகக்" கொண்டு, வேறெதனையும் நம்பாது தூய ஆரிய வாழ்க்கை வாழவேண்டும் என்றார் அவர். அதாவது வேதவழக்கைப் பிரமாணமாகக் கொண்டு கிறித்துவத்தை மறுத்துத் தூய்மைவாதியாக நின்றார். பிரமசமாஜிகள் அறிவுபூர்வமாகக் கற்றோர் மத்தியில் இயங்கினர்; ஆரிய சமாஜிகள் உணர்ச்சிபூர்வமாகக் கல்வி கற்றோரை மட்டுமன்றி ஏனையோரையும் கவர்ந்தனர். முன்னது இரு பண்பாடுகளுக்குள் இணைப்பும் இயைபும் காண முயன்றது; பின்னது இந்துமதமே சிறந்தது என்று தனித்துவத்துடன் நிற்க முயன்றது.

இராமகிருஷ்ணர் இவ்விரு போக்குகளையும் அணைத்து வேறொரு போக்குக்கு வழிவகுத்தார். பிரமசமாஜ நிறுவகர் ராஜாராம் மோகன்ராய் பன்மொழிப் புலவர்; இங்கிலாந்தில் பிரபுக்களுடன் பழகியவர்; ஆங்கிலத்திலும் புலமையுடன் எழுதிப் பேசியவர்; ஆய்வறிவினால் சமயப் பிரிவுகளை நுணுக்கமாகக் கண்டு இணைப்புக்காண முயன்றவர்.

ஆரியசமாஜ நிறுவகர் தயானந்த சரஸ்வதி ஆங்கிலப் புலமை அற்றவரெனினும் சமஸ்கிருத விற்பன்னர்; வியாகரண வித்தகர்; பண்டிதர்; ஆற்றல் மிக்க மேடைப் பேச்சாளர்; தருக்கத்தில் வல்லவர். நூலாசிரியர் சத்தியார்த்தப் பிரகாசம் என்ற மகத்தான சமயப் பிரகடன நூலை யாத்தவர்.

இவ்விருவரோடும் ஒப்புநோக்குகையில், இராமகிருஷ்ணர் நூற்புலமையில் குறிப்பிடத்தக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையற்றவர் என்பது தெளிவு: இந்து மதத்தை பாரம்பரிய உணர்ச்சியுடன் முழுமையாக நோக்கினார். அவர் உதாரணமாக, தயானந்தர், வேதங்களுக்குப் பிற்பட்ட நூல்கள் எதனையும் பிரமாணமாக ஏற்கவில்லை. புராணங்களைக் கண்டித்தார். அறுவகைத் தரிசனங்களைக்கூட ஏற்றாரல்லர். அந்த வகையில் "தூய" ஞானத்தையே பிரதானமாகக் கொண்டார். மோகன் ராய் சமய அறிவுடன் அரசியல் சமுதாயக் கொள்கைகளிலும் சீர்திருத்தங்களிலும் ஆழ்ந்த ஈடுபாடுடையவராயிருந்தார். ஆனால் இராமகிருஷ்ணரோ எளிய, இறைபக்தியையும், தியானத்தையும் இயைபட வாழ்தலையுமே வற்புறுத்தினார். நல்லறிவினும், நற்றொண்டினும், இறை நம்பிக்கையும் உணர்வுமே முதன்மையானது என்றார் பரமஹம்சர். இவ்வகையில் வழிவழி வரும் சமய அனுபூதி நெறியையே ஆதர்ஷமாகக் கொண்டார். பண்டைய அனுபூதிமான்களும், ஞானியரும், சந்நியாசிகளுமே அவரது இலட்சிய புருஷர்.

இதன் விளைவாக, இராமகிருஷ்ணர் அறிவுப் பூர்வமாக வலிந்து பிற சமயங்களுடன் சமரசத்தை (ராம்மோகன் ராய் போல) வற்புறுத்தவில்லை; உணர்ச்சி பூர்வமாக வன்மையுடன் பிறசமயங்களை (தயானந்தர்போல) வெறுத்தொதுக்கவுமில்லை. சாதி, சமய, இன வகுப்புப் பேதமற்ற இறையன்புடைய வாழ்க்கையையே முதன்மைப்படுத்தினார். இயக்கங்களில் அதிகம் நாட்டமற்ற சாதாரண இந்தியருக்கும், அனுபூதி நெறியில் ஆர்வமுள்ள பிறநாட்டவருக்கும் இப்போக்கே ஏற்புடையதாயமைந்தது.

இம் மூன்று பெரும் பிரிவுகளுக்குள்ளும் இந்தியாவில் எழுந்த சமய இயக்கங்கள் அனைத்தும் அடங்கும்.

தென்னகத்திலும் ஈழத்திலும் சைவ சமய மறுமலர்ச்சிக்காக உழைத்த ஆறுமுகநாவலர், தயானந்த சரஸ்வதியைப் போன்று வைதீகத்தை நிலைநாட்ட முயன்றவர் என்பதில் ஐயமில்லை. நுணுக்க விவரங்கள் அனைத்திலும் தயானந்தருக்கும் நாவலருக்கும் ஒற்றுமை இருக்கும் என்பதில்லை. ஆனால் இருவரது சமய நோக்கின் அடிப்படையும் ஒத்த தன்மையதே. வேதத்துக்கு மாறானவை எனத் தாம் கருதியது யாவற்றையும் அஞ்சாது கண்டித்தார் தயானந்தர்; சிவாகமத்துக்கு முரணானவை எனத் தோன்றியவற்றை நாவலர் நெஞ்சுரத்துடன் நிராகரித்தார். சமரசத்திற்கு இடந்தராத - இணங்கிப் போகாத இவ்வைதிகப் பற்றே அவ்விருவரின் பலத்துக்கும் பலவீனத்துக்கும் அடிப்படை. தயானந்தர் - நாவலர் ஆகிய இருவரையும் ஒப்பிட்டு விரிவாக ஆராயும் முயற்சி இதுவரை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. "நாவலர்பெருமான்" என்ற நூலில் சுத்தானந்த பாரதியார் இருவரும் ஒத்த தன்மையுடன் இயங்கியவர்கள் என்று சுருக்கமாய்க் குறிப்பிட்டிருக்கிறார். அது விவரமாக ஆராயவேண்டியது.

ஆறுமுக நாவலருக்கும் இராமலிங்க அடிகளுக்கும் நடைபெற்ற வாக்குவாதம். அருட்பா - மருட்பா வழக்கு என்பனவற்றை வரலாற்றுப் பின்னணியுடன் விளங்கிக் கொள்ள இத்தகைய ஆய்வு உதவும்.

இவ்வியக்கங்கள் இந்தியாவில் பிற்காலத்திலே பெற்ற மாற்றங்கள், அவை அரசியல் எழுச்சியிலே வகித்த பாத்திரம், மாகாணஅடிப்படையிலும் அனைத்திந்திய ரீதியிலும் அவை வேறுபட்ட விதம் ஆகியன நாவலரை விளங்கிக்கொள்ள வகைசெய்யும் என்பதில் ஐயமில்லை.

(அஞ்சலி, செப்டெம்பர், 1971)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் அடிச்சுவட்டில் தேசியம்

நாவலர் அடிச்சுவட்டில் இலங்கையில் தேசிய வளர்ச்சி என்னும் பொருளை ஆராய முற்படும் பொழுது, இலங்கை - தேசியம் - வளர்ச்சி ஆகிய மூன்று சொற்கள் மிக முக்கியமானவையாய் அமைகின்றன. இச்சொற்களின் பொருள் தன் விளக்கமானது எனப்பலர் கருதுவதுண்டு. ஆனால் கூர்ந்து நோக்கினால், இவற்றின் பொருள் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து வந்திருப்பதும் திட்டவட்டமாக வரையறுக்கப்படாததும் புலனாகும். எனவே இச்சொற்களை நிதானமாகவும் வரலாற்று அடிப்படையிலும் அணுகியாராய்வது இன்றியமை யாததாகும்.

இலங்கை அல்லது ஈழம் என்று கூறும் பொழுது எமக்கு ஏற்படும் எண்ணப் படிவம் யாது? இன்று எமது நாடானது பல தேசிய இனத்தவர்கள் வாழும் தன்னாதிக்கமுள்ள சுதந்திர தேசம் என்பதை விளக்கம் வேண்டாத முறையில் நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தொன்று தொட்டே இதே எண்ணப்படிவம் உண்மை யானதாயும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுவ தொன்றாயும் இருந்தது என்பதற்கில்லை. வரலாற்று

அடிப்படையில் நோக்கும்பொழுது, இலங்கை, ஈழம், லங்கா, சிங்களத்தீவு முதலிய பற்பல நாமங்களால் பல்வேறு காலப் பகுதிகளில் வழங்கப் பெற்றமையால், புவியியல் சார்பான வகையில் நாடு என்ற ஓர் எண்ணம் நிலவி வந்திருப்பினும், இந்நூற்றாண்டிலே நாம் அறிந்து கருதும் இலங்கையை அவ்வெண்ணப் படிவம் குறித்தது எனக் கூறவியலாது. தேசியம் என்னும் கருத்தைத் துல்லியமாக்க இச்செய்தி அவசியமாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களிலே ஈழத்தைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. உதாரணமாக,

"ஈழத்துணவும் காழகத்தாக்கமும்"
"கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்"
"ஈழத்துப் பூதந்தேவனார்"

என்பன போன்ற தொடர்கள் வழங்குகின்றன, இத்தகைய வழக்காறுகளில், ஈழத்தைப் பற்றிய பொதுப்படையான - புவியியற் சார்பான - கருத்தே பொதிந்துளது என்பதில் ஐயமில்லை. இலக்கியச் சான்றுகளைப் போலவே கல்வெட்டுக் குறிப்புகளும் அமைந்துள்ளன. இவற்றை வரலாற்று மாணவர் நன்கறிவர். இரண்டொரு எடுத்துக்காட்டுகள் பார்க்கலாம்.

முதலாம் இராஜேந்திரன் ஆட்சிக்காலத்துக்குரிய கல்வெட் டொன்றிலே (கி.பி. 1035 - 1036),

"பொருகடல் ஈழத்து அரசர் தம் முடியும்
ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
முன்னவன் பக்கல் தென்னவன் வைத்த
சுந்தர முடியும் இந்திரன் ஆரமும்
தெண்டிரை ஈழமண்டலம் முழுவதும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் வரிகள் காணப்படுகின்றன.

அதற்கு முன்னரே, கி.பி. 983 இல் மதுராந்தக உத்தமச் சோழன் திருமால்புரத்திலே வெட்டுவித்த சாசனத்தில்,

"மதுரையும் ஈழமும் கொண்ட
கோப் பரகேசரி பந்மற்கு"

என்றும்,

தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் உள்ள, முதலாம் இராஜராஜன் காலத்துக்குரிய (கி.பி 1010) கல்வெட்டொன்றிலே,

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே உரிமை பூண்டமை மனக்கொள,
காந்தளூர்ச்சாலை கலம் அறுத்தருளி, வேங்கை
நாடும், கங்க பாடியும், தடிகை பாடியும்,
நுளம்ப பாடியும், குடமலை நாடும்,
கொல்லமும், கலிங்கமும் எண்திசை புகழ்தர
ஈழமண்டலமும், இரட்ட பாடி ஏழரை
இலக்கமும், திண்டிறல்வென்றித்
தண்டால், கொண்ட..... ஸ்ரீ ராஜராஜதேவர்"

எனக் காணப்படுகிறது. இக்கூற்றுக்களை அவதானிப்போர்க்கு ஒருண்மை புலப்படாமற் போகாது. அரசவமிசங்களும் நாட்டின் பெயர்களுமே மனங்கொளப்படுகின்றன. நாட்டுப் பெயர்களும் ஊர்ப்பெயர்களும், தேசப்பெயர்களும் அபேதமாய்க் கூறப்படுதல் உற்றுநோக்கத்தக்கது. 'மதுரையும் ஈழமும் கொண்ட' என்று கூறப்படுமிடத்து, இன, மொழி, பிரதேச வேறுபாடுகள்

எதுவும் குறிக்கப்படாமல் ஈழமும் "பத்தோடு பதினொன்றாக" - கைப்பற்றப்பட்ட ஒரு நாடாகவே - பிரஸ்தாபிக்கப்படுகின்றது. அக்குறிப்புக்களிளெல்லாம் நாட்டு மக்கள் பற்றிய உணர்வோ அக்கறையோ தென்படுவதைக் காணுதல் இயலாது.

ஈழம் புவியியலடிப்படையில் குறிப்பிடப்பட்டு வந்திருப்பதைப் போன்றே, இந்தியாவும் பாரதவர்ஷம், ஜம்புத்துவீபம், நாவலந்தீவு என்று பலவாறாக வழங்கப்பட்டு வந்திருக்கிறது. வேதங்களிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் இந்தியா என்ற உபகண்டத்தின் புவியியற்படிவம் உருவரையறையில்லாத முறையில் கருதப்பட்டிருப்பினும், நவயுகக் கவியாம் சுப்பிரமணிய பாரதி பாடியது போன்று, பலமொழி பேசும் மக்கள் ஒருங்கிணைந்து வாழும் நாடு என்ற எண்ணம் பழங்காலத்தில் இருந்ததில்லை; இருந்திருக்க இயலாது. ஏனெனில் அப்பொழுது தேசிய ஒருமைப்பாடு என்ற கோட்பாடு உருப்பெறவில்லை. வங்காளிக்கு, மாரத வீரனும் ராஜபுத்திர மறவனும், ஆங்கிலேயனும் அந்நியரே. ஐம்பத்தாறு தேசத்துராஜாக்கள் என்னும் மரபுத் தொடரே இதை நிரூபிக்கும், THREE PHASES OF INDIA'S STRUGLE FOR FREEDOM என்னும் நூலிலே ஆர். சி. மஜும்தார் பின்வருமாறு இரத்தினச் சுருக்கமாய்க் கூறியுள்ளார்:

> The conception of India, as a whole, was to be found only in the literary works of a past age, and still survived in theory, but it had no application to actual politics till the sixties or seventies of the 19th century. (p.2)

விடுதலை என்னும் நாடகச் சித்திரத்திலே மகாகவி பாரதியார், "மானுடச்சாதி ஒன்று; மனத்திலும் உயிரிலும் தொழிலிலும் ஒன்றே" என்று பாடியதைப் போன்றே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள் - இவள்,
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்

என்று பாரத நாட்டின் ஒருமைப்பாட்டை உருவகித்துப் பாடினார். இலங்கை, இந்தியா முதலிய நாடுகளில் இத்தகைய ஒருமைப்பாட்டு உணர்வு பிரித்தானியர் ஆளுகையிலேயே உருவாகியது. இதுவே தேசியத்தின் முதற்கட்டமாகும்.

ஆனால் அந்நிய ஆட்சியினர் இதனைத் தன்னோக்கத்துடன் செய்யவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமது ஆட்சியை உறுதிப்படுத்திக் கொண்ட ஆங்கிலேயர், தமது தேவைக்கும் குறிக்கோளுக்கும் இயைய நாட்டை ஆளலாயினர். நூற்றாண்டுகளாக நிலவிவந்த 'புராதன' வாழ்க்கை முறையும் பொருளாதார அமைப்பும் தவிர்க்க இயலாதபடி மாற்றமடைந்தன. பெரிய அளவில் இந்திய உபகண்டத்தில் நடந்தேறிய இம்மாற்றத்தின் இயல்பையும் விளைவுகளையும் கார்ல் மார்க்ஸ் கண்டுணர்ந்து பல கட்டுரைகள் எழுதினார். "பிரித்தானியரால் இந்துஸ்தானத்துக்கு ஏற்பட்டிருக்கும் துன்பதுயரம், அது முன்னால் உற்ற வேதனையிலிருந்து சாரம்சத்தில் மாறுபட்டதாகவும் அதைவிடப் பன்மடங்கு கொடிய தாகவும் உள்ளது என்பதில் ஐயமில்லை" என்று கூறிய மார்க்ஸ், சீரழிந்து சின்னாபின்னப்பட்டுத் தேக்கநிலையில் கிடந்த இந்தியா, "மேற்கு நாடுகளைச் சார்ந்த நவீன உலகுக்குரிய நாகரிகத்தை நிறுவுவதற்கான அத்தி வாரத்தையும் இவ்வழிவின் மத்தியிலே எழுப்பிக் கொண்டிருந்தது" என்றும் அது வரவேற்கத்தக்கது என்றும் கூறி வரலாற்றமைதி கண்டார்.

பிறிதோரிடத்திலே நான் குறிப்பிட்டிருப்பதைப்போல, (*தமிழ் நாவல் இலக்கியம்*. பக். 23) "அன்றைய கால நிலையில் ஆங்கிலேயராட்சியானது முற்போக்கான பாத்திரத்தை வகித்தது. பழைய கிராமப் பொருளாதாரத்தை இழுத்து வீழ்த்தி, முதலாளித்துவ வடிவங்களைப் புகுத்தியதன் மூலம் அனைத்திந்தியாவையும் (இலங்கை போன்ற ஏனைய காலனி நாடுகளையும்) ஒரே பொருளாதார அமைப்பிற்குட் படுத்தியது. இது முன்னேற்றத்திற்கு ஏதுவாயிருந்தது என்பதில் ஐயமில்லை. ஆயினும், இம்மாற்றமானது பிரித்தானியரது வர்த்தக, வங்கி, கைத்தொழில், நிர்வாக நலன்களுக்கு ஏற்ற வண்ணம் நெறிப்படுத்தப் பட்டது" என்பதும் மனங்கொளவேண்டியதே.

இயக்கவியல் விதிகளின்படி முதலாளித்துவ வர்க்கம் எதை உற்பத்தி செய்கிறது என்னும் வினாவை எழுப்பிய மார்க்ஸீய மூலபிதாக்கள் பின்வருமாறு விடைபகர்ந்தனர். "தனக்குச் சவக்குழி தோண்டுகிறவர் களையே உற்பத்தி செய்கிறது. அதன் வீழ்ச்சி பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி ஆகிய இரண்டுமே தவிர்க்க முடியாதவையாகும்" (*கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை*. முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1969. பக். 64)

அதுபோலவே, ஆசியாவில் பல நாடுகளிலே தமது ஆட்சிக்கும் சுரண்டலுக்கும் ஆதிபத்திய வசதிக்குமாக அவ்வந்நாடுகளை ஒருமுகப்படுத்த மேற்கொள்ளப்பட்ட பிரித்தானிய குடியேற்ற நாட்டுவாத முயற்சிகள் காலகதியில் அவர்களுக்கு எதிராகவே திரும்பக்கூடிய வரலாற்றுச் சுழற்சி ஏற்பட்டது. அதாவது பிரித்தானியர் தமது சாயலிலே படைக்க முற்பட்ட 'சுதேசிகளே' ஈற்றில் அவர்களது பகைவராக மாறினர். இனம், மொழி, மதம், பிரதேசம் முதலியவற்றின் அடிப்படையில் பிளவுண்டு கிடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையர் ஒன்றுபட்டு 'அந்நியர் வந்து புகல் என்ன நீதி?' என்று குரல் எழுப்பும் நிலை உருவாகியது. புவியியல் அடிப்படையில் நோக்கும்பொழுது முற்காலங்களில் சிற்சில மன்னர்களின் ஆட்சியிலே - குறிப்பாக துட்டகாமினி, விஜயபாகு,பெரிய பராக்கிரமபாகு, ஆறாம் பராக்கிரமபாகு முதலியோரின் ஆட்சிக் காலங்களிலே - ஈழம் முழுதும் ஒரு குடைக்கீழ் இருந்தது. ஆனால் அது 'நாடுபிடி' சண்டையின் விஸ்தரிப்பே அன்றி தேசிய ஒருமைப்பாடு அன்று

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே அரசியல், பொருளாதார ரீதியாக எமது நாட்டிலே ஒருமைப்பாடும் பிணைப்பும் உண்டாகியது. பௌதீக அடிப்படையில் ஏற்படுத்தப்பெற்ற இவ்வொருமைப்பாட்டிற்கு ஆத்மார்த்த ரீதியிலும் வலுவளிக்க அந்நியர் முனைந்தனர். கிறித்தவ மதத்தின் அடிப்படையிலும், ஆங்கிலக் கல்வியின் மூலமாகவும் இதனைச் செய்து முடிக்க முயன்றனர். இதனைக் கவனிக்கும் பொழுது தான் காலனித்துவத்தில் கிறித்தவம் வகித்த வரலாற்றுப் பாத்திரம் தெளிவாகும். தொடக்கத்திலே, தாம் ஆட்சி செய்த நாட்டு மக்களிற் பெரும்பகுதியினரையாகிலும் கிறித்தவராக்க முயன்றனர்; அதனையே இலட்சியமாய்க் கொண்டியங்கினர்; அது நிறைவேறாமற் போகவே, பின்னாட்களில் தமது ஆட்சிக்கு விசுவாசமான சிறுபான்மையினராகக் கிறித்தவர்களை வைத்திருக்க முயன்றனர். பிரித்தாளும் தந்திரோ பாயத்தில் இதற்கும் உரிய இடம் இருந்தது. இன்றும் ஆபிரிக்காவிலே இத்தந்திரோபாயத்தின் விநாச விளைவுகளை அவ்வப்போது காணக்கூடியதாயுள்ளது.

அரசியல் - பொருளாதார - ஆட்சியியல் துறைகளிலே மாற்றம் இன்றியமையாதிருந்தது. ஆனால் சமயத்துறையில் கிறித்தவம் புதிதாக எதையும் கொண்டு

வரவில்லை. எனவே அதன் தாக்கமும் பாதிப்பும் அநாவசியமாயும் அத்துமீறியதாயும் தீங்கு நிறைந்ததாயும் இருந்தன. இதன் காரணமாகவே கீழைத் தேய நாடுகள் பலவற்றில் அந்நியராட்சிக்கு எதிராகக் கிளம்பிய முதற்குரல் சமயத்துறையிலேயே கேட்டது. அதாவது, இந்தியா இலங்கை முதலிய நாடுகளிலே தேசியத்தின் முதல் தோற்றத்தை சமய, கலாசாரத் துறைகளிலேயே காணக் கூடியதாயுள்ளது.

இவ்விடத்திலே அந்நியராட்சியின் மற்றொரு தன்மையையும் மனங்கொளல் நன்று. சமயத்துறையிலும் எம்மவர்க்கு இவ்விழிப்பு ஏற்படுவதற்கு ஆங்கிலக் கல்வி முக்கியமான காரணமாயிருந்தது. சமஸ்கிருதம், தமிழ், பாளி, முதலிய மொழிகளில் புதைந்து கிடந்த பழைய செல்வங்களை முதலிலே கண்டுபிடித்து அவற்றுக்குப் புத்துயிரளித்தவர்களிற் பெரும்பாலானோர் ஆங்கிலக் கல்வியின் பயனைப் பெற்றவர்களும், அதனால் ஓரளவு சமுதாயத்திற் செல்வாக்குடன் விளங்கியவர்களு மேயாவர். இவர்கள் ஆங்கிலக் கல்வியின் மூலமாகவே தமது பாரம்பரியச் சிறப்பை அறிந்தனர். சமய அடிப்படையிலேயே பழைமைக்கும் தமக்கும் தொடர்பை நிறுவிக் கொண்டனர். அதைப்போலவே சமயத்தின் அடிப்படையிலே சமூக ஒருமைப்பாட்டை உண்டாக்க முற்பட்டனர். இப்போக்கினை இலங்கையின் பிரதான சமூகங்கள் மூன்றிலும் காணலாம், ஆறுமுகநாவலர், சித்திலெவ்வை, அநகாரிக தர்மபாலர் ஆகிய மூவரையும் எடுத்துக்கொண்டால், தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களையே முறையே சைவம், இஸ்லாம். பௌத்தம், ஆகிய சமயங்களின் அடிப்படையில் ஒற்றுமைப்படுத்தி மேம்படுத்த இவர்கள் விழைந்தனர் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாகும்.சமயம் என்று கூறும்போது வரையறுக்கப்பட்ட சமய முடிபு விளக்கக் கோட்பாடுகள் மட்டுமல்லாது மரபுவழிவரும் சில வாழ்க்கை நெறிகளும் கருதப் படுகின்றன. கலாசாரம் என்னும் சொல்லிற்கு இத்தகைய பொருளுண்டு. 'கந்தபுராண கலாசாரம்' என்னும் சொற் றொடரைக் கவனித்தால் இவ்வுண்மை தெற்றெனப் புலப்படும். மேலே குறிப்பிட்ட நூலில் மஜும்தார் கூறுவார்:

> Nationalism was thus founded on the bedrock of common religion, culture and historical tradition.

சமயம், கலாசாரம், வழிவழிவரும் மரபு ஆகிய மூன்றினை இங்குக் குறிப்பிடுகிறார் ஆசிரியர். கிறித்தவம் முதலிலே எதிர்பட்டு நின்ற பொழுது இறையியல், ஒழுக்கவியல் என்பனவற்றிலேயே முரண்பாடுகள் தோன்றின. ஆயினும்நாளடைவிலே வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களிலும் முரண்பாடுகள் முனைப்பாய்த் தோன்றின. ஊண், குடிவகைகள், ஆடை, மொழி, இசை போன்றவற்றிலெல்லாம் கிறித்தவம் பிரத்தியேகமான வழக்காறுகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்டதாயிருந்தது. இதனாலேயே கிறித்தவத்துக்கும் சைவத்துக்கும் நிகழ்ந்த பலப்பரீட்சையில் மதக் கோட்பாடுகள் மாத்திரம் பிரச்சினைக்குரியனவாய் இருக்கவில்லை. மக்களின் முழு வாழ்க்கை முறையும் மத அடிப்படையில் நோக்கப்பட்டது.

நாவலருக்கு முந்திய தலைமுறையைச் சேர்ந்த தமிழ்ப்புலவர் முத்துக்குமார கவிராசர் (1780-1851) இயற்றிய விருத்தப்பாடலொன்று இப்பிரச்சினைகளை துல்லியமாகச் சித்திரிக்கிறது:

நல்வழி காட்டுவோம் உடுபுடைவை சம்பளம்
நாளுநா ளுந்தருகுவோம்
நாஞ்சொல்வதைக்கேளும் எனமருட்டிச் சேர்த்து
நானமுஞ் செய்துவிட்டார்,
மெல்லமெல்லப்பின்னை வேலையிங் கில்லைநீர்
வீட்டினிடை போமென்கிறார்
வேண்டியொரு கன்னியைக் கைக்கொண்டு
கருவாக்கி விட்டபின் கணவன் வேலை
இல்லை நீ போவென்று தள்ளுவது போலுமே
இனி எம்மை எம் உறவினோர்
எட்டியும் பாரார்கள் கிட்டவும் வாரார்கள்
ஏர்ப்பூட்டி உழவுமறியோம்
அல்லலாம் இம்மைக்கு மறுமைக்கு
(நரகினுக்)கு ஆளாகி மிக அழிந்தோம்
ஆபரா பரனே! கிறிஸ்தவர்கள் எங்களை
அடுத்துக் கெடுத்தார்களே.

கிறித்து மதத்திலே வேதன நிமித்தம் பிரவேசித்த சிலரை உடுவிலில் இருந்த பாதிரியார் ஒருவர் விலக்கிய போது, விலக்கப்பட்டார் கூற்றாக இவ்விருத்தம் அமைந்துள்ளது. ஆயினும் தனிப்பட்ட ஒரு நிகழ்வையன்றி, மதமாற்றத்தை ஒட்டி எழும் பல்வேறு சமூக கலாசாரப் பிரச்சினைகளையும் இது தத்ரூபமாய் விளக்குகிறது எனலாம். மதமாற்றத்தின் போது "உடுபிடவை சம்பளம்" முதலியன வகித்த பங்கையும், அதனால் கிறித்தவத்திற் சேர்ந்தோர் தமது சூழலிலிருந்து அந்நியமயப்பட்டதையும், உழவுத் தொழில் முதலியவற்றைக் கைவிட்டுச் சம்பளத்தை மாத்திரம் முழுமையும் நம்பியிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையையும், அதனால் ஏற்பட்ட ஆத்மார்த்த மன உளைவுகளையும் இப்பாடல் வெகுநுட்பமாக வெளிப்படுத்துகிறது.

மதமாறிக் கிறித்தவத்தைத் தழுவியவர்கள் அந்நியப்பட்டுவிடுகிறார்கள் என்பதற்காகவே, மீட்டும் அவர்களை வைதிக சமயத்தில் சேர்த்துக் கொள்ளும் முயற்சியும் இந்துக்களால் கைக்கொள்ளப்பட்டது. நாவலரும் இத்தகைய கைங்கரியத்தைச் சிலசந்தர்பபங்களில் செய்திருக்கிறார். உதாரணமாக, மு.தில்லைநாதபிள்ளை என்பவரும், சு. சின்னப்பிள்ளை என்னும் மற்றொருவரும் ஒரு சமயம், "நல்லவழி காட்டுவோம், பேரின்ப ஞானவழி இதுவே" என்று மருட்டிய பாதிரிமார் சொற்கேட்டு, கிறித்தவராக எண்ணினர். ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுமாகி யிருந்தது. அச்செய்தியை அறிந்த நாவலர் இருவருக்கும் நற் போதனை செய்து அவர்கள் எண்ணத்தை மாற்றவும் அவர்கள்கிறித்தவராதலை ஒழித்தனர். பின்னொரு சந்தர்ப்பத்திலே, கறல் விசுவநாதபிள்ளை என்னும் பிர்சித்திபெற்ற கிறித்தவத் தமிழறிஞர் நாவலரது செல்வாக்கினால் "சைவசமயமே உண்மையான சமயமென்று உணர்ந்து பச்சாத்தாபமுற்றுச் சிதம்பரத்துக்குப் போய் தாம் செய்த சிவ தூஷணங்களுக்குப் பரிகாரமாகப் பொன்னூசி காய்ச்சித் தமது நாவைச் சுடுவித்துக் கொண்டு சைவரானார்". (த. கைலாசபிள்ளை, *ஆறுமுகநாவலர் சரித்திரம்*. பக். 18).

இந்தியாவிலே தேசிய உணர்வைச் சமயத்துறையில் ஆழமாகப் பதித்த ஆரிய சமாஜம் என்னும் நிறுவனத்தைத் தாபித்தவரான தயானந்த சரஸ்வதி (1824-1883) அவர்களும், புற மதத்தாரை இந்துமதத்திற் சேர்ப்பதற்குச் சுத்தி என்னும் சடங்கு முறையைப் பிரபலியப்படுத்தினார். அந்நிய மதங்களிற் சேர்ந்தவர்களை மீண்டும் மதமாற்றம் செய்வதை அவர் தமது இயக்கத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாக வற்புறுத்தினார்; அதாவது மதமாற்றம் என்னும் ஆயுதத்தைப் புறச் சமயத்தவர் மீதே பெருமளவில் பிரயோகிக்கும் போர் முறையைக் கைக்கொண்டார் தயானந்தர். (வைதிகப்பற்று, வேதாகமங்களைத் தலையாய பிரமாணமாகக் கொண்டமை, சுயமத குருமாரைச் சீர்திருத்த முற்பட்டமை, கல்விமுயற்சி, அரசியல் அக்கறை, பரமத கண்டனம் முதலிய பல அமிசங்களில் தயானந்த சரஸ்வதிக்கும் ஆறுமுகநாவலருக்கும் குறிப்பிடத்தக்க ஒப்புமைகள் உண்டு. இவை இன்னும் விரிவாக எவராலும் ஆராயப்பட்டிருப்பதாய்த் தெரியவில்லை.)

இவ்விடத்தில் நாம் கவனிக்கவேண்டியது யாதெனில், தேசியத்தின் முதற்படியான சமயப் போட்டியும் மறுமலர்ச்சியும் தவிர்க்க இயலாதவாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்டனயவாயமைந்தன. கிறித்தவரும், அவர்களை எதிர்த்து மறுகரையில் நின்ற இந்து, பௌத்த மறுமலர்ச்சியாளரும் தத்தமக்குப் பலம் தேடும் வகையில் பொதுமக்களைப் பல வழிகளில் நாடினர். அதன் விளைவாக சமயப் பிரச்சினைகள் மக்கட் பிரச்சினைகளாயின. இதனைத்தொடர்ந்து, சமயம், சமுதாயம், அரசியல் யாவும் ஒன்றுடன் ஒன்று கலந்து பிரிக்க இயலாதவாறு பின்னிப் பிணைவதையும் நாம் காணலாம். இந்நிலையிலேயே தேசியம் வலுவும் வேகமும் பெறுகிறது. சுருங்கச் சொன்னால், தேசியத்தின் உள்ளடக்கம் மக்கள் பிரச்சினைகள், இயக்கம் அல்லது போராட்டம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறலாம். புவியியல் அடிப்படையில், நிலப்பரப்பு என்ற அளவில் 'நாடு' என்றிருந்த நிலைமாறி, அந்நாட்டில் வாழும் மக்களது ஒருமைப்பாடு, ஒத்த பிரச்சினைகள் என்பன முக்கியத்துவம் பெற்று , பின்னர் அப்பிரச்சினைகளுக்காக அந்நிய ஆட்சியாளருடன் போராடும்படி வந்தெய்தும் பொழுது தேசியம் உறுதியான வளர்ச்சிப் பருவத்தை அடைகிறது.

வரலாற்றுத் தொடர்புடைய இக்குறிப்புக்களை முன்னீடாகக் கொண்டு நாவலரது தேசிய உணர்வுக்கு வருவோம். அனுபவமே தலைசிறந்த ஆசான் என்பது மூதுரை. தேசியவாதிகளுக்கு முன்னோடியான நாவலர் அனுபவரீதியாகக் கற்றவை பல. சைவாகம நெறியைத் தளர்ச்சியின்றிக் கடைப்பிடித்த சித்தாந்த சரபமாகிய நாவலர் பெருமான், மதப்பூசாரியல்லர். கால இடச் சூழல்களைக் கவனிக்காமல் கண்மூடித்தனமாய் வரட்டுக் கோட்பாடுகளைப் பற்றி நின்ற வருமல்லர். மக்கள் பிரச்சினை என்ற நிலை வந்த விடத்துப் பொதுநோக்கில் கத்தோலிக்கருடன் சேர்ந்து கருமமாற்றியவர் அவர். சைவர்கள்மாத்திரம் மக்கள் என்று குறுகிய வரம்பு எதனையும் அவர் வரித்துக் கொள்ளவில்லை. வடமாகாண கவர்ண்மெண்டு ஏசண்டராயிருந்த துவையினந் துரைக்கு எதிராக நாவலர் முன்னின்று நடத்திய நீண்டகாலப் போராட்டத்திலே நாவலரது தேசியப் பண்புகள் அத்தனையும் முனைப்பாகத் தோன்றின. இலங்கை நேசன் பத்திரிகையிலே 'இது நல்ல சமயம்' என்னும் மகுடமிட்டு நாவலர் எழுதிய வீறார்ந்த கட்டுரையிலே இதனைத் துல்லியமாய்க் காணலாம்:

> இது நல்ல சமயம்! சைவருக்கும் நல்ல சமயம்! வைஷ்ணவருக்கும் நல்ல சமயம்! கிறிஸ்தவருக்கும் நல்ல சமயம்! மகமதியருக்கும் நல்ல சமயம்! ஒரு சமயமும் இல்லாதவருக்கும் நல்ல சமயம்! எல்லாருக்கும் நல்ல சமயம்! ஒருவரும் சந்தேகிக்காத சமயம்! இது நல்ல சமயம! கச்சேரி உத்தியோகத்தர்களுக்கும் தலைமைக்காரர்களுக்கும், உண்மைக்குமாறாகப் பயப்படாதேயுங்கள்....... நீங்களெல்லாம் உங்கள் உண்மையிலே நிலை பெற்று நில்லுங்கள்.

என்று நாவலர் தர்மாவேசத்துடன்எழுதும்பொழுது தனது காலத்துக் கற்றோரை மாத்திரமன்றிப் பொது மக்களையும் சேர்த்தே இயக்கம் ஒன்றை நடாத்த முற்படுகிறார், "தாம் இங்கே வந்தகாலந்தொடங்கி உங்களுக்கு அநீதி செய்ய மெல்லெனத் தலைப்பட்டு அதில் வர வர முதிர்ச்சி பெற்று விளங்குகிற துவையினந் துரை" என்றும், "வடமாகாணத்துக்குத் துவையினந் துரை கவர்ண்மெண்டு ஏசண்டான காலந்தொடங்கி, அவராலும் அவர் கீழ் உத்தியோகத்தர்கள் சிலராலும் பலவகைப்பட்ட பெருந்துன்பங்களை அனுபவித்துக்கொண்டு வருகிறீர்கள்" என்றும் வெகுசனங்களை விளித்துக் கூறும்பொழுது மக்களை அணிதிரட்டும் மனப்பக்குவத்தைக் கண்டு கொள்ளலாம்.

வைரம்பாய்ந்த வைதிகப் பற்றுடன் சமயத்துறையில் விடாப்பிடியாக உழைத்த நாவலர். சமூகத்துறையில் தமது கவனத்தைச் செலுத்திய பொழுது, மக்கள் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடைய பிரச்சினை களில் முன்னின்று உழைத்தார். உணவு, சுகாதாரம், உழைப்பு, கல்வி, ஆட்சிமுறை முதலியன எல்லோரையும் பாதிப்பவை. இத்துறைகளிலே ஆங்கிலேயர் ஆட்சியிற் காணப்பட்ட அநீதிகளையும், அபத்தங்களையும் ஆன்ம வீரர்களுக்குரிய இலட்சியப் பிடியுடனும், கண்டிப்புடனும் வெளிப்படுத்தினார். சுகாதாரம், ஆட்சிமுறை போன்றவை காரணமாகவே துவையினந் துரையுடன் மோதினார். இதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருக்கரீதியான விளைவாகவே, சட்ட நிருபண சபை உறுப்பினராயிருந்த சேர். குமாரசுவாமியை ஆதரித்தார். அவருக்குப் பின் அத்தானத்துக்கு சேர். பொன். இராமநாதனை ஆதரித்தார். 'இது நல்ல சமயம்' என்ற கட்டுரையில், அரசாங்கம் "முட்டுப்படுகிற ஜனங்களுக்கு விதைநெல்லு" வழங்காததைப் பற்றி ஸ்ரீ குமாரசுவாமி, சட்டநிருபண சபையிலே கேள்வி கேட்டதையும், "உண்மையை நன்கறிந்த ஸ்ரீ குமாரசுவாமி துவை யினந்துரையுடைய அநீதியையும் வன்சண்மையையும், பொய்யையும் புதுக்கவர்ணருக்கு மெல்லென இனிது விளக்கி, திக்கற்ற ஏழைகளாகிய" மக்களுடைய துன்பத்தைத் துடைக்க முயன்றதையும் குறிப்பிட்டிருக்கிறார். சமூகப் பிரச்சினைகளினூடாக நாவலர் அரசியலிற் சம்பந்தப்பட்டதை இவற்றின் மூலம் நாம் காணக்கூடியதாயுள்ளது. இன்று நாம் கருதும் அளவில் பரந்துபட்ட பொதுசன இயக்கமாக, நாவலர் நடத்திய எதிர்ப்பு இயக்கம் இருந்திருக்க இயலாது. எனினும் 'வெகுசனம்' என்னும் சொற்றொடரை நாவலர் அன்றைய வரலாற்றுச் சூழலில் பரந்த பொருளிலே பிரக்ஞைபூர்வமாகவே பயன்படுத்தினார் என்பது மனங்கொளத்தக்கதொன்றாகும். "வெகுசனத்துரோகம்' என்ற சொற்றொடரையும் நாவலர் வழங்கியிருக்கிறார்.

தேசியத் தலைவராக விளங்கிய தமிழ்ப் பெரியார்கள் அன்று ஆங்கிலத்திலேயே அரசியல் பேசினர். நாவலர் தாய்மொழியில் பேசினார்; எழுதினார். இதனால் மொழியும் வளமடைந்தது. 'வெகுசனத்துரோகம்", 'திக்கற்றஏழைகள்', முதலியன பிற்காலத்தில் வேகமும் வலுவும் பெற்ற அரசியல் தொடர்களாகப் பரிணமித்ததையும் நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும். இது

விஷயத்தில் பின்னர் வந்த திரு. வி.க. போன்றாருக்கு நாவலர் வழிகாட்டியாகவிளங்கினார் என்றும் கூறலாம்.

சமயவாதியாகிய நாவலரை அரசியல் பொருளாதார - சமூகத் துறைகளில் ஆழ்ந்த அக்கறைகொள்ள வைத்த வரலாற்று நிகழ்வுகளில் ஒன்று ஈசுர வருஷத்தில் (1877) யாழ்ப்பாணத்திலே உண்டான கொடிய பஞ்சமாகும். பஞ்சத்துடன் மரக நோயும் சேர்ந்து சொல்லொணாத் துன்பம் விளைத்தன. இப்பஞ்சம் பற்றி அக்காலத்தையொட்டி வெளிவந்த வரலாற்று நூல் ஒன்றில் உருக்கமான விவரணம் காணப்படுகிறது. ஜோன் **(John)** என்பார் 1882இல் வெளியிட்ட *யாழ்ப்பாணச் சரித்திரம்* என்ற நூலிலே பின்வருமாறு எழுதினார்.

> பஞ்சமும் இதுவே சமயம் என்று அஞ்சல் இன்றி அகோரமாய்ப் பரந்தது. அகவிலை மிக விலையாயிற்று. மனுஷர் பெரும்பாலும் என்புருபிகளாயினர். அனேகரிற் கங்காளம் எண்ணிக் க்ணக்கிடத்தக்கதாக இருந்தது. தீவார் தங்கள் உதரக்கனிகளை விற்று உணவுகொள்ள முயன்றனர். இறந்து, காட்டோரமாகக் கிடந்த நாட்டான் ஒருவனுடலை அங்கசேதனஞ் செய்து பரீட்சை பண்ணியபோது, இரைப்பைக்குட் புற்கற்றை காணப்பட்டதாமே பஞ்சத்தின் விஞ்சிய கொடுமை இதாற் தெளிவாகின்றது. சனோபகாரிகள் இதைக் கண்டு வண்ணார் பண்ணையிற் கஞ்சித் தொட்டியொன்றுண்டாக்கிப் பஞ்சப்பட்டவர்களுக்குக் கஞ்சிகாய்ச்சி யூற்றினார்கள்.

ஆசிரியர் ஜோன் குறிப்பிடும் 'சனோபகாரிகள்' என்னும் சொற்றொடர் நாவலரையும் உள்ளடக்குகிறது. அக்காலத்திலே பஞ்சப் பட்ட மக்களுக்கு வண்ணார்பண்ணையிற் கஞ்சித் தொட்டி உண்டாக்கியது நாவலரின் நற்பணிகளில் ஒன்றாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம் கவனிக்கப்படாமையாலும்' வருமானம் ஒன்றிலேயே ஆங்கிலேயராட்சியின் அக்கறை இருந்தமையாலும் பஞ்சம் முதலிய பேரிடர்கள் தோன்றின என்பதைக் கண்டுணர்ந்த நாவலர் பொருளாதாரச் செய்திகளை நுணுகிநோக்கினார். 1874 இல் நாவலர் வெளியிட்ட பூமிசாத்திரம் என்ற நூலில் பின்வருமாறு எழுதினார்:

> வறுமைக்கும் துன்பத்துக்கும் சகல பாவங்களுக்கும் பிறப்பிடம் மதுபானம். இலங்கையிலே பூர்வகாலத்தில் மதுபானம் மிக அரிதரிது. தற்காலத்திலோ அது விருத்தியாகிக் கொண்டே வருகிறது. துரைத்தனத்தாருக்குச் சாராயத்தினால் 1852 ம் வருஷத்து வரவு ஏறக்குறைய 6,00,00ரூபா 1872 ஆம் வருஷத்துவரவு ஏறக்குறைய 20,00,000 ரூபா.ஆங்கிலேய துரைத்தனத்தார். தமக்குச் சாராயத்தால் எய்தும் பொருளைப் பிறவாயில்கள் சிலவற்றால் எய்துவிக்கத் தலைப்பட்டுக் கொண்டு சாராயத்தை ஒழிப்பாராயின், இலங்கைச் சனங்கள் செல்வமும் ஆரோக்கியமும் அடைவார்கள்.

நான் மேலே குறிப்பிட்ட தேசிய உணர்வின் முதிர்ச்சியையும் முழுநிறைவையும் இம்மேற்கோளிலே ஐயத்திற்கு இடமின்றிக் கண்டு தெளியலாம். வடஇலங்கையிலே, வைதிக சமயப் பாதுகாவலராக வாழ்க்கையை ஆரம்பித்த நாவலர், படிப்படியாகப் பரிணமித்து, 'மதுவிலக்கு' பற்றிய இக்கூற்றிலே, 'இலங்கைச் சனங்கள்' என்று தேசமுழுவதையும் மனங்கொண்டு பேசுவதைக் கேட்கின்றோம். இதுவே தேசியத்தின பரிணாம வளர்ச்சியுமாகும். இதன் வெளிப்பாட்டை, 'விவசாயம்' பற்றிய பிறிதொரு குறிப்பிலும் காணலாம்.

"இலங்கைச் சனங்களுக்குள்ளேமுக்காற் பங்கினர் வேளாண் டொழிலாளர்; இலங்கையில் ஆறிலொரு பங்கு

நிலம் மாத்திரமே வேளாண்மை செய்யப் படுகின்றது.இலங்கைவாசிகளுக்குத் துரைத்தனத் தாருடைய சகாயம் போதுவதன்று. துரைத்தனத்தார் இங்குள்ள காடுகளை அழித்து நாடுகளாக்கி. ஏரிகளைத்திருத்தி நீர்ப்பாய்ச்சுவிப்பாராயின், இலங்கைக்குப் போதும் அளவினதாகிய நெல் விளையும்."

அந்நியர் எமக்கு விட்டுச்சென்றபிரச்சினைகளில் ஒன்று உணவுப் பற்றாக்குறை. இன்று வரை பெரும் பிரச்சினையாயிருந்து வரும் இவ்விஷயம் பற்றி நாவலர் கூறுவன நுண்ணிய சிந்தனையின் பிரதிபலிப்பாய்க் காணப்படுகின்றன. இதிலும் 'இலங்கை வாசிகள்' என்று தேசிய அடிப்படையில் அவர் எழுதியிருப்பது நோக்கத்தக்கது. 1874 இல் சுமார் நூறாண்டுகளுக்கு முன் தீர்க்கதரிசனத்துடன் கூறினார் எனக் கொள்ளலாம் அல்லவா?

சமயவாதியாய்த் தொடங்கித் தேசியவாதியாய் முகிழ்ந்த நாவலர் வாய்ச் சொல் வீரர் அல்லர். செயல் வீரரும் ஆவர், 1877 இல் பஞ்சம் ஏற்பட்டபொழுது தர்மசிந்தனையுடன் கஞ்சித் தொட்டி உண்டாக்கியதோடு அமையாது, 'யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு வர்த்தக வேளாண் சங்கம்' என ஒரு நிறுவனத்தையும் தொடங்குவதற்கு முன்னின்றுழைத்தார். சங்கத்தின் செயல்களை ஊக்குவிப்பதற்காகத் தாமே இரண்டாயிரம் ரூபாவுக்கு, இரு நூறு பங்குகள் வாங்கிக் கூட்டு முயற்சியை வளர்க்க முனைந்தார் இவ்வாறே கந்தளாய் நிலத் திருத்தச் சட்டத்திலும் அதிக அக்கறை கொண்டிருந்தார் நாவலர். இவை யாவும் நாவலரது கண்ணோட்டமும், காட்சியும், அக்கறைகளும் அகன்றுகொண்டே சென்றமையை எமக்குக் காட்டுகின்றன. இது தேசியத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவு என்றும் கூறலாம்.

இந்த நன்மரபிலேயே நாவலருக்குப் பின் வந்த தேசியத் தலைவர்களான சேர். பொன் இராமநாதன், சேர், பொன். அருணாசலம் சேர். அம்பலவாணர் கனகசபை, கௌரவ பாலசிங்கம்முதலியோரும், மாவட்டரீதியில் தலைவர்களாய் விளங்கிய தெ. அ. துரையப்பாபிள்ளை, கௌரவ சு. இராசரத்தினம் போன்றோரும் தாம் தமிழர்களாய் இருந்தபோதும், பிரச்சினைகளை நாடு முழுவதற்கும் பொதுவான வையாகவே நோக்கினர். இலங்கைத் தேசியத்தின் வரலாற்றில் இவர்கள் முக்கியமான இடத்தைப் பெறுபவர்கள். இம்மரபின் மிக முக்கியமான பண்பு, நாட்டு ஒற்றுமையும் நல்வாழ்வுமாகும். நாவலர் மரபுக்குப் பெருமைதந்தவர்களில் ஒருவரான சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் நன்மாணாக்கர்களில் ஒருவரான புலவர் மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 1926ஆம் ஆண்டிலேபாடிய 'இலங்கை மணித்திருநாடு' என்று தொடங்கும் பாடலிலே,

> இலங்கை மணித்திருநாடெங்கள் நாடே - இந்த
> இனிய உணர்ச்சி பெற்றால் இன்பவீடே

எனக் கூறினார். அந்த உணர்ச்சி பெறுவதற்கு, நாவலர் வேறொரு தொடர்பிற் கூறியதுபோல இது நல்ல சமயம்,நாவலர் வழிவரும் தேசியம் இச்சமயத்தில் நமக்கு வழிகாட்டக்கூடியதாகும்.

(புதுமை இலக்கியம். ஜனவரி 1974)

நாவலர் இலக்கிய நோக்கும் பணியும்

மனிதன் படைக்கும் ஏனைய பொருட்களைப் போல இலக்கியமும் காலதேச வர்த்தமானங்களுக்குக் கட்டுப்பட்டது. அதே வேளையில் வேறு படைப்புக்களைப் போலன்றி இலக்கியம் காலத்தை வென்று நிற்கவும் காண்கிறோம். தமது காலத்து உள்ளியல்புகளை உறுதியாகப் பிரதிபலிக்கும் இலக்கியங்களே காலத்தைக் கடந்து நிற்கும் ஆற்றலையும் பெற்று விடுகின்றன. மேலெழுந்த வாரியாகப் பார்க்குமிடத்து இது பொருந்தாவுரையாகத் தோன்றக் கூடும். ஆயினும் கூர்ந்து நோக்கினால் முரணுரை போலத் தோன்றும் மெய்யுரை என்பது புலனாகும். ஹென்றி மற்றிஸே (1869 - 1954) என்ற பிரசித்தி பெற்ற பிரெஞ்சு ஓவியர் ஒரு சந்தர்ப்பத்திலே பின்வருமாறு கூறினார்:

> கலைகள் யாவற்றிலும் அவை உருவாகிய வரலாற்று யுகத்தின் முத்திரை பொறிக்கப் பெற்றிருக்கும். ஆனால் சிறப்பு மிக்க ஆக்கங்களில் அம்முத்திரை மிகவும் ஆழமாகப் பதிக்கப் பெற்றிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்குக் கட்டுப்பட்டும் காலத்தைக் கடந்தும் இயங்கும் இரு பண்புகள் கலை இலக்கியத்துக்கு இருப்பதனாலேயே அவை பற்றிக் காலந்தோறும் வாதப்பிரதி வாதங்கள் நிகழ்கின்றன.

இலக்கியத்தின் நித்தியத்துவம் பற்றி ஒவ்வொரு தலைமுறையிலும் முடிவற்ற சர்ச்சைகள் நிகழக்கூடு மாயினும், அதன் அடிப்படைப் பண்பு ஒன்று உண்டு. அது தான் இலக்கியத்துக்கும் சமுதாயத்துக்கு முள்ள பிரிக்கவியலாத பிணைப்பு ஆகும். ஆங்கிலத் திறனாய்வாளர் ஒருவர் இரத்தினச் சுருக்கமாய்க் கூறியிருப்பது நினைவுக்கு வருகிறது.

> இலக்கியம் சமுதாயத்தின் ஓர் அமிசம். அது சமுதாயத்தின் மகோன்னதமான - ஆழமிக்க - விஷயங்கள் பலவற்றை ஒட்டியிணைத்து ஒன்றுபடுத்தி அவற்றுக்கு உரிய வடிவங்கொடுத்து விளக்கமும் அளிக்கிறது. அதனை ஒரு சமுதாய நிறுவனம் என்றும் குறிப்பிடலாம். கலையாக்க மரபுகள் விழுமியங்கள் என்பனவற்றின் களஞ்சிய மாகவுள்ளன. அதிலே கலைஞர்களும் பொதுமக்களும் சங்கமிக்கின்றனர். அதனால் மகத்தான தொடர்பு சாதனமாகவும் அது அமைந்துவிடுகிறது. நமது விருப்பார்வம், கற்பனை ஈடுபாடு இவற்றின் வெளிப்பாடாகவும் இருக்கிறது.

நமது கலாசார பாரம்பரியம் கடுஞ்சோதனைக்கு உட்பட்ட ஒரு காலகட்டத்திலே செயற்பட்ட ஆறுமுக நாவலர், தவிர்க்க இயலாதவாறு இலக்கிய உலகிலும் சஞ்சரித்தார். அன்றும் இன்றும் கலாசாரத்தின் முக்கியமான கூறுகளில் ஒன்றாக இலக்கியம் விளங்குகிறது என்பதை எவரும் மறுக்கவியலாது. எனவே நாவலரது இலக்கியக் கொள்கை, நடைமுறை,

செல்வாக்கு, என்பனவற்றை ஆராய்தல் அவசியம் வேண்டப்படுவதொன்றாகும்.

இருபதாம் நூற்றாண்டிலே 'இலக்கியம்' என்ற சொல் வெகு பரவலாகப் பயன்படுத்தப்படுகின்ற அதே வேளையில் அதன் வரைவிலக்கணத்திலும் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. அதனாலேயே "எது இலக்கியம்?" என்னும் வினா முன்னெக்காலத்திலும் பார்க்க இந்நூற்றாண்டிலே அடிக்கடி கேட்கப்படுகிறது. இலக்கியம் தோன்றிய காலமுதல் திறனாய்வும், வாதங்களும் இருந்து வந்துள்ளபோதும் எமது நூற்றாண்டிலிருப் பதைப் போன்று பன்முகப்பட்ட - காரசாரமான இலக்கிய சர்ச்சைகள் முற்காலங்களில் இருந்தன என்பதற்கில்லை. பரந்துபட்ட பொதுக் கல்வி, வெகுசனசாதனங்கள், சனநாயக உரிமைகள் முதலியன இலக்கிய சர்ச்சைகளுக்குப் புதியபரிமாணங்களை உண்டாக்கியுள்ளன எனலாம்.

இதிலொன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இலக்கியத்தை உள்ளடக்கும் கல்வியை எடுத்துக் கொண்டால் அதனது பண்பு, பணி ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்கள் காலத்துக்குக் காலம் மாற்றம் பெற்றிருப்பதைக் காண்கின்றோம். ஆன்ம ஈடேற்றம், நல்லொழுக்கம், குடியியல் உணர்வு, நாட்டு முன்னேற்றம் முதலிய பல்வேறு கருத்துப் படிவங்கள் காலத்துக்குக் காலம் கல்வியின் குறிக்கோளாகக் கூறப்பட்டு வந்துள்ளன. பிளேட்டோவிலிருந்து பியாஜே வரை கல்வியைப்பற்றி எழுதியோர் தத்தம் காலத்துச் சூழ்நிலைகளாற் பாதிக்கப்பட்டு வெவ்வேறு கோணங்களிலிருந்து கல்விக்கு வரைவிலக்கணமும் விளக்கமும் கூறியிருக்கின்றனர்.

அறவியலை ஆதாரமாய்க் கொள்ளும் நோக்குக் கொள்கையாளர், "தருமமும் அர்த்தமும் காமமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்சமடைதலு மாகிய நான்கும் நூலால் (இலக்கியத்தால்) எய்தும் பிரயோசனம்" என்பர். ஆனால் அழகுச் சுவையையே இலக்கியத்தின் பிரதான நோக்கமாகக் கொள்வோர், "இலக்கியத்துக்குப் புறநோக்கம் எதுவும் இல்லை என்றும், அது தன்னளவில் தானே நிறைவுடைய தொன்று என்றும், கலை கலைக்காகவே" என்றும் உறுதியாகக் கூறுவர், "உயிர் பெற்ற தமிழர் பாட்டு" என்ற கவிதையில் புராணங்களைப் பற்றிக் கூறவந்த பாரதியார்,

ஒன்றுமற் றொன்றைப் பழிக்கும் - ஒன்றில்
உண்மையென் றோதிமற்றொன்று பொய் யென்னும்

எனக் கூறினார். இலக்கிய சர்ச்சைகளிலும் இத்தகைய ஒரு நிலையைக் காணலாம். உதாரணமாக, ஓர் இலக்கியப் படைப்புக்குரிய வாசகரின் எண்ணிக்கையைக் கொண்டே அதன் தரம் குறித்து மாறுபட்ட மதிப்பீடுகள் தோன்றலாம்." பல்லாயிரக்கணக்கான வாசகரைக் கவரக்கூடிய ஒரு நூல் இயல்பாகவே இலக்கியத்தரம் அற்றது; அது பாமர ரஞ்சகமானது, ஆகையால் அதிலே இலக்கிய 'நயம்' எதுவும் இருக்கவியலாது" என்பர் ஒரு சாரார். பல்லாயிரக்கணக்கான வாசகர்களைப் பெற்றிருந்த 'கல்கி' யின் எழுத்துக்களைப் பற்றி, க.நா. சுப்ரமண்ணியம் போன்ற விமர்சகர்கள் இவ்வாறு தான் கூறியிருக்கின்றனர். ஒரு உதாரணம் பார்க்கலாம்:

> இன்று தமிழன் மூவரை இலக்கியாசிரியர்கள் என்று ரஸிக்கிறான்; துப்பறியும் நாவல்கள் எழுதுவதில் ஸ்ரீமான் துரைஸாமி ஐயங்கார்; சமூக சீர்திருத்த நாவல்கள் எழுதுவதில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்; சிறுகதைகள் கட்டுரைகள் முதலியன எழுதுவதில் ஸ்ரீமான் கல்கி....... ஸ்ரீமான் கல்கி இந்த நாவலால் பொதுஜனத்தின் மனத்தைக் கவர்ந்துவிட்டார்........ இந்தக் கவர்ச்சிக்கு முக்கிய காரணம் அவருடைய வசன நடை........ அங்கங்கே நிகழும் ஹாஸ்யப் பேச்சுக்களும், சம்பவங்களும் பொதுஜனத்திற்கு எளிதில் புரியக்கூடியதாக, பொதுஜனத்திற்கு அடிக்கடி பழக்கமானதாகவும் இருக்கின்றன... மனித சுபாவத்தை, தொடர்கதை படிக்கும் சுபாவம், தொடர்கதை படிக்காத சுபாவம் என்று இரண்டாகப் பிரிக்கலாம். 'மேலே என்ன? 'உம், உம்' என்று கேட்டுக்கொண்டு போகக்கூடிய 'குழந்தை' உள்ளங்களை உத்தேசித்தே **தியாகபூமி** எழுதப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்.... நாவல் **கதையாக** ரஸிக்கக்கூடிய தியாகபூமியை நாவல் **இலக்கியமாக** அங்கீகரிப்பது சிரமம்தான்.

ஏறத்தாழ முப்பத்து நான்கு வருடங்களுக்கு முன் கல்கியின் **தியாகபூமி** திரைப்படமாக்கப்பட்டிருந்த சமயம் **சூறாவளி** என்னும் இலக்கிய சஞ்சிகையில் (11.6-1939) அதன் ஆசிரியர் க. நா. சு. எழுதிய விமர்சனம் ஒன்றிலேயே மேற்காணும் பகுதிகள் இடம்பெற்றன. ஓரளவு இலக்கியப் பரிச்சயமுள்ளவர்க்கும் இப்பகுதியிலே பொதிந்துள்ள குத்தலும் கிண்டலும் புலனாகாமற் போகா. "பொதுஜனத்துக்கு எளிதில் புரியக்கூடியதாக" இருந்த காரணத்தினாலேயே கல்கியின் ஆக்கத்தைக் கிண்டல் செய்தார் விமர்சகர். அதாவது, ஜனரஞ்சகமும் இலக்கியத்தரமும் உடனொத்தியல முடியாதவை என்பது இத்தகையோரின் பிரதான வாதமாகும்.

இதற்கு நேர்மாறான கருத்தோட்டமும் உண்டு. உதாரணந் தேடி வெகுதூரம் போக வேண்டியதில்லை. **பாஞ்சாலி சபதம்** முகவுரையில் பாரதியார் எழுதினார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம் பொதுஜனங்கள் விரும்பும்மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்குவிளங்கும்படிஎழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்

இக்கூற்று முந்தியதற்கு முரணிசைவானது என்பது வெளிப்படை. ஜனரஞ்சகத்தன்மையே இலக்கியத் தரத்தின் அடிப்படைகளில் ஒன்றாய்க் கொள்ளப்படுகிறது பாரதியார் கூற்றில், உண்மையில் இவ்விரண்டும், அதாவது இலக்கியச் சிறப்பும் ஜனரஞ்சகத்தன்மையும் ஒன்றுக் கொன்று முரணாகவோ, ஒன்றையொன்று விலக்குவ தாகவோ இருக்க வேண்டுவதில்லை. ஆனால் இலக்கிய உலகில் கடந்த சில காலமாக இப்பிளவு இருந்து வருகிறது. எமது சமுதாயத்தில் கைப்பணிக்கும் கலைக்கும், உடலுழைப்பாருக்கும் புத்திஜீவிகளுக்கும். பேதமும் ஏற்றத்தாழ்வுகளும் இருப்பதைப்போலவே இதுவும் சமுதாய அமைப்பிற் காணப்படும் சிற்சில முரண்பாடுகளின் பிரதிபலிப்பேயாகும்.

உலக இலக்கிய வரலாற்றை நோக்கினால், இலக்கியம் என்பது உணர்ச்சியின் வெளிப்பாடே; பயிற்சியினாலன்றி இலக்கியகர்த்தாவினது பாவனை யினாலும், அவனையும் மீறிய உள்ளார்ந்த உணர்ச்சி வேகத்தினாலுமே கவிதை முதலானவை படைக்கப் படுகின்றன என்னும் கோட்பாடு தோன்றியதையடுத்தே இப்பிளவு, முனைப்பாகத் தென்படலாயிற்றென்பது புலனாகும்.

இலக்கிய உலகில் நிலவும் இப்பாகுபாட்டையும் பிளவையும் சிற்சில விகற்பங்களுடன் வெவ்வேறு ஆசிரியர்கள் வெவ்வேறு வகையிற் கூறிப்போந்தனர். உதாரணமாக டி குயின்ஸி என்பவர் இலக்கியத்தை 'ஆற்றல் இலக்கியம்' Literature of power, அறிவு இலக்கியம் Literature of knowledge என இருவகைப் படுத்திக் கூறினர். பொசாங்கே (Bosanquet) என்பவர் இலக்கியத்தில் காணும் சுவையையும் அழகையும் வேறொரு விதத்திற் பாகுபடுத்துகிறார். மெல்லழகு (Easy beauty) வல்லழகு (Difficult beauty) என்பது அவரது பகுப்பாகும். இப்பாகுபாட்டைப் பயன்படுத்தும் பேராசிரியர் வி.ஜ. சுப்பிரமணியம் மேல் வருமாறு எழுதுகிறார்:

> எளிதில் தென்படும் இன்னோசை, உவமைப்பொலிவு, கதைப்பொருள் ஆகியவற்றால் துலங்குவது மெல்லழகு. இது நூலைப் படித்தவுடன் மிக எளிதாகப் புலப்படும். ஆய்வோ சிந்தனையோ இதனை அறியத் தேவையில்லை. இதிலிருந்து சற்று வேறானது வல்லழகு. இது நூலில் மறைந்து கிடப்பது; எளிதில் விளங்காதது. வெண்ணெயைக் கடைந்தெடுப்பது போல் அலசிப் பார்த்தபின் இலக்கியத்திலிருந்து துலங்குவது. துன்பியல், அருவம், பொருத்தமின்மை இணைவு முதலியவற்றால் உருவாவது. இலையால் மறைப்புண்ட கனிபோன்றது." (இலக்கிய பேழை. அறிமுகம், பக்.6)

சற்று மேலே நாம் எடுத்தாண்ட மேற்கோளில் க.நா. சுப்ரமணியம், 'கல்கி'யில் மெல்லழகு மாத்திரம் உண்டென்று இளக்காரமாகப் பேசியதைப் பார்த்தோம். அவ்விடத்தில் வல்லழகுக் கொள்கையையே இலக்கியத்திற் சிறப்பம்சமாக அவர் வற்புறுத்துகிறார் என்று நாம் கருதாலம். 'ஒன்று மற்றென்றைப் பழிக்கும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமை இது.

நாவலர் வழிவந்த இலக்கியப் பாரம்பரியம் அல்லது மரபு என்னும் பொருள்பற்றிக் கட்டுரை எழுதத் தொடங்கிய எனக்கு முற்கூறிய சிந்தனைகளே முதலில் மனத்தில் எழுந்தன. ஏனெனில் மேலே எடுத்துக்காட்டியிருப்பன எமது காலத்து 'இலக்கிய' நிலைமையின் சிற்சில அம்சங்களாகும். ஆற்றலிலக்கியம் - அறிவிலக்கியம், மெல்லழகு - வல்லழகு, ஜனரஞ்சகம் - சார்பற்ற கலையார்வம் என்பனபோன்ற பாகுபாடுகளை நாவலர் எண்ணியுமிருக்கமாட்டார். எனவேதான் நாவலர் மரபினை விளங்கிக் கொள்வதற்கு எமது காலத்துப் பிரச்சினை களைச் சுருக்கமாகவேனும் குறிப்பிட வேண்டிய தாயிற்று.

ஒருதாரணங் காட்டுவோம். இருபதாம் நூற்றாண்டிலே, குறிப்பாக 'மறுமலர்ச்சித்தமிழிலக்கியம்' வளர்ச்சியுற்ற காலப் பகுதியில், டி குயின்ஸியின் ஆற்றல் இலக்கியம், அறிவிலக்கியம் என்னும் பாகுபாடு பலராற் கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இப்பாகுபாட்டினை முதன் முதலில் செய்த டி குயின்ஸி, 1848-ல் மேல்வருமாறு ஒரு கட்டுரையில் எழுதினார்:

> அறிவிலக்கியத்தின் பணி போதிப்பதாகும். ஆற்றலிலக்கியத்தின் பணி உணர்ச்சியூட்டுவதாகும். முன்னது ஒரு சுக்கான்; பின்னது ஒரு துடுப்பு அல்லது கப்பற்பாய் எனலாம்.

அலெக்ஸாண்டர் போப் என்ற ஆங்கிலக் கவிஞன் பற்றி டி குயின்ஸி இவ்வாறு எழுதியவை அதே காலத்தில் இந்நாட்டில் உயிர் வாழ்ந்த நாவலருக்குப் புதிராகவே தோன்றியிருக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. டிகுயின்ஸி போன்றோர் (இலக்கியத் திறனாய்வாளர்)

இத்தகைய 'நுண்ணிய' பாகுபாடுகளை வகுத்திருப்பினும், இன்றுகூட பொதுப்படையாக நோக்குமிடத்து, எழுதப்பட்டதெல்லாம் ஆங்கிலத்தில் Literature என்றே வழங்கப்படும். உதாரணமாக 'Have you any literature on the Subject' என்னும் வினாவில் இலக்கியம் என்னும் சொல், "பாட்டு, உரை எவையாயினும் ஒரு பொருள் பற்றி விரித்தெழுதப்படும் அனைத்தையும்" (ச. சோமசுந்தர பாரதியார், **நற்றமிழ்**. பக்.19) குறிப்பதாகவேயுள்ளது. நாவலரைப் பொறுத்தவரையில், தேவாரத்தையும், திருக்குறளையும், அடிப்படையில் இலக்கியமாகவே கொண்டார். ஆனால் தற்கால இலக்கிய விமர்சகர்களில் ஒருவரான க. நா. சு. சில காலத்திற்கு முன் **திருக்குறள்** இலக்கியமன்று; அறநூலே என்று ஒரு வாதத்தைக் கிளப்பியிருந்தார். க. நா. சுப்ரமணியத்தை விதந்து கூற வேண்டிய அவசியமில்லை.நவீன இலக்கிய விமர்சகர்கள்பலர் இக்கருத்தையுடைவ வராகவே காணப்படுகின்றனர். உதாரணமாக, **புதுமைப்பித்தன் கட்டுரைகள்** என்னும் நூலிலே 'சமயத்தையும் கடந்த கலை' என்று மகுடமிடப்பட்ட கட்டுரையில் :

> தற்காலத்திய பண்டிதர்கள் இலக்கியம் எது என்று கவனிக்க முடியாமல், எல்லாவற்றையும் புகழ்ந்துகொண்டு இடர்ப்படுவதற்கு காரணம், அவர்கள் இலக்கியம் என்றால் என்னவென்று அறியாதது தான்.
>
> இவர்கள் ஒழுக்கத்தையோ, தர்மத்தையோ, அல்லது மதத்தையோ பற்றிக் கூறுவது. அதாவது அணியலங்காரங்களுடன் கூறுவது எல்லாம் கவிதை என்று கூறி இடர்ப்படுவதின் காரணம் இதுதான்.... கவிதையைப் போதனைக்குரிய கருவியாக உபயோகப்படுத்தும் வரை அது கவிதையாக இருக்காது. அதன் ரசனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டுவிடுகிறது. ஒழுக்கமோ, தர்மமோ, அல்லது மோட்சமோ இவற்றிற்காக எழுதப்படும் கவிதை, கவிதையாகாது. ஒழுக்கமும், தர்மமும், மோட்சமும் கவிஞனது உள்ளத்தில் ஊறி, இருதயத்தின் கனிவாக வெளிப்படும் இசைதான் கவிதையாகும்.

என்று அழுத்தம் திருத்தமாகக் கூறும்பொழுது திருக்குறள் போன்ற ஒரு நூல் இலக்கியமா என்ற ஐயம் இக்கூற்றைப் படிப்போருக்கு ஏற்படாமற் போகாது. "இருதயத்தின் கனிவாக வெளிப்படும் இசைதான் கவிதை" என்று புதுமைப்பித்தன் முடிவாய்க் கூறுகையில், "ஆற்றலிலக்கியத்தின் பணி உணர்ச்சியூட்டுவதாகும்" என்று டி குயின்ஸி கூறியதே எமக்கு நினைவுக்கு வரும். இவையெல்லாம் இலக்கியம் பற்றி இந் நூற்றாண்டிலே எழுந்துள்ள சில முரண்பாடுகளையே எமக்குணர்த்து கின்றன. திருக்குறள் போன்ற அறவியற் சார்புடைய நூல்தான் போகட்டும். ஆற்றலிலக்கியக் கொள்கையைப் பிடிவாதமாகவும் நெகிழ்வற்ற முறையிலும் பற்றிக் கொள்பவர்கள் சங்கமருவிய காலத்து நூல்களை மட்டுமன்றி, சான்றோர் செய்யுள்களையுமே 'உணர்ச்சியூட்டும்' பண்பு அற்றன என நிராகரிப்பதைக் காணலாம். கவிதையில் மெல்லழகை வற்புறுத்தி வந்த டி. கே. சிதம்பரநாதமுதலியார், 'கவியும் உருவமும்' என்னும் கட்டுரையில் இதய ஒலி. பக். 164) எளிமை இல்லை என்ற காரணத்துக்காகப் புறநானூற்றுப் பாடல்களை அலட்சியப்படுத்துகிறார். இவ்வடிப்படை நோக்கிலேயே புதுமைப்பித்தன் (மேலே குறிப்பிட்ட கட்டுரையில்), இவ்வாறு கூறுகிறார்.

கவிதையின் அமைப்பும், உணர்ச்சியும் தான் கவிதையின் உரைகல். தமிழ்க் கவிதையை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று, பழைய இலக்கியமான சங்க இலக்கியங்கள்; வெறும் யதார்த்தவிஸ்தரிப்புக்கள்; புகைப்படக் கவிதை என்று கூறிவிடலாம். அதற்குப் பிறகுதான் கவிதையின் உண்மையான வளர்ச்சி, கம்பன்வரை உள்ள பெருங் கனவுகள்

கட்டுரையாசிரியர் குறிப்பிடும் இரு பிரிவிலும் அவரது தனிப்பற்று எப்பிரிவின் மீதுள்ள என்பது வெளிப்டை. இலக்கியத்துக்கு ஒரு தலைச்சார்பான வரைவிலக்கணம் கூறுவதன் விளைவாகவே சான்றோர் செய்யுள்களையே கண்மூடித்தனமாகக் கைவிடும் பரிதாபகரமான நிலைமை ஏற்படுகிறது. எமது காலத்து இலக்கிய முரண்பாட்டுக்கு இவ்வவல நிலையை விட வேறு சிறந்த உதாரணம் தேவையில்லை.

இவற்றையெல்லாம் அவதானிக்கும் போதுதான், நாவலர் வழிவரும் இலக்கிய நோக்கும் போக்கும் குறிப்பிடத்தக்கனவாய் எமக்குத் தோன்றுகின்றன. முதலில் ஆறுமுகநாவலரவர்கள் பிரபந்தத் திரட்டு முதல் பாகத்திலே இடம் பெற்றுப் பின்னர் பதிப்பாளர்களால் பால பாடம் நான்காம் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள 'தமிழ்ப் புலமை' என்னும் வியாசத்தில் மேல்வரும் பகுதிகள் இடம் பெற்றிருக்கின்றன:

திருவள்ளுவர் குறள். நாலடியார் முதலாகிய நீதி நூல்களைப் பதப்பொருளுடனே கற்றறிந்துகொள்க........

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்னும் அருட்பாக்களைப் பண்ணுடன் ஓதவும், சுத்தாங்கமாக ஓதவும் பழகிக்கொள்க......

பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்த புராணம், உபதேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்த புராணம், உபதேச காண்டம்,கோயிற் புராணம், காசி காண்டம், கூர்ம புராணம், சேது புராணம், காஞ்சிப் புராணம், திருத்தணிகைப் புராணம், பதினொராந் திருமுறையிற் பிரபந்தங்கள், குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த பிரபந்தங்கள் முதலாகிய இலக்கியங்களை ஆராய்ந்தறிக.........

திருவள்ளுவர் குறள் பரிமேலழகருரை, திருச்சிற்றம்பலக் கோவையார் நச்சினார்க்கினியருரை (திருக்கோவையாருக்கு உரையெழுதியவர் பேராசிரியரே என்பது பெரும்பான்மை ஆய்வாளர் இன்று கூறும் முடிபாகும்) கல்லாடம் நச்சினார்க்கினியருரை என்பனவற்றைக் கற்று, இடைவிடாது, பலகாலும் உளங்கொளப் பயிலுக.........
.... இலக்கணங்களைக் கற்றறிந்து, தாம் கற்ற இலக்கியங்களில் இவ்விலக்கண விதிகளை அமைத்துக் பழகுக.

நாவலரவர்களின் இலக்கிய நோக்கை மட்டுமன்றி, அவரது கல்விக் கொள்கையையும் தெளிவுபடுத்தும் வகையில் அமைந்த இவ்வியாசத்தில் முக்கியமான சில பந்திகளையே இங்கு எடுத்தாண்டுள்ளேன். புராணங்களைப் பற்றிக் கூறுகின்ற பகுதியில் அவற்றை 'இலக்கியங்கள்' எனச் சிறப்பித்திருப்பதும் கவனிக்கத்தக்கதே. சைவசமயச்சார்பு இருப்பினும், மதக்காழ்ப்புக்கு இடங் கொடாமல் நூல்களைக் குறிப்பிடுவதும் குறிப்பிட வேண்டியதொன்றே. இலக்கியத்தைக் கூறுபடுத்தாமல், முழுமையாக நோக்கும் தன்மையை இப்பகுதியிற் காணலாம்.

புராணங்களைத்தானே பெரும்பாலும் 'இலக்கிய' ங்களாய்க் கூறியுள்ளார் நாவலர் என்று சிலருக்குத் தோன்றலாம். அந்த ஐயம் நியாயமானதும் ஆகும். எனினும்

தேவாரம், திருவாசகம், முதலிய அருட்பாக்களுக்கும், புராண இலக்கியங்களுக்கும், உரைகளுக்கும் குறிப்பாக இலக்கியச் சிறப்புடைய உரைகளுக்கும் நுட்பமான வேறுபாடுகளை நாவலர் காட்டியிருக்கிறார் என்பதும் நுணுகி நோக்குவோர்க்குப் புலனாகும். புராணங்களைப் பற்றி இவ்விடத்தில் ஒன்று கூறுதல் பொருத்தமாயிருக்கும். வரலாற்று அடிப்படையிலே பார்க்கும்போது நாவலரவர்கள் புராணங்களைத் தனியே சமய நூல்களாக மாத்திரம் கருதினார் என்று கூறவியலாது. **தணிகைப் புராணம்** பதிப்பாசிரியர் (1959) த.ச.மீனாட்சிசுந்தரம்பிள்ளை கூறுவது சிந்தனைக்குரியது:

.... புராண இலக்கியங்கள் பெருங்காப்பிய வகையைச் சார்ந்தன. வடமொழியில் உள்ள புராணநடை வேறு, தமிழ்மொழியில் உள்ள புராணநடை வேறு. வடமொழியிலே உள்ள புராணங்கள் வரலாற்றை மட்டும் அறிவிப்பன. தமிழ்ப் புராணங்கள் வரலாற்றுடன் காவிய இலக்கணங்களையும் பெற்று விளங்குவன. வடமொழியில் காவியங்கள் தனியே பொருந்துவன.

தமிழ்ப் புராணங்கள் அனைத்துக்கும் அபேதமாக இக்குறிப்புரை பொருந்தும் என நாம் கருத வேண்டியதில்லை. ஆயினும், 'தமிழ்ப் புலமை' என்னும் வியாசத்திலே நாவலர் குறிப்பிடும் புராணங்களில், பெரியபுராணம், கந்தபுராணம், காஞ்சிப்புராணம், திருத்த்ணிகைப் புராணம் முதலியன 'இலக்கிய ' த்தரத்திலும் உயர்ந்து விளங்குகின்றன என்பதை மறுப்பவர் இரார். அந்த வகையில் நாவலரவர்களின் அளவுகோல் இலக்கிய நயத்தையும் உள்ளடக்கியதாய் இருந்தது. என்பது கூறாமலே விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் மரபில் வந்த நா. கதிரைவேற்பிள்ளையை ஞானாசிரியராகப் பெற்றதனாலோ என்னவோ தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் நாவலர் குறிப்பிட்ட புராணங்களையே சிறந்த காவியங்களாகக் குறிப்பிட்டிருக்கிறார்:

> முன்னைத் தமிழ்ப் பெரும் புலவரும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பாட்டும், காவியமும் பல அமைத்திருக்கிறார். ஐம்பெருங்காப் பியம், பெரியபுராணம், கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம், காஞ்சிப் புராணம், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருப்புகழ், முதலிய தமிழ்ப்புராணங்கள் முதல் முதல் நன்னோக்கத்துடன் எழுதப்பட்டன. நன்நோக்கத்துடன் எழுதப்பட்ட புராணங்களில் இயற்கை உண்டு. பாட்டு உண்டு, இறை உண்டு, அறம் உண்டு, ஒழுக்கம் உண்டு. அன்பு உண்டு, எல்லாம் உண்டு. புராணங்களின் உட்கிடக்கையை உணர்தல் வேண்டும்.
>
> (முருகன் அல்லது அழகு)

நாவலரவர்கள் இலக்கியம் பற்றிக் கொண்டிருந்த இசைவிணக்கமுடைய நோக்கு, அவர் மாணாக்கரிடத்தும் வெவ்வேறு அளவில் காணப்படுகிறது. உதாரணத்துக்கு, திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானாயிருந்தவரும், நாவலரின் மாணவகரும் ஆகிய யாழ்ப்பாணத்து வடகோவை சாபாபதி நாவலரையே எடுத்துக் கொள்வோம். இலக்கிய வரலாற்றின் திருந்தாத - முன்னோடிமாதிரி - என்று கருதத்தகும் வகையில் அமைந்த நூலொன்றை அவர் இயற்றினார். திராவிடப்பிரகாசிகை. (1889) 'தமிழ் இலக்கிய இலக்கண சாத்திர மெய்வரலாறுகளையெல்லாம் இனிதுபட எடுத்துப் போதிப்பது" என்பர். தமிழின் தெய்வப் பழமை மரபியல்,

இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், சாத்திர மரபியல், ஒழிபியல் என ஐவகைப் பிரிவு பெற்று விளங்கும் அந்நூலில் தமிழிலக்கியத்தை விரிந்த மனப்பான்மையுடனே விவரித்திருக்கிறார் ஆசிரியர். திருமுறையிலக்கியம், சங்க இலக்கியம், காவிய இலக்கியம், புராண இலக்கியம், இதிகாச இலக்கியம், பலவகைப் பிரபந்த இலக்கியம் என பொருள் அடிப்படையிலும் வடிவத்தின் அடிப்படையிலும் இலக்கியங்களைப் பாகுபடுத்தியிருக்கிறார்.

சபாபதி நாவலர் வேதவழக்கைப் போற்றுபவர் என்ற முறையிலும், தேவாரம் வேதங்களின் சாரம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும், "திருமுறையி லக்கியங்கள் திருவருளோத்துக்களா'தற் சிறப்புப்பற்றியும்" அவற்றின் வரலாற்றை முதற்கண் சொன்னார். இன்று பார்க்கும் எமக்கு இது காலமுரணாகத் தோன்றுவது இயல்பே. எனினும் இலக்கிய 'நயத்தின்' பெயரில் சங்க இலக்கியங்களையோ, சங்கமருவிய காலத்து நூல்களையோ விலக்கி வைத்தார் அல்லர்.

தமது சமய நம்பிக்கையின் காரணமாக, தேவார திருவாசகங்களை முதலிலே விவரித்தபின், "திருமால் திருவடிப் பத்திஞான வான்பயிர் வளர்த்தற்கு இன்றியமையா" ஞானாமிர்தமாம் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை அடுத்துக் கூறினார். அதையடுத்து சங்க இலக்கியத்திற்கும் திருமுறை இலக்கியத்திற்கும் இடையே அமைந்த திருக்குறள் வரலாற்றைக் கூறினார்.

'காவிய இலக்கியம்' என்னும் மூன்றாம் பிரிவில் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சூளாமணி முதலிய பேரிலக்கியங்களைக் காழ்ப்பு எதுவுமின்றிக் குறிப்பிடுவதைக் காணலாம். "இக்காவியங்கள் தொல்காப்பிய இயல் வழிபட்டு மேற்கூறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத் தமிழ்ச் சொற்பிரயோகம் பெரும்பாலும் மருவி, நவரசங்களுட் சிலவும் பலவுந் தங்கண் அடங்கக் கொண்டு உலகவியல், நீதி வைராக்கியம் முதலியவைகளை நன்று அறிவுறுத்துவன" என்றும், சிந்தாமணிக் காப்பியத்துக்கு நல்லுரை கண்ட நச்சினார்க்கினியர் உரையானது, "செய்யுட்களின் பொழிப்புத் திரட்டிச் சொன்முடிபு விளக்கி மேற்கோள் காட்டிப் பொருள் நுட்பந் தெளித்துக் கவி இருதயந் தோற்றிச் சிந்தாமணிக்கு நந்தா விளக்கம்" என்றும், சிலப்பதிகாரம் "முத்தமிழ் இலக்கியமான ஓர் சைனகாவியம்........ சிலம்பை முக்கிய விடயமாகக் கொண்டெழுந்த காவியமாகலின், சிலப்பதிகார மெனப்பட்டது" என்றும் 'பல்வகைப் பிரபந்த இலக்கியம்' என்னும் உப பிரிவில், "கலிங்கத்துப்பரணி. நளவெண்பாப் போலும்முன்னோர் பிரபந்தங்களும், குமரகுருபர முனிவர் இயற்றிய பிரபந்தங்களும், சிவப்பிரகாச முனிவர் இயற்றிய பிரபந்தங்களும்... இவைபோல்வன பிறவுஞ் செந்தமிழ்ப் பிரபந்த இலக்கியங்களாம்" என்றும் , வேறுசில பிரபந்தங்கள், "சொல்லணி பொருளணி, குழுமி விளங்கும் நல்ல தமிழ்ப் பிரபந்தங்கள்; கொழி தமிழ்க் கவிகள்" என்றும் சபாபதி நாவலர் ஆங்காங்கு எழுதும்பொழுது, அடங்கிய ஆனால் ஐயத்துக் கிடமில்லாதஇலக்கிய ரசனையைக் காண முடிகிறதல்லவா?

சபாபதி நாவலர் மொழிபெயர்த்து இயற்றிய சிதம்பர சபாநாத புராணம் என்னும் நூலிலே காவிய நயங்கள் சிறப்பாகச் சொல்லுமளவிற்கு இல்லையென்பது எவரும ஒப்புக் கொள்ளக்கூடிய செய்தியே. ..ஆனால் மேலே காட்டிய மேற்கோள் பகுதிகளில் அவரிட்த்து இருந்த கவியுள்ளம் ஆங்காங்குப் பளிச்சிடுகிறது என்பது கண்கூடு. அறவியல், ஒழுக்கவியல், சமயம், இலக்கியம்

ஆகியவற்றை வேறுபடுத்தி உணராமல்ஆற்றலையும் அறிவையும் இணைத்துணரும் பக்குவத்தை அவரது கூற்றுக்களிற் கண்டு தெளியலாம்.

இவ்வாறு அழுத்தமாகக் கூறுவதனால் நாவலர் மரபினர் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் பன்னலத் திரட்டாளர் என்றோ, பல கோட்பாடுகளின் கருத்துக் களையும் ஒருவாறு இணைத்துக் கொள்கிறவர்கள் என்றோ நாம் கருத வேண்டியதில்லை. தமக்கெனச் சிறப்பான நம்பிக்கைகள் சிலவற்றைக் கொண்டவராகவே இருந்தனர். எனினும் கண்மூடித்தனமாக இலக்கியத்தைத் தரம் பிரித்தவர் அல்லர் என்பதே மனங்கொள வேண்டியதாகும்.

இவ்விடத்திலே இன்னுமொரு குறிப்பையும் கூறிவைத்தல் பொருத்தமாயிருக்கும் என எண்ணுகிறேன். இலக்கியம் என்ற சொல் சில நூற்றாண்டுகளாகத் தமிழில் வழங்கி வந்திருப்பினும் மிகச் சமீப காலம்வரை அது பரந்த பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. உரையாசிரியர்களே இலக்கியம் என்ற பதத்திற்குப் பொருட் செறிவை ஏற்றினர் எனக் கருத இடமுண்டு. தொல்காப்பியத்தில் 'இலக்கியம்' எனும் சொல் வழங்கப் படவில்லை. பா, பாடல், செய்யுள் முதலிய சொற்களே இலக்கிய வகைகள் அனைத்தையும் குறித்து நின்றன. அவ்விலக்கிய வகைகளுள் உரைநூல்களும் அடங்கின எனக் கருதுதல் தவறாகாது. பாட்டுக்களால் இயன்ற நூல்களே மட்டுமன்றி உரைநூல்களும் இலக்கியமே என்னும் கருத்தைப் பலர் ஏற்றுக்கொள்ளாத 'இருண்ட' காலப் பகுதியில் உரைநடை நூல்கள் இயற்றி உய்யும் நெறிகாட்டியவர் நாவலர். அதனாலேயே "வசன நடை கைவந்த வல்லாளர்" என்னும் தனிச் சிறப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குஏற்படுவதாயிற்று.பொருளின் அடிப்படையில் நன்னோக்கம் உடைய நூல்களை 'இலக்கியம்' என்று நாவலர் கொண்டமையாலேயே தொல்காப்பிய நெறியைப் பேணிய அதேவேளையில் நவீன கல்வி முறைக்கேற்ற 'இலக்கிய' நூல்களையும் இயற்றுவராயினார்.

இக்கண்ணோட்டத்திலே பார்க்கும் பொழுது இந்நூற்றாண்டிலே, உரைநடையை ஆதாரமாகக்கொண்டு எழுந்த புனைகதை, நாடகம்முதலியன அப்பழுக்கற்ற இலக்கியங்களே என்பது போதரும். நாவலர் இருந்தால் இதனை உவந்தேற்றிருப்பார். எனினும், சில வருடங்களுக்கு முன் இந்நாட்டிலே இலக்கிய ஆக்கத்திற்கு உரிய மொழிபற்றிய சர்ச்சை எழுத்தாளர் மத்தியில் எழுந்தபோது, நாவலர் மரபு பேசும் சில செந்தமிழ்க் காவலர்கள் நவீன இலக்கியப் போக்கையும் நோக்கையும் நையாண்டி செய்து மறுத்துரைத்தது வேடிக்கையேயாகும். இவர்கள் இலக்கிய வரலாற்றையும் இலக்கியத்தின் பண்பையும் பணியையும் தெரியாதவர்கள் என்று கூறுவதன்றி வேறென்ன கூற வேண்டும்? எத்தகைய நல்ல மரபிலும் காலப்போக்கிலே சிற்சில கோட்டங்களும் பிறழ்ச்சியும் ஏற்பட்டுவிடுகின்றன. முற்கூறிய வாதப்பிரதிவாதத்தின் போது 'செந்தமிழ் வழக்கு' ப்பற்றி நா வலிக்க உரைத்தோரது சிறுபிள்ளைத் தனமானதும். மட்டரகமானதுமான பிரலாபம் நாவலர் வழிவந்த இலக்கிய மரபின் மறுதலிப்பு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

"கல்வி கேள்விகள் இல்லாதவர்கள் கடவுளை அறிந்து வழிபட்டு உய்யமாட்டார்கள்" என்று கல்விக்குக் குறிக்கோள் கூறியவர் நாவலர் என்பது நாமறிந்ததே. எனினும் அந்நோக்குக் கொள்கை இலக்கிய ரசனைக்குத் தடையாயிருக்கவில்லை என்பது இக்காலத்தவர் பலர் மனங்கொள்ள வேண்டியது ஒன்றாகும். இதனை வேறொரு வகையாகவும் நாம் எடுத்து விளக்கலாம்.

நாவலரவர்கள் தமது அடிப்படை நம்பிக்கைகளுக்கியைய புராணக் கருத்துக்களை - சமயப் பொருளை - சிரமேற்கொண்டவர். எனினும் **சீவகசிந்தாமணி** போன்ற சமணச் சார்புடைய காவியத்தைப் போற்றத் தவறவில்லை. அந்நூலை அவரே பதிப்பிக்க எண்ணியிருந்தார் என்பதும் தெரிந்ததே.ஆனால் இடைவிடாத சமயப் பணியில் ஆழ்ந்து போயிருந்த அவருக்கு காவியரசனை இன்றியமையக்கூடிய ஒரு பொருளாகவே இருந்தது. அவ்வின்பத்தையும் தியாகஞ் செய்தார் என்றும் கூற இடமுண்டு. ஆனால் நாவலர் வழிவந்தவர்கள் பலர் சிறந்த ரசிகர்களாயிருந்திருக்கின்றனர். 'வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை' என்னும் கட்டுரையில் (**கந்தபுராணகலாசாரம்**.பக். 31) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்.

> நாவலர் அவர்களுக்குப் **பெரியபுராணம்**. போலே, பொன்னம்பலபிள்ளைக்குக் **கம்பராமாயணம்** நரம்புத் துய்களிலும் ஊறிக்கிடந்தது. சீவகசிந்தாமணியிலும் பிள்ளைக்கு விசேஷ பயிற்சி உண்டு.. **கம்பராமாயண** ரசனைகளையும் **சிந்தாமணி** முதலிய காவிய ரசனைகளையும் கந்தபுராணத்துக்கு வியாக்கியானம் செய்யும் போது ஏற்ற ஏற்ற இடங்களில் பொன்னம்பலபிள்ளை அள்ளிச் சொரிவார். அது வித்துவான்களாகிய மது கரங்களுக்குப் புத்தம்புதிய அமிர்தமாய்ப் பொங்கிக் கொண்டிருக்கும்

ஒழுக்கத்திலும் சமயத்திலும் கடுங்கண்டிப்பானவராய் இருந்த நாவலர், காவிய ரசனையை உள்ளடங்கலான முறையில் மாணவர்களுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்திருத்தல் கூடும். எனினும் நாவலர் அவர்களுக்கு மருமகரும் மாணாக்கருமான பொன்னம்பல பிள்ளையிடத்து அபாரமாக வாய்க்கப் பெற்றிருந்த காவிய ரசனை நாவலர் வழிவந்தது என்றே கொள்ள வேண்டும். பொன்னம்பல பிள்ளையிடம் காவிய ரசனையைப் பெற்றவர்கள் பலர். பொன்னம்பலபிள்ளை காலத்திலிருந்து வழிவழிவரும் கம்பராமாயண ரசனை இன்று ஜீவந்தர்களாயுள்ள பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் வரை பேணிப் போற்றப் பட்டு வந்துள்ளது எனலாம். இது குறித்து பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் கூற்று கவனிக்கத்தக்கது.

> பெரியபுராணம், கந்தபுராணம், பாரதம், கம்பராமாயாணம், முதலிவைகளுக்கும் பொன்னம்பலபிள்ளை கூறிய உரைக் குறிப்புக்கள் கையெழுத்துப் பிரதிகளாய் அவருடைய மாணவ பரம்பரையிலிருந்து வருகின்றன. அவை தாய்நாட்டிலும் பரவியிருக்கின்றன. எனக்குக் கிடைத்ததொரு கம்பராமாயணக் குறிப்பை அண்ணாமலைப் பல்கலைக்கழக உபவேந்தரும், ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்களும் கேட்டுக்கொண்டபடி கம்பராமாயணப் பரிசோதனதுக்கு உபகாரமாக மேற்படி பல்கலைக்கழகத்துக்கு அண்மையிற் கொடுத்து விட்டேன்.

(சிந்தனை களஞ்சியம், 1978 - பக். 218)

நாவலர் பாடசாலையில் 1917 ஆம் ஆண்டில் குமாரசாமிப் புலவர் தலைமையில் தாபிக்கப்பெற்ற காவிய வகுப்பிற் கற்றுத்தேறிய கணபதிப்பிள்ளை அவர்கள் நாவலர் வழிவரும் காவிய இரசனைக்கும் நாம் காணக்கூடிய சாட்சியாக விருக்கிறார் என்று கூறுவதில் தவறில்லை.

நாவலர் தென்னிந்தியாவுக்குப் போகிற காலங்களில் அவருடன் சென்ற பொன்னம்பலப்பிள்ளையிடம் காவியங்களைக் கற்றுணர்ந்து சுவைத்தோர் பலராவர். சபாபதிச் செட்டியார் என்பவர் வீட்டில் பிள்ளையவர்கள் 'நடாத்திய' இலக்கிய வகுப்புக்கள் பிரசித்தம். அதுபோலவே காவியங்களைக் கற்பதற்காகத் தென்னிந் தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தோரும் பலராவர். **தணிகைப்புராணம்** திருவாடுதுறை, ஆதீனப் பதிப்பு முகவுரையில் த.ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை பின்வருமாறு எழுதியுள்ளார்:

> இப்போது ஆதீன வெளியீடாக வரும் இப்புராணக் குறிப்புரை, என் தமிழாசிரியர்களில் ஒருவரும் இவ்வாதீன வித்துவானுமாகிய ஸ்ரீ பொன்னோதுவா மூர்த்திகள் ஸ்ரீ சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர் அவர்களிடத்திலும், ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகளிடத்திலும்..... பாடங் கேட்டபடியே எழுதி வைத்திருந்த பெறலரும் சரக்கறையாகிய குறிப்புரைகளாம்... ஸ்ரீ பொன்னோதுவாமூர்த்திகள் யாழ்ப்பாணத்து ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் மருகரும் மாணவகரும் ஆகிய ஸ்ரீ பொன்னையாபிள்ளையவர்கள் பால் திருவாடுதுறை மகாலிங்கம் பிள்ளையுடன் **கம்பராமாயணம்** கேட்பதற்கு முன்னரேயே **தணிகைப்புராணம்** முதலியவற்றை நன்கு ஆராய்ந்து பாடங்கேட்டவர்கள்...... இக்குறிப்புரை எழுதி வைத்துள்ள காலம் ஸ்ரீமத், உ..வே. சாமிநாதையர் அவர்கள் முதன்முதலாக ***சீவகசிந்தாமணியைப்*** பதிப்பித்த கி.பி. 1887 ஆம் ஆண்டின் முன்னரென்று தெரிகிறது...... இனி, இத்தணிகைப்புரணத்தை முதன்முதலாக யாழ்ப்பாணத்து ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் 1883 ஆம் ஆண்டிலே அச்சிட்டார்கள்...

நாவலர் வழிவரும் மரபு என்று நாம் கூறும் போது சி. வை. தாமோதரம்பிள்ளை, பொன்னம்பலபிள்ளை,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குமாரசுவாமிப் புலவர் ,நா.கதிரைவேற் பிள்ளை முதலியோரதுபங்களிப்பையும்அவர்போன்ற ஏனையோரின் பங்களிப்பையும் சேர்த்தே நாம் பொதுவாய்க் குறிப்பிடுகின்றோம். இம்மரபு, காசிவாசி செந்திநாதையர், மேலைப்புலோலி சைவசித்தாந்த மகாசரபம் நா. கதிரைவேற்பிள்ளை, சங்கர பண்டிதர் போன்ற வைரம்பாய்ந்த சித்தாந்திகளை மட்டுமன்றி இலக்கியத் துறையிலே ஈடுபாடுடையவராய் விளங்கிய தாமோதரம்பிள்ளை, பொன்னம்பலபிள்ளை, அம்பலவாண நாவலர், சபாபதி நாவலர் முதலியோரையும் தன்னுள் அடக்குகிறது என்பது நினைந்து கொளத்தக்கதாகும். இவ்வாறு பாகுபடுத்துவதே அத்துணைப் பொருத்தமன்று எனத் தோன்றுகிறது. ஏனெனில், காசிவாசி செந்திநாதையரின் **கந்த புராண நவநீதம், தேவாரம் வேதசாரம்** முதலியன அடிப்படையில் சமயப் பொருள் பற்றியனவாயிருப்பினும், அவற்றில் உள்ளார்ந்த வகையிலே இலக்கிய உணர்வு இழையோடுகிறது என்பதே பொருத்தமாகும் .இவ் வாறு இலக் கியத் தை , 'அறிவிலக்கியம்','ஆற்றலிலக்கியம்' என இருகூறுபடுத் தாமையே நாவலர் மரபின் பிரதான பண்புகளில் ஒன்று என்பது வற்புறுத்தப்பட வேண்டிய தொன்றாகும்.

இவ்விடத்திலேயே இலக்கியத்துக்கும் பண்பாட்டுக்கும் உள்ள பிரிக்கவியலாத பிணைப்பு துலக்கமடைகிறது. "**கந்தபுராண கலாசாரம்**" என்ற தொடரை, பண்டிதமணியவர்கள் பயன்படுத்துவது இப்பொருளிலேயே எனலாம். இன்றைய யுகத்திலே கந்தபுராண உணர்வு மட்டும் வாழ்க்கைக்குப் போதாது. அது வேறு விஷயம். ஆனால் தத்துவத்தையும் பண்பாட்டையும் இலக்கியத்துடன் இணைத்துக் காணும் நிலைக்குப்

பொருத்தமான குறியீடாக, 'கந்தபுராண கலாசாரம்' என்னுந் தொடர் கச்சிதமாக அமைந்துள்ளது எனலாம்.

> ஔவையாரிலும் திருவள்ளுவரிலும் பாரதத்திலும் இராமாயணத்திலும் முழுகித் திளைத்துத் திருமுறைகளும் சிவபுராணங்களும் பயிலும் ஆண்களையும் பெண்களையும் நாம் ஆக்கி வைத்திருக்க வேண்டாவா?

என்று சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கவலையுடனும் ஏக்கத்துடனும் வினவும்போது நாவலர் மரபின் குரலையல்லவா கேட்கின்றோம்?

நாவலர் மரபின் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் மக்கட் சார்பு ஆகும். அதாவது பாரதியார் **பாஞ்சாலிசபதம்** முன்னுரையில் எழுதியதுபோல, அவருக்குப் பல்லாண்டுகள் முன்னதாகவே, "தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி" எழுத முனைந்தவர் நாவலர். சமய, தத்துவத்துறையில் அவர் வழிவந்தோர் இப்பண்பைத் தக்கவாறு வளரத்துப் பயன்படுத்தவில்லையெனினும், நா. கதிரைவேற்பிள்ளை போன்றோர் அப்பண்பைப் பேணினர் எனலாம். **நாவலர் சரித்திரம்** எழுதிய த. கைலாசபிள்ளை அவர்களின் கூற்றொன்று இவ்விடத்துப் பொருத்த மாயிருக்கிறது:

> முன்னிருந்த எங்கள் சமயாசாரியர்கள் தாம் தரிசனஞ் செய்யப்போன தலங்களில் எல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரோ தாம் போன இடங்களிலெல்லாம் லோகோபகாரமான சைவப் பிரசங்கங்கள் செய்து வந்தனர்--------வசனம் போலப்பாட்டுக்கள் இக்காலத்திற் பிரயோசனமுடைவைகளல்ல என்று கருதியே பாட்டுப்பாடுதலை இவர் குறைத்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மேற்கோளில் இடம்பெறும் சொற்றொடர்கள் சில கூர்ந்து கவனிக்கத்தக்கன. "லோகோபகாரம்". "பிரயோசனம்" என்பனவே நாவலரது மக்கட்சார்புக்கு விளக்கஞ் செய்கின்றன. இப்பயன்பாட்டு நோக்கை, சி. கணபதிப்பிள்ளை அவர்கள் மேல்வருமாறு கூறியுள்ளார். "ஆறுமுகநாவலர் எல்லாருக்கும் விளங்கத்தக்க தெளிவான நடையில், படிப்படியே பயன்தரும் வகையில் புத்தகம் எழுதவும் பதிக்கவும் நேர்ந்தது" நமது நாடும் மக்களும் நன்னிலை யடைதல் வேண்டும் என்பதற்காகவே, மக்கட் சார்பினாலேயே, நாவலர் தமிழிலே முதன் முதலாகப் பிரசங்கம் செய்ததும், நல்ல முறையில் கட்டுரைக்ளை எழுதியதும் பாடநூல்கள் எழுதி வழிகாட்டியதும், ஆங்கிலத்தில் உள்ள குறியீட்டு முறைமயைத் தமிழ் வசன நடையிற் புகுத்தியதும், சைவ - ஆங்கில பாடசாலையை முதன்முதல் ஆரம்பித்ததும் நிகழ்ந்தன எனலாம்.

இக்கட்டுரையின் முற்பகுதியிலே நான் விவரித்துள்ள இலக்கியப் பிளவுகளின் விளைவாகவும் தருக்கரீதியான வளர்ச்சியாகவும் இக்காலத்திலே சில எழத்தாளர்கள் தமது சூழலிலிருந்து அந்நியப்பட்டு, புதுமுறைக் கவிதை, புதுமுறை நாவல் - New Wave - என்றெல்லாம் மக்களுக்குச் சிறிதும் விளங்காத வார்த்தைகளைப் 'படிமங்கள்' என்றும், 'வசன கவிதை' என்றும் கூறி, தம்மையும் இலக்கிய உலகையும் ஏமாற்றிக்கொள்ளும் போதுதான், பிளவுபடாத இலக்கிய மரபின் சிறப்பியல்பு நன்கு தெரிகிறது.

நாவலர் அவர்கள் எந்த விஷயத்தையும் சிறப்பாகச் சமயநோக்கிலே சீர்தூக்கியவர். எனினும், மக்களிலே சமய அடிப்படையில் வேறுபாடு காட்டியவர் அல்லர். பொதுவிஷயங்களில் - கத்தோலிக்க மக்களுடன்

தோளோடு தோள்நின்று இயக்கங்களில் ஈடுபட்டவர் என்பது நன்கு அறியப்பட்ட செய்தியேயாம். அதைப்போலவே கல்வித் துறையிலும் இலக்கியத்துறையிலும் நாவலர் வழிவந்த உழைப்பாளிகள்' லோகோபகாரமான' வழியில் கருமங்கள் ஆற்றவே முயன்றனர். உதாரணமாக, "நாவலர் அவர்களுக்குப் பின், நாவலர் அவர்களைப் போலவே நமது நிலையையும் நமது தேசத்தின் போக்கையும் நன்கு சிந்தித்தவர் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை." நாவலர் வசன மூலம் தனது கருத்துக்களைப் பிரகடனஞ் செய்தார். துரையப்பாபிள்ளை கவிதைகள் மூலம் தமது சிந்தனைகளை வெளியிட்டார். நாவலர் கண்ணீரால் எழுதிய 'யாழ்ப்பாணச் சமயநிலை' போன்றதே பாவலர் தேசபக்தியோடு இயற்றிய 'யாழ்ப்பாண சுவதேசக் கும்மி'. அதிலே அவையடக்கத்துக்கு முதற் செய்யுள் வருமாறு:

தேசோப காரங் கருதியிக் கும்மியைச்
செப்புகின் றேனாத லாலெவரும்
லேசாய் விளங்க இலகு தமிழில்
இயம்புவ தேநலம் சங்கமின்னே

எவரும் இலேசாய் - எளிதில் - விளங்கும் பொருட்டு இலகு தமிழில் பாடுவதாகப் பாவலர் கூறும்பொழுது நாவலர், சுப்பிரமணிய பாரதியார் ஆகிய இருவரது குரலையுங் கேட்கக் கூடியதாயுள்ளது. பின்வரும் செய்யுள் ஒன்றில்,

கல்வித் திறனை யுலகோ றறியக்
கழறிட வில்லையிக் கும்மியை யான்
நல்வித மாகநம் நாடு திருந்த
நவிலுகி றேனடி சங்கமின்னே

என்று பாடும்பொழுது, வித்துவச் செருக்கு எதுவுமின்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடும்பொழுது, வித்துவச் செருக்கு எதுவுமின்றி, பழகுதமிழில் செய்யுள் இயற்றியதன் நோக்கம் எமக்குப் புலனாகிவிடுகின்றது. நாவலர் மரபில் சிறப்புவாய்ந்த பெருமக்களிலே ஒருவரான பாவலர் துரையப்பாபிள்ளையைப் போலவே கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, சமுதாய நோக்கும், தேசாபிமானமும், தமிழிலக்கிய ஆர்வமும் கொண்டு ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் இயங்கி வருவதும், நாவலர் மரபின் நவீன வெளிப்பாடு என்றே எண்ணத் தோன்றுகிறது, ஏனெனில் உண்மையான - உயிர்த்துடிப்புள்ள - மரபு என்பது கடுமையான வரையறை அற்றது; அது புனிதமான பெயர்ப் பட்டியலில் தங்கியிருக்காதது. காலத்துக்குக் காலம் தன்னைத்தானே புதுப்பித்தும், தனக்கு வேண்டிய ஜீவசத்துப் பெற்றும் இயங்கிச் செல்வதே மரபு ஆகும்.

இவ்வாறு பார்க்கும்போது நாவலர் மரபு என ஒன்று இருப்பதன் உண்மையையும், அது தொடர்ந்து இந்நாட்டிலே இயங்கி வந்துள்ளது என்பதையும், அதற்குச் சில சிறப்பியல்புகள் உண்டு என்பதனையும், வெளித தோற்றத்திற் சிற்சில மாற்றங்கள் தென்படினும், அம்மரபு இன்றைக்கும் வாய்ப்பாயுள்ள சில ஆக்கக் கூறுகளைக்கொண்டிருக்கிறது என்பதையும், அவற்றில் ஒருமுகப்படுத்த இலக்கிய நோக்கு, மக்கட் சார்பு, நாட்டு நல நாட்டம், என்பன சிறப்பானவை என்பதையும் அவை மறைமுகமாக வேனும் உள்ளார்ந்த சக்தியுடன் செயற்படுவதனாலேயே தற்கால ஈழத்துத் தமிழிலக்கியம் சிற்சில அம்சங்களில் தென்னிந்திய இலக்கியப் போக்கிலிருந்து வேறுபட்டு விளங்குகிறது என்பதையும் நாம் ஐயத்துக்கிடமின்றி உணரக் கூடியதாயிருக்கிறது.

(நாவலர் நூற்றாண்டுமலர், 1979)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக நாவலரும் சபாபதி நாவலரும்

ஆறுமுகநாவலர் அவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றிப் பல்வேறு துறைகளிற் பணியாற்றியோருள் 'நாவலர்' என்னும் பட்டம் பெற்றுத் திகழ்ந்தோர் இருவர். கோப்பாய்ச் சபாபதி நாவலர் ஒருவர்;சித்தன்கேணி அம்பலவாண நாவலர் மற்றவர். இவர்களுக்கும் திருவாவடுதுறை ஆதினகர்த்தவர்களே நாவலர்ப்பட்டம் வழங்கினர்.

சபாபதி நாவலர் வாழக்கையையும், பணியையும் நோக்குமிடத்து அவை பல அமிசங்களில் ஆறுமுக நாவலர் வாழ்க்கையையும்,பணியையும் அடியொற்றி யிருக்கக் காணலாம். நாவலர் அவர்களுக்கு இருபத்து இரண்டு ஆண்டுகள் பிற்பட்டுப் பிறந்த சு. சபாபதிப்பிள்ளை (1844 - 1903), அன்னார் மறைந்து இருபத்துநான்கு ஆண்டுகளுக்குப் பின் தேகவியோகமானார். ஐம்பத்தெட்டு வருடங்கள் வாழ்ந்த சபாபதிப்பிள்ளை, ஆறுமுக நாவலர் மரபின் குறிப்பிடத்தக்க பிரதிநிதிகளில் ஒருவராகத் திகழ்கிறார் என்பதில் தடையெதுவுமில்லை.

தமது பிறப்பிடமாகிய வடகோவையிலே ஜெகந்நாதையர் என்பவரிடம் ஆரம்பக் கல்வி பயின்ற சபாபதிப்பிள்ளை அக்காலத்தில் வாழ்ந்த சமஸ்கிருதப் பேரறிஞரான நீரவேலி சிவசங்கர பண்டிதரிடம் முறையாகக் கல்வி கற்றார். ஆறுமுகநாவலர், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை ஆகியோரிடத்திலும் இவர் பாடங்கேட்டவர் என்று சிலர் கூறுவர். எவ்வாறாயினும் அக்காலத்திலே யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஓர் இளைஞர் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் பெறக்கூடிய கல்வியனைத்தையும் அவர் பெற்றிருந்தார் எனத் துணிந்து கூறிவிடலாம்.

இந்நிலையில் சபாபதிப்பிள்ளையின் கல்வியையும், தகுதியையும், திறமையையும் கண்ட ஆறுமுகநாவலர் சிதம்பரத்திலே தாம் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராய்ப் பணிபுரியுமாறு அவரை அனுப்பி வைத்தார். நாவலரவர்கள் சபாபதிப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்தமையே அடிப்படையான ஒரு செய்தியை எமக்குணர்த்துகிறது. அதாவது சபாபதிப்பிளைக்குக் கல்வியில் அதிக ஈடுபாடு இருந்தது என்பதாகும். இவ்வீடுபாடே நாவலர் வித்தியாசாலையிலிருந்து அவர் விலகி மேலும் தமது அறிவுத் தேடலை மேற்கொள்ளுதற்கும் காரணமாயி ருந்தது எனக் கருதலாம்.

சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமைத் தமிழ்ப் போதகாசிரியர்ப் பதவியைக் கைவிட்ட சபாபதிப்பிள்ளை திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சென்று அங்கு பதினாறாவது மகாசந்நிதானமாய் வீற்றிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகசுவாமிகளிடம் அருளுபதேசம் பெற்றார். பின்னர்

அங்கேயே பன்னிரண்டு வருடங்கள் தங்கியிருந்து இலக்கிய இலக்கண சாத்திர நூல்களைக் கற்றுத் தமது கல்வியை மேலும் விருத்தி செய்து கொண்டார். அவரே ஒரு சந்தர்ப்பத்திற் கூறியது போன்று, திருவாவடுதுறை ஆதீனத்தில் "உண்மை நூலுணர்ச்சியும் மெய்யுபதேசமும்" பெற்றார். சுப்பிரமணிய தேசிகருக்கும், சபாபதிப்பிள்ளைக்கும் அணுகத் தொடர்பு ஏற்பட்டிருத்தல் வேண்டும். பிற்காலத்தில் சபாபதிப்பிள்ளை இயற்றிய நூல்களிலே குருவணக்கப் பாடல்களில் தேசிகரைப் போற்றுவதைக் காணலாம். திருமயிலை சே. சோமசுந்தரம்பிள்ளை கூறியிருப்பதைப்போல, சுப்பிரமணிய தேசிகரும், சப்பாபதிப்பிள்ளைபால் கொண்ட "அன்பின் மிகுதியால் அவ்வரைத் தமது அபிமான புதல்வராக வைத்து உபசரித்து வேண்டுஞ் சன்மானங்கள் செய்து கொண்டாடி வந்தனர்." அதுமட்டுமன்று, அவரே சபாபதிப்பிள்ளைக்கு 'நாவலர்' என்னும் பட்டத்தினையும் சூட்டி மகிழ்ந்தார். இவையெல்லாவற்றுக்கும் மேலாக திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை (1815- 1876) மறைந்ததன் பின் சபாபதி நாவலரையே ஆதீன மகாவித்துவானாக அமர்த்திக் கொண்டார். இத்தகைய நிகழ்வுகளினால் சபாபதி நாவலரது வாழ்க்கை பெருமளவிற்கு ஆதினத்துடன் இணைக்கப்பட்டது மட்டுமன்றி, பெரும்பான்மை தமிழ்நாட்டிலேயே கழியவும் நேர்ந்தது. சென்னையிலும் சிதம்பரத்திலும் அவர் முப்பத்தைந்து வருடகாலம் வசித்தார். அங்கு அவரிடம் கல்வி கற்றவரும் பலராவர். இவரிடம் கல்வி கற்றவர்களில் சிதம்பரம் அ. சோமசுந்தர முதலியார், விழுப்புரம் இராமசாமிப்பிள்ளை, மாகறல் கார்த்திகேய முதலியார், மயிலை க. சிங்காரவேலு முதலியார், சிதம்பரம் சிவராமச் செட்டியார், திருமயிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலசுந்தர முதலியார், சிதம்பரம் முத்துவேலாயுதபிள்ளை, மாவை வே. விசுவநாதபிள்ளை,சுழிபுரம் சிவப்பிரகாச பண்டிதர், வதிரி, சி. தாமோதரம்பிள்ளை என்போர் குறிப்பிடத் தக்கவர்கள். நீண்டகாலத் தமிழக வாழ்க்கையின் விளைவுகளும் பல. ஆறுமுகநாவலர் பரம்பரையில் சபாபதி நாவலர் சேர்ந்தும் சேராமலும் இருப்பதற்கும் இதுவே பிரதான ஏது எனலாம்.

மடாலயத் தொடர்பு காரணமாகவே சபாபதி நாவலருக்கும் ஆறுமுக நாவலர் 'வட்டத்தினருக்கும்' அவ்வப்போது சிற்சில முரண்பாடுகள் எழுந்தன என்று கூறத் தோன்றுகிறது. உதாரணமாக ஒரு சந்தர்ப்பத்தில் ஆறுமுகநாவலரது மருகரும் மாணாக்கருமான நல்லூர் வை. திருஞான சம்பந்தப்பிள்ளைக்கும் சபாபதி நாவலருக்கும் விரோதமுண்டாகியது. திருஞானசம்பந்தபிள்ளை 'தர்க்ககுடாரதாலுதாரி' என்ற புனைபெயரில் வெளியிட்ட கண்டனப் பத்திரத்திலே சபாபதி நாவலரை மட்டுமன்றி திருவாவடுதுறைப் பண்டார சந்நிதிகளையும் சற்றே இழுத்து எழுதியிருந்தார். சபாபதியார் அப்பத்திரங்களை மடாதிபதிக்கு அனுப்பியதோடு அப்பிரசுரம் "சமவாத சைவப் பிசாசாகிய ஞானப்பிரகாசர் மரபில் பிறந்தவனும், ஆறுமுகநாவலருக்கு மருகன் முறையாயுள்ளவனும் அவருடைய வித்தியா சாலையிற் கற்பவனுமாகிய" திருஞானசம்பந்தப் பிள்ளையால் எழுதப்பட்டது எனக் கடிதமும் எழுதியிருந்தார். சுப்பிரமணிய தேசிகரவர்கள் பிரசுரத்தின் பிரதியையும் கடிதத்தையும் ஆறுமுகநாவலருக்கு அனுப்பியிருந்தார். "சமவாத சைவப்பிசாசாகிய ஞானப் பிரகாசர்;" என்ற குறிப்பைக் கண்டு கோபங்கொண்ட ஆறுமுகநாவலர் "பிசாசு யார்?" என்ற மிக நீண்ட கடிதம் ஒன்று எழுதி மகாசந்நிதானத்துக்கு அனுப்பி வைத்தார். நாவலர் பிரபந்தத் திரட்டு என்ற நூலில் "அகோர சிவாசாரிய பத்ததி தூஷண கண்டனம்", "சபாபதிக் குருக்கள் வினா" என்னும் தலைப்புக்களிலே உள்ள இரு கட்டுரைகளும் மேற்படி கடிதத்தின் சாரம்சத்தை உள்ளடக்கியனவாகும் "சபாபதிக் குருக்களவர்களால் எழுதப்பட்டு நாவலரவர்களால் திருத்தப்பட்டவை" என்ற அடிக்குறிப்பு நூலைப் பதிப்பித்த த. கைலாசபிள்ளையால் இடப்பட்டதாதல் வேண்டும். சபாபதி நாவலரை முன்னிலைப்பாங்கில் கண்டிக்கும் காரசாரமான அக்கட்டுரைகளில் திருவாவடுதுறை ஆதீனம்பற்றிப் படர்க்கைப் பாடான பாங்கில் குறிப்புகள் இருப்பது நோக்கற்பாலது. தேவையேற்படின் மகாசந்நிதானங் களைக் கண்டிக்கவும் ஆறுமுகநாவலர் தயங்கவில்லை என்பதனையே இச்சம்பவம் நிரூபிக்கின்றது. ஆறுமுக நாவலரின் கடிதங் கண்ட தேசிகர்ஒரு வகையான சமாதானக் கடிதம் நாவலருக்கு எழுதினார் எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆறுமுக நாவலரைப் போலவே தமிழ் தந்த தாமோதரரும் அன்று மடாதிபதிகள் சிலரிடத்துக் காணப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டத் தயங்கினாரில்லை. அவர் எழுதிய பதிப்புரைகளைப் படிப்போர்க்கு இவ்வுண்மை புலப்படும். குறிப்பாக தமிழ் நூற்பதிப்பில் மடத்தலைவர்கள் போதிய அக்கறை காட்டாதிருந்தமையை மனக்கசப்புடன் தாமோதரம் பிள்ளை எடுத்துக்கூறினார்.

இவ்வாறு ஆறுமுகநாவலர் வட்டத்தினருடன் சில சமயங்களில் சபாபதி நாவலர் எதிர்வாதம் புரிய நேரிட்டபோதும், இலக்கிய, இலக்கண சாத்திர நூற்புலமை, கல்விப்பணி, நூல்வெளியீடு, சைவசமயப் பிரசாரம், பிறமத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டனம், பிரசங்கமுறை இவற்றில் ஆறுமுகநாவலர் தொடக்கி வைத்த பணிகளை விரும்பியோ விரும்பாமலோ பல வழிகளிலே தொடர்ந்து செய்து வந்தார். நாவலர் அவர்கள் பால் இறுதிவரை பெருமதிப்பு வைத்திருந்தார் என்பதும் வெளிப்படை. உதாரணமாக, அவர் வெளியிட்ட திராவிடப் பிரகாசிகை (1899) என்னும் முக்கியத்துவம் வாய்ந்த நூலில் "இலக்கிய மரபியல்" எனும் அதிகாரத்திலே கருங்குழி இராமலிங்கர் பாடல்களைத் "திருவருட்பாக்கள்" என்று கொண்டாடுவோரைக் கண்டிக்கும் பகுதியில் ஆறுமுகநாவலர் அவர்களின் "போலியருட்பா மறுப்பு" எனும் வியாசத்தைப் பிரமாணித்து எழுதிச் சொல்வதைக் காணலாம். நாவலர் பரம்பரையினரை இனங்கண்டு கொள்வதற்குரிய கடைசிக் கடுஞ்சோதனை அல்லது கட்டளைக்கல் அவர்கள் இராமலிங்கர் விடயத்தில் கடைப்பிடிக்கும் கண்ணோட்டமாகும். அதில் சபாபதி நாவலர் எதுவித ஐயத்துக்குமிடமின்றி "போலியருட்பா" மறுப்பினரையே சார்ந்து நின்றார்,

இவ்வாறு அடிப்படையில் சபாபதிநாவலர் ஆறுமுக நாவலர் பரம்பரையைச் சேர்ந்தவராயிருப்பினும் மேலே குறிப்பிட்டதுபோல, சிற்சில வேறுபாடுகள் இருப்பதும் கவனிக்கத்தக்கதே. நாவலர் பரம்பரை என்று கூறும்போது ஒரே அச்சில் வார்த்த - இம்மியும் வேறுபாடற்ற எல்லாப் பண்புகளிலும் ஒப்பான சீடர்களை நாம் கருதக்கூடும். ஆயினும் அவ்வாறு கற்பனை செய்வது நடைமுறைக்குப் பொருந்துவதன்று. பின்வந்த சீடர்களின் ஆளுமை அவர்களியங்கிய சூழலில் அவர்களைப் பாதித்த செல்வாக்குகள் உலகியல் நிலைமைகள் என்பன சிலபல வேறுபாடுகளைத் தோற்றுவித்திருக்கும் எனக் கூறுவது தவறாகாது.

அந்நிய கலாசார ஆதிக்கத்தை எதிர்த்தும், பிறசமய ஊடுருவல்களைத் தடுக்கு முகமாகவும் ஆறுமுகநாவலர் இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் மும்முரமான முயற்சிகளில் ஈடுபட்டிருந்த காலத்தில் தமிழ்,சைவம் என்பவற்றுக்கு ஓரளவேனும் பற்றுக்கோடாய் விளங்கியமை மடாலயங்களும் சிற்சில சமஸ்தான அவைகளுமேயாம். எனினும் பொதுநோக்காகப் பார்க்குமிடத்து இந் நிறுவனங்கள் புறவுலகைப் பற்றிய உணர்வு அதிகமின்றித் தம்மளவில் நிறைவுடையனவாய் இயங்கி வந்தன. அத்தகைய அமைப்பின் தவிர்க்க இயலா விளைவுகளாய்ச் சில விரும்பத்தகாப் போக்குகளும் நிலவின. தம்மைச் சார்ந்திருப்போருக்குத் தனிச்சலுகைகள் வழங்குதல், பிரச்சினைகளில் ஒருதலைச் சார்பாக முடிவெடுத்தல், குறுகிய குழு மனப்பான்மையுடன் விஷயங்களை எதிர்நோக்குதல், பரந்த சமுதாய சக்திகளுடன் சேர்ந்து இயங்காது விலகிநிற்றல், புதுமைக்குப் போதிய முக்கியத்துவம் அளிக்காதிருத்தல் என்பன இப்போக்குகளிற் சிலவாம். நாவலர் பெருமான் இப்போக்குகளைத் தமது பொது வாழ்க்கையின் தொடக்கத்திலேயே நுணுக்கமாகத் தெளிந்து கொண்டவர்.

இந்திய விஜயங்களின்போது அவர் இரு முக்கியஸ்தர்களைச் சந்திக்கவும், பழகவும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. ஒருவர் ஆறுமுகவர் அவர்களுக்கு 'நாவலர்' என்னும் பட்டத்தை அளித்துக் கௌரவித்தும் இலக்கணக்கொத்து முதலிய கடின நூல்களை அவரைக் கொண்டுபதிப்பித்தும், ஆதீன மகாவித்துவானாக இருந்த மீனாட்சி சுந்தரம்பிள்ளைக்கும் காட்டாத சிவஞானபாடியச் சிற்றுரை. பொழிப்புரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றை அவருக்குக் காட்டி மகிழ்ந்தவர்களுமான திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்கள்; மற்றவர் நாவலரவர்களின் ஈடிணையிலாப் புலமையையறிந்து அவரைக் கொண்டு திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையாருரை, தருக்க சங்கிரகம். அன்னம்பட்டீயம் என்பவற்றைத் தமது செலவில் அச்சிடுவித்தும், நாவலர் அவர்களின் ஐந்தாவது இந்தியப் பயணத்தின் போது தமது "அதிகாரத்தை அடக்கிக் கொண்டு" அவரைப் பலவாறு வேண்டித் தமது சமஸ்தானத்துக்கு வருவித்தும் பின்னரும் அவர்களைக் கொண்டே சேதுபுராணம் என்னும் சீரியநூலைப் பதிப்பித்து அச்சிடுவித்தவருமான இராமநாதபுரம் மன்னரின் சகோதரர் பொன்னுச்சாமித்தேவர் (1837 - 1870), சமயத் துறையிலும் அரசியல்துறையிலும் குறிப்பிடத்தக்க வகையில் செல்வாக்குடன் விளங்கியவர்கள் ஆதீனக் கர்த்தாவும், அமைச்சரவர்களும், அப்படியிருந்தும் அவர்கள் வாரி வழங்கியிருக்கக்கூடிய பட்டங்களுக்கும், பட்டாடை, பரிசுகளுக்கும், பண உதவிகளுக்கும் வசப்படாமல் தமது மகோன்னதமான இலட்சியக் கனவுகளுக்காகத் தன்னந்தனியனாய் அடிப்படைக் கொள்கைகளை விட்டுக்கொடுக்க விரும்பாதவராய் வாழ்ந்தார் ஆறுமுகநாவலர். ஆனால் அத்தகைய நெஞ்சுரமும் ஆன்மீகவீரமும் எல்லோருக்கும் எளிதில் வந்து பொருந்துவன அல்லவே! அவ்விலட்சிய நோக்குடனேயே தாம் பிறந்த ஊர்க்கோயிலாம் நல்லூர்க்கந்தசுவாமி கோவில் நிர்வாகிகளையும் அன்று கண்டித்தார். வடமாகாண அதிபராயிருந்த துவையினம் துரையுடனும் மோதிக்கொண்டார். "நாமார்க்குங் குடியல்லோம்" என்ற நன்னம்பிக்கை அவருக்கிருந்தது. இன்றைய சமூகவியற்

கண்ணோட்டத்தில் விபரிப்பதாயின் ஆறுமுகநாவலர் நிலையில் நிறுவனங்களுக்கு இலகுவில் தலைசாய்த்துத் தம்மை இழக்காதவர். ஆனால் அவர் பரம்பரையில் வந்தோர் அனைவரிடத்தும் அதே கண்டிப்பையோ மசியாத்தன்மையையோ எதிர்பார்த்தல் இயலாது. நாவலரை ஏனையோர் பலரிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது சமரசத்திறகு இடமளிக்காத இவ்வுறுதி நிலையேயாகும்.

இது விஷயத்திலே சபாபதி நாவலர், ஆறுமுகநாவலர் வழியினின்றும் சற்றுவேறுபடுகின்றார். சபாபதி நாவலர் தாம் வித்துவானாய் வீற்றிருந்ததிருவாவடுதுறை ஆதின மடாதிபதிகளுடன் மாத்திரமன்றி மதுரை ஆதீனம், சூரியனார் கோயில் ஆதினம் மடாதிபதிகளுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தவர். மதுரைத்திருஞானசம்பந்தர் ஆதினத்திலே மகாவித்துவான் பட்டம் பெற்றவர். இராமநாதபுரம் ஸ்ரீ பாஸ்கரசேதுபதி அவர்களிடம் பல சந்தர்ப்பங்களிலே பற்பல பரிசில்களையும், சன்மானங்களையும் பெற்றவர். சபாபதி நாவலர் ஞானாமிர்தம் பத்திரிகையை நடத்துவதற்கும் சிதம்பரம் செங்கழுநீர்ப் பிள்ளையார் கோவில் வீதியில் அச்சுக்கூடம் வைத்து நடத்துவதற்கும் பணவசதியும், இடவசதியும் அளித்தவர் சேதுபதிமன்னர். சிதம்பரத்திலே சேதுபதி ஒழுங்குபண்ணிக் கொடுத்த இடத்திலேயே கடைசிவரை வாழ்ந்தார் சபாபதி நாவலர். பாஸ்கர சேதுபதியின் விருப்பப்படியே சில தடவைகள் இராமநாதபுரத் துக்கு விஜயம் செய்து அவரது அவையிற் பிரசங்கங்கள் செய்தும்," மன்னருடன் தலயாத்திரை செய்தும் அவரது அன்புக்குப் பாத்திரராயிருந்து வந்தார். இதனால் 1891 ஆம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர் சபாபதி நாவலருக்கு மூவாயிரம் ரூபா சன்மானம் அளித்தார்.

சபாபதி நாவலர் சேதுபதி மன்னருக்கு மரியாதை செய்தது போலவே மன்னரும் அவருக்குப் பல வழிகளில் மதிப்புக் கொடுத்தார். உதாரணமாக, சேதுபதி அவர்கள் சபாபதி நாவலருக்கு எழுதிய கடிதங்களில்:

> சைவசிகாமணியாயும் பரசமய கோளரியாயும் விளங்கா நிற்கும் கனம் நாவலரவர்களுக்கு" என்றும், "சைவப் பயிர் தழைக்கப் பிரசங்க முடிமுழக்குடனும் விபூதி ருத்திராட்சம் பொலிவாகும் மின்னலுடனும் ஓங்கி வளரும் ஒரு முகிலாகிய கனம் நாவலர்கட்கு

என்று குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறே ஆதீனகர்த்தாக்களும் அவ்வப்போது சபாபதி நாவலரைப் பராட்டியுள்ளனர். சபாபதி நாவலரின் உத்தர கிரியைகள் நடைபெற்றபோது திருவாவடுதுறை ஆதீனத்தார் அனுப்பிய பட்டுப் பீதாம்பரம், மாலை. பரிவட்டம், முதலியன சாத்தப்பட்டனவெனத் தெரிகிறது. தமக்குப் பிடித்தவர்களுக்குப் பட்டங்களைத் தாராளமாய்க் கொடுக்கும் ஆதினங்களும் அரசவையும் சபாபதி நாவலரை "சைவ சூளாமணி" "நாவலரேறு" என்றெல்லாம் வருணித்தன. அத்தகைய பாராட்டுரைகள் அவரை மகிழ்வித்திருக்க வேண்டும்.

சபாபதி நாவலர் வெளியிட்டனவாக சுமார் இருபது நூல்கள் உள்ளன. *சிதம்பர சபாநாத புராணம்* (1885). *சிவகர்ணாமிர்தம். சதுர்வேத தாற்பரிய சங்கிரகம். பாரத தாற்பரிய சங்கிரம். இராமாயணதாற்பரிய சங்கிரகம். யேசுமத சங்கற்ப நிராகரணம்* (1879). *இலக்கண விளக்கப்பதிப்புரை மறுப்பு. திராவிடப் பிரகாசிகை. வைதிக காவிய தூஷண மறுப்பு. ஞான சூடாமணி. ஞானாமிர்தம். திருச்சிற்றம்பல யமகவந்தாதி.*

மாவையந்தாதி. சிதம்பர பாண்டிய நாயக மும்மணிக்கோவை. வடகோவைச் செல்வ விநாயகர் இரட்டைமணிமாலை. நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம். வதிரி நகர்த் தண்டபாணிக் கடவுள் பதிகம். புறவார் பனங்காட்டூர்ப்புற வம்மை பதிகம். சிவஞான யோகிகள் குருபூசை மஹோத்சவம். திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி என்பனவாம்.

இவற்றில் வடமொழி நூல்களின் மொழிபெயர்ப்பும் தல புராணங்களும் கோயில்கள் மீது பாடப்பெற்ற பிரபந்தங்களுமே பெரும்பாலானவை. *யேசுமதசங்கற்ப நிராகரணம்* போன்ற ஒரு நூலும் எழுதியமை நோக்கத்தக்கது. பிறரைச் சார்ந்துநின்று நூலியற்றியதன் விளைவை இந்நூல்களிற் காணலாம். இதே முறையிலே திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் இயங்கிக் கொண்டிருந்தார். இன்னுமொன்று கண்மூடித்தனமான பழமைப்பற்றையும் இவரது நூல்களிற் காணக்கூடியதாயிருக்கிறது. இதுவும் மடாலயத்துச் செல்வாக்கே என்று கருதத் தோன்றுகிறது. ஆதினத்தார் விரும்பிப் போற்றிய இலக்கிய, இலக்கண சாத்திர நூல்களையே சபாபதி நாவலர் போன்றோர் கற்றும் கற்பித்தும்வந்தனர். சுயமாகச் சிந்திக்கவோ, புதிய கல்விமுறைகளை எண்ணிப் பார்க்கவோ அவர்கள் ஊட்டிய சூழல் உகந்ததாயிருக்கவில்லை எஸ். வையாபுரிப்பிள்ளை கூறியிருப்பது போல,

> இவ்வாறு சொந்தக் கல்வி முயற்சியில் ஒருவர் ஈடுபடுவதற்கு இடங் கொடுக்கக் கூடியது ஆதீனம் அன்று. விரிந்த கல்வியுலகம் தான் அங்ஙனம் செய்ய வல்லது.

ஆறுமுகநாவலர் பரம்பரையைச் சேர்ந்தவர்களிற் சிலர் காலத்தின் தேவையையும், கட்டளைகளையும் தெளிவாக உணரவில்லை என்று கூறுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமாயிருக்கும். உதாரணமாகப் பழந்தமிழ்ப் பனுவல்களைப் பதிப்பிப்பதில் முன்னோடியாயும், முதல்வராயும் விளங்கிய சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் கருத்துக்களையும், வரலாற்று நோக்கையும்சபாபதி நாவலர் **திராவிடப் பிரகாசிகை** என்னும் நூலில் மூர்க்க வெறியுடன் தாக்குகிறார்.

புத்த மித்திரனார் இயற்றிய **வீரசோழியம்** என்னும் இலக்கணநூலை பெருந்தேவனார் உரையோடு 1881 இல் வெளியிட்டார். சி.வை. தாமோதரம்பிள்ளை. மற்றொரு இலக்கண நூலான **இலக்கணவிளக்கம்** 1889 ஆம் ஆண்டு அவரால் பதிக்கப்பெற்றது. இந் நூல்களின் பதிப்புரை களிலே அவர் கூறிய கருத்துக்கள் சிலவற்றையே சபாபதி நாவலர் கண்டித்து எழுதினார். அதனை இவ்விடத்திலே விவரித்தல் அவசியம் இல்லை. சபாபதி நாவலரின் கண்டனத்தின் தன்மையே குறிப்பாக நோக்கத் தக்கதாகும்.

வீரசோழியப் பதிப்புரைத் தொடக்கத்திலே சமஸ்கிருதத்துக்கும் தமிழுக்குமுள்ள தொடர்பைச் சிறிது விவரித்து விட்டுத் தமிழ் இலக்கிய சரிதத்தைக் காலமுறைப்படி பாகுபாடுசெய்ய முனைந்தார் தாமோதரம் பிள்ளை. தமிழியல் ஆய்வு வரலாற்றை நோக்குமிடத்து இப்பாகுபாடு முற்பட்ட முயற்சிகளில் ஒன்றென்பதில் எதுவித ஐயமுமில்லை. மொழிநூல் அறிவு, சரித்திர ஆராய்ச்சி, கல்வெட்டு ஆய்வு என்பன மிகக் குறைந்தளவே நிலவிய காலத்தில் எழுதிய தாமோதரம்பிள்ளை, அன்றைய அறிவையும் தமது நுண்ணுணர்வையும் கொண்டு தமிழிலக்கிய வரலாற்றை எட்டுக்காலப் பகுதிகளாக வகுத்துக் கூறினார்.

அன்றைய ஆய்வறிவுச் சூழ்நிலையில் இப்பாகுபாடு

வரலாற்று நோக்காலும், கால ஆராய்ச்சி உணர்ச்சியாலும் தூண்டப் பெற்றது என்பதில் ஐயமில்லை. "காலங்கடந்த காலத்தே கைலங்கிரியில்" நிகழ்ந்தனவான சம்பவங்களைக் கூறும் பௌராணிக மரபிலிருந்து விடுபட்டு இலக்கியத்தைப் பரிணாம நோக்கில் வரையறை செய்யும் ஆய்வுநெறி இப்பாகுபாட்டிற்கு ஆதாரமாயுள்ளது என்பதும் வெளிப்படை - தமிழாராய்ச்சி வளர்ச்சியில் தாமோதரம்பிள்ளைக்குத் தனிச்சிறப்பான ஓர் இடமுண்டென்பதை மறுப்பார் இல்லை.

ஆனால் **திராவிடப் பிரகாசிகை** ஆசிரியர் இந்நோக்கினையே வன்மையாய்க் கண்டிக்கிறார். தாமோதரம்பிள்ளையவர்களைப் பெயர்சொல்லிக் குறிப்பிடாது, "**வீரசோழியப் பதிப்புரைகாரர்**", "**சிற்சிலர்**" என்று குறித்துக் கொண்டு அவரது கருத்துக்களை மட்டுமன்றி தனிப்பட்ட வாழ்க்கையையும் இழிவுபடுத்தி எழுதினார். தமது உபாசனா குருவான சிவஞானமுனிவரின் கூற்று ஒன்றை மறுத்தெழுதிய தாமோதரம்பிள்ளையின் கூற்றைக் கண்டித்து ஓரிடத்திலே கீழ்வருமாறு எழுதுகிறார் சபாபதி நாவலர்:

> சிவஞானமுனிவர் அகத்தியராற் றமிழ் பூமியிலே உற்பத்தியாயினதெனக் கொண்டார்' என்று வீரசோழியப் பதிப்புரைகாரர் கூறியது அறிவு புறம்போய பிதற்றுரையேயாதல் சிறுமகார்க்கும் இனிது விளங்குமென்க.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழுலகில் வாழ்ந்த தலையாய ஆய்வறிவாளர்களில் ஒருவர் தாமோதரம்பிள்ளை. அவரது புதுமுயற்சிகளை வித்துவக் காழ்ப்பினால் மட்டும் கண்டனஞ் செய்யவில்லை சபாபதி நாவலர். தாமோதரம்பிள்ளை முன்னோக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையுடையவர். சபாபதி நாவலர் பின்னோக்குகின்றவர். ஆராய்ச்சியின்போது, திறனாய்வின்போது எத்துணை மதிப்புக்குரியவராயினும் அவரது கருத்துக்களும் முடிபுகளும் ஐயப்பாட்டுக்குரியனவே. அம்முறையிலே தாமோதரம்பிள்ளை சிவஞான முனிவர் போன்ற முற்பட்ட கல்வியாளரை விமர்சனத்துக்குட்படுத்தினார். எவரும் தவறு விடக்கூடிய இயல்புள்ளவர் என்றும் கருதும் ஆய்வறிவடிப்படையிலேயே தாமோதரம்பிள்ளை சிவஞான முனிவரையோ அல்லது திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் களையோ விமர்சித்தார். உதாரணமாக இலக்கண விளக்கப் பதிப்புரையிலே திருவாவடுதுறை ஆதீனத்தார் வேண்டுமென்றே இலக்கண விளக்கம் பெருமை இழக்கத்தக்க செயல்களைப் புரிந்தனரென்றும் அச்செயல்கள் களங்கமுடையன வென்றும் வாதிட்டார். இலக்கண விளக்கத்தின் குறைகளை எடுத்துக் காட்டும் நோக்கத்துடன் எழுதப்பட்டதாகக் கூறப்படும் இலக்கண விளக்கச் சூறாவளி "ஓர் அநியாய கண்டனம்" என்றும் அக் கண்டனநூலைச் சிவஞான முனிவர் குரோத உணர்ச்சியுடன் இயற்றினார் என்றும் வற்வுறுத்தினார். ஆனால் சபாபதி நாவலரோ ஆதீன கர்த்தர்களும், சிவஞான முனிவரும் தவறா நிலையுடையவர்கள் என்று நம்பியவர். சான்றுகளின் அடிப்படையில் ஒருவரையோ, ஒரு நூலையோ மதிப்பிடாமல் விதிதரு முறையில் அமைந்த வாதங்களில் அவர் ஈடுபட்டார். உதாரணமாகப் பின்வரும் கூற்றைக் காட்டலாம்.

> ஓதநீர் வேலியுலகின் கண்ணேவேத வழக்கொடு மாறு கொள்வார் மதங்களை மறுத்து இருவகைத் தமிழ் வழக்கையும் நிறுத்தியோம்புதல் சிவஞான யோகிகள் ஒழுகலாறாம். அப்பெற்றியுடைய முனிவர் வேத வழக்கொடு மாறுபடக் கூறமாட்டார்

இத்தகைய பல்வேறு கண்டனங்கள் தாமோதரம்பிள்ளையைக் கவலைக்காளாக்கியிருத்தல் வேண்டும். ஆயினும் அவற்றைப் பொருட்படுத்தாது கருமமே கண்ணாக உழைத்தார். கண்முன்னே வெகு வேகமாக அழிந்து கொண்டிருந்த ஏட்டுச் சுவடிகளை மீட்டெடுத்து அச்சிட்டு வெளிப்படுத்துவதே இலட்சியமாய்க் கொண்டியங்கிய பிள்ளையவர்கள், அநாவசியமான வாதப் பிரதிவாதங்களில் நேரத்தை விரயஞ் செய்ய விரும்பினாரல்லர். அதுமட்டுமன்று இக் கண்டனங்களின் தன்மையையும் அவர் இனங்கண்டு கொண்டமையால் மௌனமாயிருந்து பணி செய்வதே மேலான மார்க்கம் என்றுணர்ந்தார்.

இவ்விடத்திலே இன்னுமொன்று கூறுதல் பொருத்தமாயிருக்கும். கண்டன நூல்களைச் சபாபதி நாவலர் எழுதிய வேளையிலும் பண்டைய உரையாசிரியர் வழிவரும் நடையினையே கைக்கொண்டார். ஆறுமுகநாவலரும், அவரை நன்குணர்ந்த தாமோதரம்பிள்ளை, செந்திநாதையர் முதலியோரெல்லாம் ஓரளவு நூற்புலமையுடையோரும் விளங்கிக் கொள்ளத்தக்க எளிய நடையிலே எழுதினர். இவர்களின் ஏனைய நூல்களும் அவ்வண்ணமேயுள்ளன. உதாரணமாக, கலித்தொகைப் பதிப்புரையிலே ஏட்டுச்சுவடிகளின் நிலையைப் பற்றித் தாமோதரம்பிள்ளை மனமுருகி எழுதியவை முதல்தரமான படிப்போர் உள்ளத்தைத் தைக்கும் வசனநடைப் பகுதிகளாகத் தமிழிலக்கிய உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு வகையான இலக்கிய வரலாற்று முன்னோடி நூல் என்ற முக்கியத்துவம் திராவிடப் பிரகாசிகைக்கு உண்டெனினும் அந்நூலிற் கையாளப்பட்டுள்ள உரைநடை இடைக்காலத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாசிரியர்களின் நடையைப் பெரிதும் ஒத்திருப்பதால் பண்பு வேறுபாடின்றி வாய்ப்பாடு ரீதியில் அமைந்துள்ளது. "சபாபதிநாவலரவர்கள் உரைநடை சிவஞானமுனிவர் உரைநடை போலச் சிறந்து நிலவும் பெருமை வாய்ந்தது" எனக் கூறப்பட்டுள்ளதாயினும், நுனித்து நோக்கின் அக்கூற்று சிவஞான முனிவர் பெருமையையே பேசுவது புலனாகும். அகப்பண்பற்றுப் புறத்தோற்றம் மட்டுமே ஒத்த நகல்நடை சபாபதி நாவலருடையது என்று கருதவும் அக்கூற்று இடந்தருகிறது எனலாம். பெரும்பாலான மடாலயக் கல்வியாளரின் நடையைப் போன்று மாதிரியைப் பின்பற்றி அமைக்கப்பட்டதொன்றே சபாபதிநாவலரின் நடையுமாகும். ஆனால் சுயகருத்துக்களைக் கூறிய ஆறுமுகநாவலரது நடை தற்சார்புடைய தன்முதலான நடையாகும். அதனையே தாமோதம்பிள்ளை, அ. குமாரசுவாமிப் புலவர் முதலியோர் ஆதர்சமாய்க் கொண்டனர்.

மொத்தத்தில் சபாபதி நாவலரின் செய்யுள் நடையும் உரைநடையும் கடின நடையில் அமைந்தனவெனினும், அவரது உபந்நியாசங்கள் சில ஓரளவு எளிமையான நடையில் அமைந்திருப்பதும் குறிப்பிட வேண்டியதொன்றே. பேச்சுநடைக்கு எளிமை இன்றியமையாததென அவர் உணர்ந்தனர் போலும். எடுத்துக் காட்டாக "சமயம்" என்னும் பொருள் குறித்து அவர் செய்த 'மகோபந்நியாசம்' ஒன்றில் வரும் பகுதியைப் பார்க்கலாம்:

> இன்னும், இவ்வுலகத்திலே மாநுடர் ஒவ்வோர் தொடர்ச்சி பற்றிச் செய்து போதரும் அபிமானங்கள் சாதியபிமானம், தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானமெனப் பலவகைப்படும். அவற்றுள், சாதியபிமானத்தினை நோக்கத் தேசாபிமானம் உயர்ந்தது. தேசாபிமானத்தினை நோக்கப் பாஷாபிமானம் உயர்ந்தது; பாஷாபிமானத்தினை நோக்கச் சமயாபிமானம் உயர்ந்தது. சாதியபிமானம், தேசாபிமானம், பாஷாபிமானங்கள் உயிர்க்குப் புறம்பாயுள்ள ஒவ்வோர் பொருள்பற்றி உயிர்களிடத்துநிகழுங்குணங்களாம். சமயாபிமானம் உயிர்க்குயிராகிய கடவுள் சம்பந்தங் காரணமாக உயிர்களிடத்து விளங்கும் ஞானகுணமாம். ஆதலால் மனிதர் மற்றை அபிமானங்களினும் சமயாபிமானத்தினையே அதிக சிரத்தையோடும் பெரிது போற்றி ஒழுகுதல் வேண்டும்.

திராவிடப் பிரகாசிகை நூலிற் காணப்படும் நடையுடன் ஒப்பிடும்பொழுது மேற்காணும் பகுதி எளிமையானதே. எனினும் ஆறுமுகநாவலருடைய நேரடியான பேச்சு நடையின் சாயலை இதிற் காணவியலாது. (மேற்காணும் பகுதியில் "சாதியினும் சமயமே பெரிது" என்று ஆறுமுகநாவலர் கூறியதன் செல்வாக்கைக் காணலாம்.)

காலத்தின் தேவைகளுக்கேற்ப அரும்பிக் கொண்டிருந்த புதிய கல்வி முறைகளும், அணுகு முறைகளும், மேலைத்தேய அறிவியலின் விரும்பத்தக்க கூறுகளும்சபாபதி நாவலரைக் கவர்ந்ததாய்த் தெரியவில்லை. தாமே சொந்தத்தில் அச்சகம் நடத்தியபோதும், அச்சகத்தின் அன்றைய அடிப்படைப் பணியையும் பங்கையும் அறிவுபூர்வமாகவோ அன்றி உணர்வு பூர்வமாகவோ அவர் கிரகித்திருந்தார்கள் என்பதற்கில்லை. அதாவது ஆறுமுக நாவலர் அச்சகம் வாங்கியதும் நூல்களைப் பிழையின்றி வெளியிட்டதும் தன்னையொத்த கல்வியாளரின் அறிவு விருத்திக்காக மட்டுமன்று. "கற்றோரும் மற்றோருமாகிய யாவருக்கும் எளிதிலே பயன்படும் பொருட்டு" ஆறுமுகநாவலரவர்கள் கத்தியரூபமாகச் செய்து பல பழைய நூல்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமுறையில் வெளியிட்டார். நூல்கள் வாயிலாக, உரைநடை என்ற சாதனம் மூலமாக அவர் வெகுசனங்களுடன் தொடர்பு கொள்ள முற்பட்டார். தொடர்பு சாதனங்களில் ஒன்றாக அச்சகத்தையும் பிரசுரங்களையும் அவர் இனம் கண்டுகொண்டார். அதனாலேயே பொன்னுச்சாமித் தேவர் போன்றோர் பிரசாரவன்மை கைவந்த நாவலர் கையால் நூல்களை வெளிப்படுத்த விழைந்தனர். நூல்வெளியீட்டு முயற்சிகளால் தமிழ் வளரும் என்பதை நாவலர் நன்கறிந்திருந்தார். அத்தகைய வளர்ச்சியுடன் தமது பெயரையும் நிலைநிறுத்திக் கொள்ளவே தேவர் போன்றவர்கள் விரும்பினர். தேவர் பொருளுதவியுடன் (ரௌத்திரி வருஷம்) நாவலர் வெளியிட்ட திருக்கோவையாருரைப் பதிப்புரையிலே ஓரிடத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> திருக்கோவையாருரையைப் பதிப்பித்துப் பிரகடனஞ் செய்வதற்கு உதவி செய்தமகா-ா-ா ஸ்ரீ பொன்னுச்சாமித் தேவர்களுடைய பெருந்தகைமையை நான் பாராட்டுதல் போலவே அதனைக் கற்போர் யாவரும் மிக்க உவகையோடு பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன். முற்காலத்திலே பாண்டியர்களைப் போல இக்காலத்திலே இப் பிரபு அவர்கள் தமிழை வளர்ப்பார்கள் என்று உறுதியாகக் கருதுகிறேன்.

புலவரைப் புகழ்ந்து இச்சகம் செய்யாமல் அவர்களுக்குப் புத்திமதி கூறி வழி நடத்தக்கூடிய தன்னம்பிக்கையும் தகைமையும் ஆறுமுகநாவலருக் கிருந்ததை மேலேயுள்ள வாக்கியங்கள் தெளிவாக்குகின்றன. அவரவரை அவரவருக்குரிய இடத்தில் வைத்து நோக்க நாவலரவர்களால் முடிந்தது.

ஆனால் அவர் வழிவந்த எல்லாருக்கும் அது சாத்தியமாயிருக்கவில்லை. சபாபதி நாவலர் கல்வித் தகுதி இருந்தபோதும், ஆறுமுக நாவலரைப் போலச் சுதந்திரமாக இயங்கும் தகைமை இல்லாமையால் புரவலரைப் புகழ்ந்து வாழ வேண்டியவராயிருந்தார்.

இவற்றை எண்ணும்போது நல்லைநகர் நாவலர் ஞானமரபில் வந்த சபாபதி நாவலரின் முனைப்பான - ஆக்கபூர்வமான 'முற்போக்கான' அம்சங்களைச் கைக்கொள்ளக் காலவழுப்பட்ட போக்குகளையே பற்றிக் கொண்டிருந்தமை புலனாகும். வேறொரு விதத்தில் நாவலர் மருகர் கைலாசபிள்ளையும் இத்தகைய தொரு நிலையிலேயே இருந்தார் என்று கூறத் தோன்றுகிறது. ஆறுமுகநாவலர் நிறுவனங்களைக் கடந்து செயற்பட முயன்றார்; பெருமளவில் வெற்றியும் கண்டார். இவர்கள் நிறுவனங்களுக்குள் தம்மை நிறுத்திக் கொண்டனர்; நிலையியல் நோக்கில் நின்றனர். சபாபதி நாவலர் போன்றோருடன் ஒப்புநோக்கி ஆராய்கையிலேயே ஆறுமுகநாவலர், தாமோதரம்பிள்ளை, சு. சிவபாதசுந்தரம் ஆகியோரின் சிறப்பியல்புகளும் தனித்துவமும் முனைப்பாகத் தென்படுகின்றன.

சான்றாதாரங்கள்

1. ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு. மூன்றாம் பதிப்பு (சென்னை, 1954).
2. சபாபதி நாவலர், *திராவிடப்பிரகாசிகை*. பதிப்பாசிரியர் அ. சிவகுருநாதபிள்ளை (சென்னை, 1927).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சிவகாசி அருணாசலக் கவிராயர், ஆறுமுகநாவலர் சரித்திரம், மூன்றாம் பதிப்பு (யாழ்ப்பாணம், 1973).

4. சே. சோமசுந்தரம்பிள்ளை, சபாபதி நாவலர் சரித்திரச் சுருக்கம் (சென்னை , 1955).

5. மு. இராகவையங்கார், செந்தமிழ் வளர்த்த தேவர்கள். (திருச்சிராப்பள்ளி, 1948).

6. சபாபதி நாவலர், ஞானாமிர்தம் (சமயமும் நால்வர் பிரபாவமும்), மலேயா சைவசித்தாந்த சங்கத்து வெளியீடு (சென்னை 1926).

7. எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி (சென்னை, 1948).

8. .... காவியகாலம் (சென்னை, 1957),

9. .... தமிழ்ச் சுடர்மணிகள். நான்காம் பதிப்பு (சென்னை, 1968).

(**நாவலர் நூற்றாண்டு விழாமலர். 1979**)

இக்கட்டுரை 'அம்பலத்தான்' எனும் புனைப்பெயரில் பேராசிரியர் க.கைலாசபதி அவர்களால்எழுதப்பட்டது.

பாரதியும் நாவலரும்*

பாரதியை ஒரு பெருங் கவிஞனென்று ஏற்றுக் கொண்டு இன்று உலகம் முழுவதுமே பாராட்டிக் கொண்டிருக்கிறது. இந்த உலகப் பொதுவான கருத்துக்களுக்கு நடுவே, அவற்றின் பிரிக்கவியலாத பாகமாக இலங்கையில் வாழ்கின்ற மக்களினதும், குறிப்பாக இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களினதும் கருத்துக்கள் அவர்களின் தனித்துவமான கண்ணோட்டத்துடன் இருக்கிறது. அதைச் சிறிது பிரதிபலிக்கும் முகமாகவே இன்றைய என்னுடைய பேச்சு அமையும்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இக் கூட்டத்தை நடத்துவதும் நாவலர் சபையின் தலைவர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகிப்பதும் ஒருவகையில் என்னுடைய பாரதியும் நாவலரும் என்ற பேச்சின் தலைப்புக்கு பொருத்தமான பின்னணியாக இருப்பதையும் நான் காண்கிறேன்.

ஆறுமுக நாவலர் அவர்கள் 1822ம் ஆண்டு பிறந்து 1879ம் ஆண்டு மறைந்தார்கள். நாவலர் பிறந்து அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு 1882ல் பாரதியார் தமிழ் நாட்டிலே பிறந்தார். இந்த இருவரும் சமகாலத்தவர்கள் அல்ல. ஆனாலும் இவர்களை ஒரு மரபின் சரடு தொடுத்தே நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சமகால நிகழ்ச்சிகளைப் பார்க்கும் பொழுதும், ஈழத்தவரின் நவீன இலக்கியங்களுக்குப் பின்னணியாக நிற்கும் வரலாற்றை நோக்கும்பொழுதும், இந்த நாட்டின் சமூக சமய கலாசார எழுச்சிகளை மாற்றங்களை மனங்கொள்ளும் பொழுதும் நாவலரை அடிக்கடி குறிப்பது வழக்கமாக வந்து விட்டது. கடந்த ஒன்றரை நூற்றாண்டுத் தமிழரின் வரலாற்றை நாம் பார்க்க முற்படும் பொழுது ஏதோ ஒரு கட்டத்தில் தவிர்க்கவியலாதவாறு நாவலரின் பேச்சு வந்தே தீரும். இப்படி வழிவழியாக வரும் கலாசார சமூக பொருளாதார பின்புலத்திலேதான். இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட பாரதியின் தாக்கத்தை நாங்கள் பார்க்கிறோம். நமது இந்தச் சொத்தான பாரம்பரியக் கண்ணாடியூடாக அமைந்த இப்பார்வை, நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எமக்கு இயல்பாகிப் போயிருக்கிறது.

தலைவர் தமது உரையிலே, அமரகவி பாரதி இறந்த வேளை மயானத்துக்கு அவரை விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே எடுத்துச் சென்றார்களென்று கூறினார்கள். இது பற்றி பாண்டியன் அவர்களே தமது பாரதியாரும் சாதிகளும் என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாரதியாரின் இறுதி ஊர்வலத்தில் பத்துப் பன்னிரண்டு பேர்களே கலந்து கொண்டார்களென்றும், அவர்கள் யார் யார் என்றும் கூட அண்மைக்கால ஆய்வுகள் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன. இன்று தமிழகம் மாத்திரமல்ல, இலங்கை மாத்திரமல்ல, உலகமே பாரதியின் படைப்புகளை மதிப்பிட்டு வெவ்வேறு அளவுகளிலும் அவரது ஆற்றல்களுக்காக, சாதனைகளுக்காக போற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால், அவர் மறைந்தபொழுது தமிழகமென்ன, சென்னை நகரமே அவரை அறிந்திராத நிலைமைதான் இருந்தது. இடையேயுள்ள இந்த அறுபத்தியொரு ஆண்டுகளை

நோக்கினால் காலம்தான் எப்படி மாறிப் போய்விட்டதென்று நாம் அதிசயிக்கிறோம்.

நான் ஆரம்பத்திலே நாவலரைப் பற்றிக் குறிப்பிட்டேன். 1879ல் நாவலர் மறைந்தபொழுதும், ஏறக்குறைய இதே நிலைதான் நிலவியது என்று சொல்லலாம். சைவ சமயத்தை உள்ளன்போடு பேணி வளர்த்து வருகிறவர் மத்தியிலும், பழைய நூல்களைப் பேணிப் பாதுகாப்போர் மத்தியிலும்தான் நாவலர் போற்றப்பட்டு வந்தார்கள். இன்று நிலைமை மாறியிருக்கிறது. கடந்த பதினைந்து இருபது ஆண்டு காலமாகத்தான் அவரைச் சமயகுரவராக பூஜை நடத்தும் வழக்கம் அருக ஆரம்பித்துள்ளதோடு, அவர் அந்நியரின் சமய கலாசார ஊடுருவல்களை முற்றுமாக இல்லாவிட்டாலும் ஓரளவேனும் தடுத்த தேசிய வீரராக போற்றப்படவும் தொடங்கியிருக்கிறார்.

1921ல் மகாகவியைப் புரிந்து கொள்ளாதிருந்த தமிழகம் போலவே, 1879ம் ஆண்டு ஈழமும் நாவலரை அவரது முழுப் பரிமாணத்திலும் புரிந்து கொள்ளாமல் இருந்தது. ஆனால். நிலைமை இன்று மாறியிருக்கிறது. சமய குரவராயிருந்த நிலையிலிருந்து தேசிய வீரராக அவர் இனங்காணப்பட்டிருக்கிறார். இலங்கை அரசும் தேசியப் பெருவீரராக முத்திரை வெளியிட்டு அவ்வரைக் கௌரவப்படுத்தியிருக்கிறது. நாவலரை தமிழராக மட்டுமல்ல, சைவராக மட்டுமல்ல, இலங்கை செய்த தவப்பயனாக வந்த பெருமகனாகக் கணிக்கிற ஒரு வரலாற்றுப் போக்கையும் இன்று நாம் காண்கிறோம்.

பாரதிக்கு நேர்ந்ததும் இதுதான், காலம், எத்தகையதொரு வரலாற்று ரீதியான கணிப்பைச் செய்கிறதென்பது இங்கே நமக்குத் தெளிவாகின்றது. **மனோன்மணியம்** ஆசிரியர். 'காலமென்பது கறங்குபோல் சுழன்று மேலது கீழாய் கீழது மேலாய் மாற்றிடும் தோற்றம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என ஒரு முறை குறிப்பிட்டார்கள். பாரதியின் இலக்கிய உலகப் பிரவேசம் 1904ம் ஆண்டளவில் நிகழ்கிறதெனக் கொள்ளலாம். இந்தக் காலகட்டத்தில் பொதுவாக தமிழ் இலக்கிய இலக்கண உலகிலே தனிக்காட்டு ராஜாக்களாக பலர் அரசோச்சியிருக்கிறார்கள். ஆனால், பாரதி மறைந்த 1921ம் ஆண்டிலிருந்து இற்றைவரையுமுள்ள 61 ஆண்டுக் காலத்திலே ஈழ மக்களதும் தமிழக மக்களதும் மதிப்பீடு பெருமளவு மாறியிருக்கிறது. 'காலமென்பது கறங்குபோல் சுழன்று மேலது கீழாய் கீழது மேலாய் மாற்றிடும் தோற்றம்' என்று மனோன்மணியம் ஆசிரியர் சொன்ன வரலாற்றைத்தான் இங்கே நாம் காண்கிறோம். நாவலர் வாழ்ந்த, பாரதி வாழ்ந்த காலத்திலே மகாவித்வான்களாக தமிழ்க் குருகுலங்களிலேயும் பல்கலைக் கழகங்களிலேயும் அங்கீகரிக்கப்படக் கூடியவர்களாக இருந்தவர்களின் நூற்பட்டியலையும், இன்று அவற்றில் எத்தனை நூல்கள் காலத்தை வென்று நிற்கின்றன என்பதையும் பார்க்கின்ற பொழுது, இந்தக் காலமானது எவ்வாறு கணிப்பைச் செய்கிறது என்று எண்ணி அதிசயிக்க வைக்கிறது.

காலமென்பதை வெறுமனே உயிரற்ற ஒரு ஜடப்பொருளாக நான் கூறவில்லை. காலமென்பது, இந்தக் காலகட்டத்தில் வாழக் கூடிய மக்கள் தங்களுடைய தேவைகளுக்கும் கண்ணோட்டத்துக்கும் இயக்கத்துக்கும் ஏற்ப தமக்கு முன்பிருந்த காலகட்டங்களின் மக்களுடைய சாதனைகளை வெவ்வேறு வகையிலே கணிப்பிட்டு தமதாக்கிக் கொண்ட அறிவையே குறிப்பிடுகிறேன்.

பாரதி உயிரோடு வாழ்ந்த காலத்தில், அவர் மறைந்த பிறகு கூட, அவரை ஒரு 'வெள்ளைக்கவி' என்றும் 'கஞ்சாக் கவி' என்றும் கூறியவர்கள் இருந்தார்கள். இப்படி ஒரு சிலராலேனும் எள்ளிநகையாடப்பட்ட நிலைமையிலிருந்து உலக மகாகவியாக பரிமாற்றம்

பெறுவதென்றால், அது வெறும் ஊரும் பேருமற்ற காலம் செய்தது அல்ல. அவனது மறைவுக்கும் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் காலத்துக்கும் இடையேயுள்ள நீண்ட இடைவெளியில் தமிழ் மக்கள், உலக மக்கள் தமது வாழ்க்கைக்கு எவையெல்லாம் ஒளியூட்டுகின்றன என்ற அறிவை தம் அனுபவத்தின் வாயிலாகப் பெற்றுக் கொண்டதே காரணம்.

வரலாற்று ஆசிரியர்கள் சொல்வார்கள், ஒவ்வொரு தலைமுறை மனிதரும் தமக்கு முன்னே சென்ற காலத்தைப் பார்த்து தமக்கு வேண்டியவர்களை, தமது காலத்துக்கு உகந்தவர்களை வீரர்களாக ஆக்கிக் கொள்கிறார்களென்று. ஒரு புலவன் தன் காலத்தில் பெரும்புலவனாக மதிக்கப்படாமல் இருக்கலாம். வேறு சிலர் பெரும் புலவராகக் கணிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அடுத்த 50, 60 வருஷத்திலே காலம் தன் கணிப்பீட்டிலே அவ்வாறு பெரும் புலவராக இருந்தவரின் அடிச்சுவட்டைத் தூக்கியெறிந்துவிடுவது சாத்தியமாகலாம். அந்தக் காலத்திலே அறியப்படாதிருந்தவன் ஒரு பெரும் விருட்சமாக மகத்தான விஸ்வரூபத்தைப் பெறவும் முடியும். இந்த அடிப்படையை மனங்கொண்டுதான் நாவலர்போன்ற ஆரம்ப மறுமலர்ச்சியாளர்களையும், மறுமலர்ச்சியை மிகவேகமாக முன்தள்ளி அந்த மறுமலர்ச்சிக்கே பலவிதமான பரிணாமங்களைக் கொடுத்து மறுமலர்ச்சி என்றால் என்ன என்று முழு அர்த்தம் சொன்ன பாரதி போன்றவர்களையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மறுமலர்ச்சி அரும்புகிற காலத்திலே சிலபல குறைகளோடு அத் தலைவர்கள் இருந்திருக்கக் கூடும். இருந்தும், அடிப்படையில் ஒரு சக்தி - ஒரு காரணம் - இவர்களைப் பெருமக்களாக ஆக்கி வைத்திருக்கிறது, தன் காலத்தில் நாவலர் சிலபல குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் செய்த சாதனைகளுக்காகவும் ஆற்றிய பணிகளுக்காகவும் பாரதி தன் காலத்தில் சிலபல குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் தத்தம் அவர்களது பின் தலைமுறையினரால் போற்றப்படுதல் தகும்.

இதற்கு அவர்களின் சாதனைகள் மட்டுமல்ல, சாதனைகளைப் புரிந்த விதமும் முக்கியமானதாகும். முற்போக்கு என்ற சொல் வெறுமனே ஒரு எழுத்தாளர் சங்கத்துக்கு மட்டும் உரியதல்ல. அது காலப் பொதுவானது. அதுபோல் நாவலர், பாரதி இருவருக்கும் கூடப் பொதுவானது, எப்படியெனில், இருவருமே தம் முன்னாலிருந்த தனிமனித வாழ்க்கையையும், சமூகவாழ்க்கையையும், சமூக அரசியல் நிறுவனங்களின் நடைமுறைகளையும் நோக்கி கால உணர்வு பெற்றிருக்கிறார்கள். சிலபல நம்பிக்கைகளும், சிலபல வழக்காறுகளும் தம் காலத்துக்கு முந்தியே செத்துவிட்டாலும் மக்களின் பழக்கம் காரணமாக மேலும் தொடர்ந்து கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். அவர்களது அறிவும், உள்ளுணர்வும், புத்திசாதுர்யமும் அவர்களிடத்தில் ஒரு உள்ளொளியைத் தோற்றிவித்தது. சிலபல நிறுவனங்களும், சிலபல நம்பிக்கைகளும் நமது காலத்துக்கு உரியவை அல்லவெனத் தெளிந்ததோடு, இலைமறை காய்மறையாக இருக்கும் வேறுசில நிறுவனங்களும் இயக்கங்களும் கருத்துக்களும்தான் இனி வரும் காலத்திற்கு உரியனவாக இருக்கின்றன என்பதைக் கண்டு அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். அதனால்தான் அவர்கள் முற்போக்காளர்களாக வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லக் கூடியவர்களாகவும், தம் பின்வருவோருக்கு புதுவழி சமைத்துக் கொடுத்தவர்களாகவும் ஆகின்றார்கள். அதனால்தான் வரலாறு அவர்களுக்குப் புகழ்மாலை சூட்டி அவர்களை வரலாற்றுப் புருஷர்களாக்கியது.

நாவலர் வாழ்ந்த காலம் சமயம் வாழ்க்கையிலே மிகவும் முக்கியமான பாத்திரத்தை வகித்த காலமாகும். சமயத்தின் அடியாக சாதி ஆசாரங்களும், சாதிப் பாகுபாடுகளும் முக்கியம் பெற்றிருந்தன. அக்காலத்திலே, நாவலர் நிச்சயமாக சாதி ஆசாரத்தை, சாதிப் பாகுபாட்டை பேணியவராகத்தான் அந்தக் காலத்திலே இருந்திருக்கிறார். ஆனால், அவரது முற்போக்கான சிந்தனை எதுவெனில், குருகுலக் கல்விமுறை ஒழிந்து , ஒரு சில நூல்களை ஒரு சில இலக்கியங்களை கற்கும் நிலை மாறி ஆங்கிலக் கல்வியினூடான விஞ்ஞான பூகோள வரலாற்று வானியற் கல்வியே இனிவரும் காலத்துக்குத் தேவை என்பதை அன்றே உணர்ந்ததாகும். சாதி காரணமாக பழமையை மீறமுடியாதவராக இருந்த அதே வேளையில் கல்வி முறையிலும் , அதன் உள்ளடக்கத்திலும் கவனம் கொண்டு, அதற்கு வேண்டிய நூல்களை வெளியிட்டதிலும், அவற்றுக்குரிய புதிய உரைநடையை ஆக்குவித்ததிலும் நிச்சயமாக தனது காலத்துப் பெரும்புலவர் பலரினும் வேறுபட்டு நிற்கிறார்.

அப்படித்தான் நாம் நாவலரது முற்போக்கைப் பார்க்கிறோம். அவர் முற்போக்கானவர் என்று கூறும்போது, ஒரு குறிப்பிட்ட அரசியல் சித்தாந்தத்தையோ, ஒரு சமூக சித்தாந்தத்தையோ கடைப்பிடித்தவர் என்பதல்ல. தமது காலகட்டத்துக்கும், பின்வரும் காலகட்டத்துக்கும் மிக அவசியமான கருத்துக்களை முன்னெடுத்துச் சென்றதன் மூலமே முற்போக்கானவர் ஆகிறார்.

நாவலர் இறந்து பல காலத்துக்குப் பிறகு பிறந்த பாரதியார். நாவலர் மறைவுக்கும் தனது காலத்துக்கும் இடையிலே உலகிலும், ஆசியாவிலும், இந்தியாவிலும், தமிழகத்திலும் ஏற்பட்டிருந்த பல்வேறு மாற்றங்களை மனங்கொண்டவராய் கல்வி கலாசாரம் சமூகம் ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்கொண்டவராய் கல்வி கலாசாரம் சமூகம் ஆகிய துறைகளில் மட்டுமல்ல. சாதி, பெண் விடுதலை உட்பட்ட பல துறைகளிலும் நாவலர் சென்ற பாதையிலிருந்து பலமடங்கு முன்னேறிச் சென்றார்.

ஆனால், நாவலருடைய இந்தத் திறமையையும், பாரதியினுடைய திறமையையும் வெறுமனே தனித்தனியான ஆளுமையாகப் பார்க்க முடியாது. நாவலர் ஒரு நைட்டிக பிரமச்சாரியாக இருந்தார். தன்னுடைய சமயத்துக்கும் மொழிக்கும் சமூகத்திற்கும் இயன்ற சேவை செய்ய வேண்டும் என்பதற்காக விவாகத்தை முற்றாக நிராகரித்துவிட்டு இறுதி மூச்சுவரை இயன்ற பணியைச் செய்துவந்தார். அது மட்டுமல்ல , தான் கருதிய பணிகளுக்கு தன் சகாக்களும் தன் சமூகத்தவரும் தன் மொழியைப் பேசுகின்ற பிறரும் எவ்வாறு முட்டுக்கட்டையாக விளங்கினார்கள் என்பதையும் மிகுந்த கவலையோடு குறித்தும் வைத்திருக்கிறார்.

நாவலருக்குப் பெருமை தருவது அவர் பிரமச்சாரியாக இருந்ததும் அல்லும் பகலும் கடமையைக் கண்ணாகக் கொண்டிருந்ததும் மாத்திரமல்ல. பாரதியார் தன்னைப் பற்றிக் கூறும்பொழுது:

தேடிச் சோறு நிதம் தின்று
பல சின்னஞ் சிறுகதைகள் பேசி
மனம் வாடித் துன்பம்மிக உழன்று
நரை கூடிக் கிழப்பருவம் எய்தி
கொடும் கூற்றுக் கிரையெனப்பின் மாயும்
பல வேடிக்கை மனிதரைப் போல
நான் வீழ்வே னென்று நினைத்தாயோ?

என்று கேட்டார். அதுபோல் சின்னஞ்சிறு கதைகள் பேசி காலத்தைச் செலவழிக்காமல், சிறை செல்லத் தயாராகிக்

கொண்டு, இன்னொரு நாட்டுக்கு- புதுவைககு - அகதியாகச் சென்று, தன் கடைசி மூச்சுவரை தேச விடுதலைக்காகவும், சமூக முன்னேற்றத்துக்காகவும் வாழ்க்கையை அர்ப்பணித்ததால் மட்டுமல்ல, அவர் போற்றப்படுவது; அவை மிக முக்கியம்தான். ஆனாலும், எந்தத் துறையிலே தன் சமுதாயம் தேங்கிக் கிடக்கிறதோ அதை துரித கதியில் கடப்பதற்கான உந்து விசையைக் கொடுத்ததனாலேயே போற்றப்படுகிறார். அவரது பற்றுக்கோடு, தன்னம்பிக்கை, திடசித்தம் முதலிய காரணங்களாலும். தன் கால ஓட்டத்தைப் புரிந்து கொண்டதனாலேயுமே அவர் போற்றப்படுகிறார். நாவலர் போற்றப்படுவதன் காரணமும் அதுதான்.

19ம் நூற்றாண்டிலே மிகப் பெரிய புலவராகக் கருதப்பட்டவர் திருசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை. திருவாவடுதுறை ஆதீன வித்துவானாக இருந்தவர். நாவலர் நூலுக்கு முன்னுரை வழங்கியவர் 1847 / 48 ம் ஆண்டளவில் நாவலர் முதன்முறையாக சென்னைக்கு சென்றார். அங்கே அவரைப் பார்க்க நேர்ந்த ராமநாதபுரம் சமஸ்தானத்து பொன்னுசாமித் தேவர் தன்னுடைய சமஸ்தானத்துக்கு வரும்படி எவ்வளவோ மன்றாடிக் கேட்டுப் பார்த்தாராம். நாவலர் மறுத்துவிட்டார். ஆன்ம வீரத்துக்கு, சுதந்திரமான கருத்து வெளியீட்டுக்கு தடையாக அமைந்துவிடும் என்பதனாலேயே அழைப்பை மறுத்து, சமஸ்தானத்து ஆதரவிலிருந்த சத்திரமொன்றில் நாவலர் தங்கினார். பொன்னுசாமித் தேவர் தொடர்ந்தும் பலமுறை முயன்றார். பல்லக்கு அனுப்பியும் பார்த்தார். நாவலர் போகவில்லை, அதன்பின் பொன்னுசாமித் தேவராகவே வந்து சன்மானம் அளித்து, திருக்குறள் மூலத்தையும் பரிமேலழகர் உரையையும் வேறுசில நூல்களையும் அச்சிடும்படி கேட்டுக் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாவடுதுறை ஆதீனம், தர்மபுரம் ஆதீனம் ஆகியவற்றில் குளிருக்கு வெய்யில் காய்வது போலவே நாவலர் தொடர்பு வைத்துக் கொண்டாரேயல்லாமல், தம் காலத்து வேறு பல பெரும் புலவர்கள் போல சமஸ்தானங்களையோ மடங்களையோ முற்றிலும் சாராமல் நின்றபடியால்தான் வேண்டிய நேரங்களிலே அவற்றைக் கண்டிக்க முடிந்தது அவரால். இதுபோலவே தமது வீரசோழியம். சூடாமணி போன்ற நூல்களின் பதிப்புரையில் ஆதினங்களும் மடங்களும் கருணை கூர்ந்தால், இன்னும் சிறப்பாக இவ்வகையான நூல்களை வெளியிடலாமென்று ஆதீன கர்த்தர்களை விமர்சனம் செய்தார் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள். அவற்றைச் சாராமல் இருந்ததனாலேயே அவரால் அவ்வாறு செய்ய முடிந்தது. சாதி சமயம் போன்ற சில கோணங்களிலே நாவலரில் சிலபல குறைபாடுகள் இருந்தாலும், அன்றைய நிலையில் நிறுவனங்களுக்குத் தலைபணிய மறுத்து சமுதாயத்தோடு சார்ந்து நின்ற தன்மை மேலானதாகும்.

இந்த எதிர்ப்புக் குரலை நாங்கள் பாரதியிலே காண்கிறோம். ஆறில் ஒரு பங்கு என்ற நூலிலே அவர் கூறுவார். "இந்திய நாட்டிலே, தமிழ் நாட்டிலே இந்த மடங்களைச் சார்ந்தவர்கள் தம்முடைய தொந்தியின் பருமனைக் கொண்டு" தம்முடைய பக்தியையும் பெருமையையும் அளந்து கொள்கிறார்களென்று. திருவாவடுதுறை ஆதினம்தான் நாவலருக்கு "நாவலர்" என்ற பட்டத்தைக் கொடுத்தது. அந்த அளவுக்குச் சரி. அதற்கு மேல் அதனுடைய வித்துவானாகவோ, குட்டித்தம்பிரானாகவோ இருக்க நாவலர் விரும்பவில்லை. இந்த நோக்கோடுதான் எட்டயபுரத்திலே பாரதி சிற்றின்பக் கவிதைகள் பாடி எட்டயபுரம் மகாராஜாவை, மகிழ்விக்க விரும்பாத நிகழ்ச்சியையும் நாம் பார்க்க வேண்டும்.

இவ்வகையான தன்மதிப்பு அந்தக் காலத்திலே மருந்துக்கும் கிடைக்காத பொருளாக இருந்தது என்பதை நாம் மறத்தலாகாது.

ஆறுமுக நாவலரின் முன்மாதிரியைப் பின்பற்றி டேவிட் ஜோசப் என்ற ஒரு தமிழ்க் கிறித்துவர் 1893ம் ஆண்டிலே இலக்கணத் தெளிவு என்ற நூலை வசனத்திலே எழுதினார். நாவலர் காலத்தில் ஆதீன கர்த்தர்களும் கற்றறிந்தோரும் ஒருவரோடொருவர் கவிதையிலேயே கடிதம் எழுதிக் கொள்வார்கள். இந்தக் காலத்திலேதான், செய்யுள் சூத்திரமாக அதுவரை இருந்த இலக்கணத்தை வசனத்திலே இலக்கணச் சுருக்கம் எழுதி வழிகாட்டினார். அதற்கு முன்னரே விசாகப் பெருமாள் ஐயரும் வேறு சிலரும் கூட எழுதியிருந்தாலும், இலக்கணச் சுருக்கத்தை நிறுத்தக் குறிகளையெல்லாம் இட்டு சிறு பிள்ளைகளும் விளங்கக் கூடிய தமிழில் எழுதினார் நாவலர் . இலக்கணத் தெளிவு முன்னுரையிலே டேவிட் ஜோசப் சொல்வார். "அந்நியர்களை -வெள்ளையர்களை- அண்டி வாழாது ராமலிங்க சுவாமிகள், ஆறுமுக நாவலர் போன்றோர் சிங்கங்கள்போல் வாழ்ந்தார்களென்று", இது ஒரு முக்கியமான அம்சம் இந்த வீறுதான் பாரதியிலும் தொடர்ந்தது.

பிறக்கும் மனிதன் ஒவ்வொருவனுக்கும் இரண்டு பாதைகள் தெரியும். ஒரு பாதை பழக்க தோஷமான சகவாசமான பாதை. இதை ஆங்கிலத்தில் Path of least resistance என்பார்கள். இதை அண்டி வாழ்ந்தால் வாழ்க்கை கஷ்டமில்லை. ஏன் கஷ்டப்படவேண்டும், ஏன் பாரத்தைச் சுமக்க வேண்டும். என எண்ணுவதுதான் உலக இயல்பு. ஆனால், காலமுன்னோடிகள் இதற்கு அஞ்சவில்லை. தாம் கூறவேண்டியதைக் கூறியே தீர்த்தார்கள். அவர்களிடத்தில் ஆன்மசக்தி இருந்தது. யாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம், என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்ம வீறு இருந்தது. இந்த வீறுதான் பல குறைகள் மத்தியிலும் நாவலரை வீரபுருஷராக பின்வருவோர்க்கு வழிகாட்டியாக விளங்கச் செய்தது.

இந்தப் பின்னணியைத்தான் ஆரம்பத்தில் நான் கூறியது பாரதியைப் பற்றிப் பேசும்பொழுது எங்களுக்கு ஒரு பார்வை இருக்கிறது என்று, நாவலர் = பாரதி என்கிற சொச்சைத்தனமான பார்வையில்லை இது. மரபு சார்ந்த , வழி சார்ந்த பார்வை. நான் இந்த மேடையில் நிற்கும் போது விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன, அந்த ஒரு கண்ணாடியினூடாகத்தான் - கலாசார பாரம்பரியத்தி னூடாகத்தான்- பாரதியைப் பார்ப்பேன். அவ்வாறு பார்க்கும் போது எனக்கு பாரதி இன்னும் துலக்கமாகத் தெரிகிறார்.

யாழ்ப்பாணத்திலே அரசாங்க அதிபராக இருந்த டுவைன்னம் துரையுடைய ஆட்சியைக் கண்டித்து கருத்துத் தெரிவிக்கிறபோதுதான் வெகுஜனங்கள் என்ற சொல்லை முதன்முதலில் பாவிக்கிறார் நாவலர். இலங்கைநேசன் என்ற பத்திரிகையிலே, இதுவரையில் 'சனம்' இருந்தது. 'வெகு' என்ற சொல்லும் இருந்தது. ஆனால் 'வெகுசனம்' என்ற Mass Populace என்ற ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான சொல் இல்லை. அன்றிலிருந்துதான் தமிழ்ச்சொற் களஞ்சியத்தில் புதிய ஒரு சொல் சேர்ந்தது. ஆற்றலுள்ள ஒரு மனிதன் செயலில் ஈடுபடும்பொழுது செயலுக்கு வடிவம் கொடுக்கும் பொழுதும்- கருத்துப் படிவமாகச் சொற்கள் வந்து அமைகின்றன. வெகுசனம் என்ற அந்தச் சொல் பாமரரையோ விவசாயிகளையோ பாட்டாளிகளையோ அன்று குறிக்க வில்லைத்தான். கற்றார், குமாஸ்தாக்கள். சட்டத்தரணிகள், விதானைமார்கள், வியாபாரிகளாகவே அவர்கள் இருந்தார்கள். ஆனால், நிச்சயமாக அதற்கு முன்னிருந்த நிலப்பிரபுக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நாவலர் கூறிய அந்த வெகுசனம் என்ற

தமிழ்ச்சொல் நம் மொழியிலே கருத்துப்படிவத்தைப் பொறுத்தவரை நிச்சயமாக ஒரு Progress -ஒரு development தான்.

இந்த மரபு ஊடாகப் பார்க்கும்போதுதான் மகாகவி பாரதியார் பொதுசனம் விரும்பும் மெட்டு, பொது சனங்களும் புரிந்து கொள்கிற பாஷை, பொதுசனம் வழங்குகிற மொழியில் எழுதவேண்டும் என்று சொன்னதன் அர்த்தம் - வெகுசனம் என்ற சொல் ஒரு அறுபதாண்டுக் காலத்தில் பெற்ற வளர்ச்சி - தெரிகிறது: வரலாற்றுப் புருஷர்களின் விருப்பம் தெரிகிறது.

வரலாற்றுப் புருஷரென்பது தன் வழியே அளந்து கொட்டிப் பட்டம் கொடுப்பது அல்ல; பெயர் சூட்டுவது அல்ல. வரலாற்றின் கால ஓட்டத்தோடு தனிமனித ஆளுமை. தமது ஈடுபாடு, தமது ஆற்றல்களைச் சங்கமிக்கச் செய்து புதிய மனிதர்களாக பரிமளிக்கிறார்கள், சிலவேளை தாம் நினைத்திராத, செல்லாத பாதைகளிலும் செல்லவேண்டி நேரிட்டு விடுகிறது இவர்களுக்கு.

பாரதியின் சிறந்த பாடல்களில் ஒன்று தமிழ்ச் சாதி என்ற பாடல், துரதிர்ஷ்டவசமாக அந்தப் பாடல் முற்றுப் பெறவில்லை. பாரதியின் நூல்களைப் பதிப்பித்தவர்கள் அதனுடைய தலையங்கத்தைக் கூட சரியாகப் போட்டதாகத் தெரியவில்லை. உண்மையில் அவர் எழுதிய குறிப்பிலே, அவர் எழுதிய பாடல் தலைப்பு தமிழச் சாதி அல்ல; இருதலைக் கொள்ளியினிடையே என்ற தலைப்புத்தான். இங்காலே ஒருபுறம் அங்காலே ஒருபுறம் 'Dilimena' என்று சொல்வார்கள் அதை. இந்த 'இருதலைக் கொள்ளியினிடையே' என்ற பாடலிலே சொல்லுவார்.

விதியே விதியே தமிழச் சாதியை
என் செயக் கருதி இருக்கிறாயடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அதிலே இரண்டு பார்வை. மேல்நாட்டிலிருந்து வந்திருக்கக் கூடிய கருத்துக்களும், ஆங்கிலேயருடைய நடை உடை பாவனைகளும், த்துவங்களும் இந்தியாவை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லும் ; அவை தான் முன்னேற்றத்துக்கும் விமோசனத்துக்கும் ஏற்ற வழி என்று ஒரு சாரார், மறுசாரார் ஆங்கில வாடை என்பதே படக்கூடாது. இவையெல்லாம் அனாச்சாரம், அநாதிகாலம் தொட்டு இருந்து வருகிற வேத வாழ்வைக் கைப்பிடிப்போம் என்பதை பேச்சில் மட்டுமல்ல, செய்கையிலும் காட்டுகிறவர்கள். புழமையை மாத்திரம் பற்றிக் கொண்டால் போதும், அது நமக்கு ஒரு (identity) அடையாளத்தை தரும் என்கிறார்கள். ஒருபுறம் கண்மூடித்தனமான நவநாகரிக மோகம். இந்த இரண்டு பேருமே தமிழுக்கு தமிழ் மக்களுக்கு, தமிழ்ச் சமுதாயத்திற்கு ஊறு செய்கிறார்கள். இதை உணர்ந்த பாரதி தன் காலத்துக் கேற்ற கருத்துக்களை இரண்டிலிருந்துமே பெற்றுக் கொண்டார். பாரதி இத்தாலி தேசிய வீரரான மாஜினியையும் பாடினார். சோவியத் ரஷ்யாவின் புரட்சி கருத்துக்களையும் எடுத்துக் கொண்டார். ஜப்பானில் அன்று வளர்ந்துகொண்டிருந்த தேசிய முதலாளித்துவத்தின் கருத்தையும் பெற்றுக் கொண்டார். அவர் கூறுவார். 'தூரகிழக்கிற்குப் போ ஜப்பானுக்கு போ , ஜப்பானுடைய உழைப்புத் திறமையைப் பெற்றுக் கொள்' என்று ஒருபுறம் தனது சொந்த நாடு , சொந்த பாரம்பரியம், சொந்த பற்றுக்கோடு என்ற எண்ணம் இருந்தது. மறுபுறம் திசையெங்கிலும் இருந்து வந்த புதுமைக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் இருந்தது. இதுவே பாரதியை பெரும் காற்றடிக்கும் போதும் காலை வாரிவிடாமல் உறுதியாக நிற்க வைத்தது.

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

என்பது திருக்குறள் - குழந்தைகள் பாடமாக்குகிற வாய்ப்பாடாகவே நமக்குத் தெரிந்திருக்கிற குறள். ஆனால் பாரதி, நாவலர் போன்றவர்கள் அத்தகைய குறளுக்கு வாழ்க்கையினூடாக - வாழ்முறையினூடாக - அர்த்தம் கொடுத்தார்கள். ஒரு நல்ல உதாரணம் கூறலாம் : பாரதியார் காலத்திலே வாழ்ந்த, பாரதியாரால் தனது குருவாக, தெய்வமாகப் போற்றப்பட்டவர்களில் ஒருவர் பால கங்காதர திலகர், கந்தபுராணத்தைப் பற்றி யாரோ குறைவாகக் கூறியபொழுது அவரை வெட்ட அரிவாளை எடுத்துக் கொண்டு ஓடினாராம் நாவலர். ஏனென்றால் , அது அவருக்கு தெய்வீகமானது, புனிதமானது , அதேபோல் தன்னுடைய முன்னிலையிலே யாராவது திலகரைக் குறைகூறிவிட்டால் மகாகோபம் வந்துவிடுமாம் பாரதியாருக்கு

தனது ஏகாதிபத்திய குடியேற்ற நாட்டுத் தேவைகளுக்காக இந்தியாவில் சில வளர்ச்சி நிலைகளை உண்டாக்கியது ஆங்கில அரசு. அதில் முக்கியமானது கல்வி அபிவிருத்தி . தன்னுடைய ஊழியர்களாகச் சேவை செய்வதற்கு கல்விகற்ற ஆண்களையும் பெண்களையும் தயாராக்கியது அது. பெண் ஊழியர்களும் இருந்தால் தான் வளர்ந்துவரும் குமாஸ்தா , சிறு ஊழியர் தேவையைச் சமாளிக்கலாம் என்ற நிலையில் பெண் கல்வியையும் அது ஊக்குவித்தது. அது மட்டுமல்ல , மிகவும் கொடிய நிலமானிய முறையின் கேடுகெட்ட மிச்சசொச்சமான பாலிய விவாகத்தைத் தடுப்பதற்காக அப்போது ஆங்கில கவர்னர் ஜெனரல் ஒரு சட்டமும் கொண்டுவர முற்பட்டார். எவ்வளவோ முற்போக்காக இருந்தபோதிலும் அந்தச் சட்டத்தை பால கங்காதர திலகர் எதிர்த்தார். ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் கொண்டு வந்த சட்டமாக இருந்தாலும் பரவாயில்லை. யாந்திரிகமாக அதை எதிர்க்கத் தேவையில்லை என்றார் பாரதியார். அங்கேதான் 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு ' என்பதற்கு உண்மையான அர்த்தம் தெரிகிறது. அங்குதான் தமிழ் மகனின் குரலை நாம் கேட்கிறோம். அங்குதான் தமிழ்ப் பண்பாடு பாரதி மூலமாக நமக்கு வந்து சேர்கிறது.

இவைகளை நோக்கும் பொழுது நாவலரும் பாரதியும் மரபு பற்றி நின்று புதுமைகளை வரவேற்று தத்தம் காலத்து மகாபுருஷர்களாக எவ்வாறு விளங்கினாாகள் என்பது நன்கு தெரியவரும். இதற்கு காலத்தை நன்குணர்ந்து கொண்ட தீர்க்கதரிசனமும், விடாப்பிடியான முயற்சியும் அவர்களுக்குக் கைகொடுத்தன என்பதை யார்தான் மறுக்க முடியும்?

*பாரதியும் நாவலரும் பற்றிய குறிப்பு: பாரதி நூற்றாண்டினையொட்டி இலங்கையில் நடந்த கூட்டமொன்றில் பேராசிரியர் க. கைலாசபதி ஆற்றிய உரையொன்றிலிருந்து திருமதி. சர்வமங்களம் கைலாசபதியின் கைப்பட எழுதப்பட்ட உரைப் பிரதி, முனைவர் கோ.கேசவன் மூலமாக சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன் 'இலக்கு' வில் பிரசுரிப்பதற்காக கையில் கிடைத்தது.

ஆனால் பிரதி அப்படியே பேச்சினை படியெடுத்திருந்ததனால் போலும், அதைக் கட்டுரையாக வெளியிடுவதில் பல சிரமங்களை நான் முகங்கொள்ள வேண்டி நேர்ந்தது. ஆரம்பத்தில் இதைக் கைலாசபதி நினைவு மலரில் வெளியிடவே யோசித்திருந்தேன். ஆனால், கட்டுரையை செம்மைப்படுத்த போதுமான அவகாசம் இல்லாததால் அது சாத்தியப்படவில்லை. இதற்கு கைலாசபதியவர்களின் கட்டுரை போன்ற தோற்றத்தைக் கொடுக்க வெகுவாகச் சிரமப்பட்டேன். அவரது எழுத்துக்களிலுள்ள பரிச்சயம் காரணமாக அதில் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறேன் என்பதே என் நம்பிக்கை. குறைந்தபட்சம் அமரர் கைலாசபதியினால் எழுதி வாசிக்கப்பட்ட உரைபோன்றாவது இது தோற்றம் தரும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

திருமதி கைலாசபதியவர்களின் 40 பக்கப் பிரதியிலிருந்து 25 பக்க அளவிலான இப்போதைய பிரதியைத் தயாரித்திருப்பினும் பேராசிரியரின் கருத்துக்கள் விடுபட்டுப் போகாத அவதானம் காட்டப்பட்டிருக்கிறது என்பதைத் துணிந்து சொல்வேன். மேலும், சர்வமங்களம் கைலாசபதியவர்களின் பிரதி, பூரணமும் பெற்றிருக்கவில்லை. அதனால் பேராசிரியர் கைலாசபதியின் அதே உரையிலுள்ள கருத்தினை ஒழுங்குபடுத்தியே இதன் முடிவுரையையும் அமைத்துள்ளேன். இது போன்ற ஒரு பிரசுரத்தின் கதையை முழுமையும் தெரிவிக்க வேண்டும் என்கிற தார்மீக பொறுப்பு கருதியே இவ்வளவும் இங்கு சொல்லப்பட்டன

—தேவகாந்தன்—

(இலக்கு.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பற்றி கைலாசபதி

பேராசிரியர் க. கைலாசபதி

பேராசிரியர் கைலாசபதி அவர்கள் பல்வேறு காலக்கட்டங்களில் நாவலர் பற்றி எழுதிய பின்வரும் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும்: நாவலர் வழி வரும் இலக்கிய மரபு, ஆறுமுக நாவலர், ஆறுமுக நாவலரும் சபாபதி நாவலரும், நாவலர் அடிச்சுவட்டில் தேசியம், நாவலர் வகுத்த தனிப்பாதை, நாவலர் இலக்கிய நோக்கும் பணியும், நாவலரும் இந்து மத மறுமலர்ச்சியும், நூற்றாண்டு நிறைவு மலர்: ஒரு முன்னோட்டம், நாவலரும் பாரதியும்.

க. கைலாசபதி (1933-1982) யாழ் இந்துக்கல்லூரியிலும் கொழும்பு றோயல் கல்லூரியிலும் தனது ஆரம்ப கல்வியைப் பெற்ற இவர் இளமாணிப் பட்டத்தினையும் முதுமாணிப்பட்டத்தினையும் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும்(பேராதனை), கலாநிதிப் பட்டத்தினை புகழ் பெற்ற மாக்சிய அறிஞரான ஜோர்ஜ் தோம்சனின் கீழ் இங்கிலாந்திலுள்ள போர்மிங்ஹாம் பல்கலைக்கழத்திலும் பெற்றவர்.

தினகரன் தேசிய பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றியபின் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளராக பணியாற்றினார். 1974இல் புதிதாக உருவான யாழ்ப்பாண வளாகத்தின் தாபகத் தலைவராக நியமிக்கப்பட்டார். யாழ்ப் பல்கலைக்கழகத்தின் ஆரம்ப கட்ட வளர்ச்சிக்கு முக்கிய காரண கர்த்தாவாக விளங்கிய இவர் அதே பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை பேராசிரியராக தமது மறைவு வரை பணியாற்றினார்.

வெளிநாட்டிலுள்ள பல பல்கலைக்கழகங்களுக்கு முதுநிலை ஆய்வாளராகவும் பேர்கிளியிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் (1977-78) வருகைப் பேராசிரியராகவும் சென்றதுடன் நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் 15க்கு மேற்பட்ட ஆய்வு நூல்களையும் வெளியிட்டவராவார்.

ISBN 955-9429-76-0
9 789559 429760
குமரன் புத்தக இல்லம்
விலை: இந்திய விலை 45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org